விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 சித்திரை 17 செவ்வாய்க்கிழமை (30.04.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 132

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# உணர்வுகள் பொங்கிய உரிமைப் போராட்டம்!

## தெல்லிப்பழையில் நேற்று முன்னெடுப்பு




(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரின் காணி சுவீகரிப்பிற்கு எதிராக தெல்லிப்பழை பிரதேச செயலகம் முன்பாக நேற்றுக்காலை 7 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை இடம்பெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட தமிழ் அரசியல் தலைவர்களும் பொதுமக்களும் உயர் பாதுகாப்பு வலயத்தை நோக்கி செலல முற்பட்டதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டதோடு கலகமடக்கும் பொலிஸாரும் வரவழைக்கப்பட்டு தடுக்கப்பட்டனர். (20ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணீர் சொரிய கதறிய பெண்

(யாழ்ப்பாணம்)

தயவு செய்து எங்கள் நிலங்களில் எங்களை வாழவிடுங்கள் இல்லையென்றால் 'நஞ்சைத் தாருங்கள். தின்று போட்டு நாங்கள் சாகிறோம்' அதற்குப் பிறகு எங்கட காணிகளை நீங்களே வைத்திருங்கோ என கண்ணீர் விட்டு கதறி அழுதபடி வலி.வடக்கில் நேற்று இடம்பெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தின் போது வயோதிபத்தாய் ஒருவர் கோரிக்கை விடுத்தார்.

இதனைத்தவிர மீள்குடியேற அனுமதியுங்கள் இல்லையேல் வெள்ளைக் கொடியுடன் குடியேறுவோம் எனவும் மக்கள் எச்சரித்தனர்.

வலிகாமம் பகுதியில் இராணுவத் தேவைக்காக காணிகள் சுவீகரிக்கப்படுவதை எதிர்த்து நேற்று தெல்லிப்பழை பிரதேச செயலகம் முன்பாக இடம் பெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தின் போதே மேற்கண்டவாறு வயோதிபத்தாய் ஒருவர் வேண்டுகோள் விடுத்திருந்தார்.



அந்த வயோதிபத் தாயின் குமுறல் இந்த அரசாங்கத்திற்கு தெரியுமா நாங்கள் படும்பாடு? பிள்ளைகளோடு றோட்டிலிருந்து எழும்புகின்றோம். தயவு செய்து எங்களுடைய காணிகளை எங்களிடமே தந்து விடுங்கள் இல்லை என்றால் நஞ்சைத் தந்து எங்களைக் கொன்று விடுங்கள் என்றார். (செ-6)

## ஈழத்திற்கான அடுத்த போர்; தமிழக மாணவர்கள் அறிவிப்பு

(சென்னை)

இலங்கை இனப்படுகொலை தொடர்பில் இலங்கை ஜனாதிபதி மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தும் தமிழக மாணவர்கள் போராட்டம் மீண்டும் தொடங்குகிறது.

தமிழகத்தில் ஈழத்தமிழர் பிரச்சினையை ஒருபுதிய பரிமாணத்திற்கு கொண்டு சேர்த்தவர்கள் மாணவர்கள். அரசியல் கட்சிகளின் எந்தவொரு ஆதரவுமின்றி தனித்துப் போராடி வருகின்றனர்.

இவர்களது போராட்டத்தின் அடுத்த கட்டமாக தற்போது தமிழகத்தின் 32 மாவட்டங்களிலும் எட்டு கோடி தமிழர்களை சந்திக்கும் வகையில் 5 பகுதிகளிலிருந்து மாணவர்கள் சுடரினை (19ஆம் பக்கம் பார்க்க)

## ரணிலுடனான சந்திப்பில் பிரயோசனம் கிடையாது

### மன்னார் பிரஜைகள் குழு தலைவர் ஆதங்கம்

(மன்னார்)

நாட்டின் எதிர்க்கட்சி தலைவருடனான சந்திப்பு மன்னார் மக்களுக்கு எந்தவிதமான பிரயோசனமும் இல்லாத ஒரு சந்திப்பாக அமைந்ததாக மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவரான அருட் தந்தை ஈ.செபமாலை அவர்கள் தெரிவித்துள்ளார்.

மன்னார் ஆயரின் முன்பாக மன்னார் (20ஆம் பக்கம் பார்க்க)

## 'கைது செய்வோம்' எச்சரித்த பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

'ஆர்ப்பாட்ட பேரணியாகச் சென்றால் போராட்டக்காரர்களை கைது செய்வோம்' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் பொலிஸார் எச்சரிக்கை செய்துள்ளனர். (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இராணுவ-கனரக வாகன விபத்து

## ஐவர் காயம்

(குருமன்காடு)

வவுனியா, பூனாவ பகுதியில் நேற்று பி.ப. 2 மணிக்கு இடம்பெற்ற வாகன விபத்தில் இராணுவ வீரர்கள் உட்பட ஐவர் படு



காயமடைந்து வவுனியா பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கண்டி வீதியில் பயணித்துக் கொண்டிருந்த இராணுவ வாகனத்துடன் கனரக் வாகனம் ஒன்று மோதியதனால் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக 4 இராணுவ வீரர்களும் டிப்பர் வாகன சாரதியும் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களுக்கு வைத்தியசாலையின் விபத்துக்கள் பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக வைத்தியசாலை தகவல் தெரிவித்துள்ளன. (செ-250)


யாழ்ப்பாணம் செல்லா சினிமா



சரத்குமார், சேரன், சூர்யா, பிரசன்னா, பிரகாஸ் ராஜ் மற்றும் பிரபலமான நட்சத்திரங்கள் நடித்த

சென்னையில் ஒரு நாள்

10.30, 2.30, 6.30, 9.30

May - 01 முதல் எதிர்நீச்சல்



## குறைந்த கட்டணத்தில் பொதிகள் சேவை

3 நாள்களில் உங்கள் கைகளில் பொதிகள் கிடைக்கக் கூடியவாறு துரித சேவை ...

| | |
|---|---|
| கட்டணங்கள் (1 Kg) இற்கு | |
| லண்டன் | 1450 /- |
| கனடா | 2550 /- |
| விசேட கட்டணங்கள் (5 Kg) இற்கு | |
| சுவிஸ் | 7800 /- |
| அவுஸ்திரேலியா | 5500 /- |
| ஜேர்மனி | 5500 /- |



சாதாரண சேவை 1 Kg இற்கு கனடா 700 /- Uk 600 /-
(பொதிகள் நிறை 5 Kg இற்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.)

குறிப்பு : கருவாடு, மருந்து வகை, எண்ணை வகைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

குறிப்பு : வெளிநாடுகளிலிருந்து வருபவர்களுக்கும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வோருக்கும் வெள்ளவத்தையில் மூன்று அறைகள் இணைந்த குளியலறை A/c, Non A/c அறைகள் நாள், கிழமை, மாத வாடகைக்கு மிகவும் குறைந்த கட்டணத்தில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு : Rainbow Travels 30/2, 3ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். T.P. : 021 221 9596, 077 87 10 732


# திறந்த போட்டிப் பரீட்சை

இலங்கை ஆசிரியர் சேவையின் வகுப்பு 3-I மற்றும் சாரதி சேவையின் வகுப்பு III ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2013 ற்கான பரீட்சைகள் மே மாதம் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் நடத்தப்படவுள்ளதாக வட மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் 021 2219981 தொலைபேசி இலக்கத்தின் ஊடாகத் தொடர்பு கொள்ளு மாறும் அவர் அறிவித்துள்ளார். (செ)


வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு
தொ.பே. : 021 321 0815,
021 567 1540
E-mail : valampurii@yahoo.com,
valampurijaffna@gmail.com


## வாழும் கலைப் பயிற்சி

வாழும் கலைப் பயிற்சி பாகம் -I (பிராணாயாமம், யோகாசனம், சுதர்சனக் கிரியா)

இன்று மாலை 5மணிக்கு நல்லூர் வடக்கு வீதி, மகேஸ்வரன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எனவே ஆர்வமுள்ளவர்கள் பங்கு கொள்ளலாம் என யாழ்ப்பாணம் வாழும் கலை அமைப்பு தெரிவித்துள்ளது. (செ)


## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட பிறிமா (Prima), கிறீன் வலி (Green Vally) & சந்தலங்கா(Sandalanka) 'A' தரமான புறொயிலர் கோழிக் குஞ்சுகள் நியாயமான விலையில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். தொகையான கொள்வனவாளர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும். முன் பதிவு செய்யவும்.



நல்லூர் பாம் சென்ரர் 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்,யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 021 2226944
சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை.
தொ.பே. இல. 077 8996085

(2482)



## CANADA வில் குடும்பத்துடன் நிரந்தரமாக வசிப்பதற்குரிய VISA ஒழுங்குகள்

### தகைமைகள்

University Degrees :- PHD, MA, MSC, BA, BSC
ONE YEAR WORK EXPERDENCE
G.C.E. O/L, G.C.E. A/L :- Condition Apply
Newzealand :- G.C.E O/L உடன் உயர்கல்வி மூன்று வருட முடிவில் நிரந்தர வதிவிட உரிமையை பெற்றுக்கொள்ளலாம்.



குறிப்பு : வெளிநாடுகளிலிருந்து வருபவர்களுக்கும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வோருக்கும் வெள்ளவத்தையில் மூன்று அறைகள் இணைந்த குளியலறை A/C, Non A/C அறைகள் நாள், கிழமை, மாத வாடகைக்கு மிகவும் குறைந்த கட்டணத்தில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளிற்கு :-
Rainbow Travels
30/2, 3ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 021 221 9596, 077 89 80 652

C-3043



## அறைகள் வாடகைக்கு

யாழ். நகரின் சுற்றுப்புறத்தில் தங்கி தொழில் புரியும் உத்தியோகத்தர்கள், மாணவர்களுக்கு சாப்பாட்டு வசதியுடன் சுவய அறைகள் வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு:-
071 9511411
077 0338375

(2495)



## விற்பனைக்கு உண்டு

நெல்லியடி, கரவெட்டி வடக்கு கொடிகாமம் வீதிக்கு அருகாமையில் இருவழிப் பாதை கொண்ட இரு காணித் துண்டுகள் 1 3/4, 4 பரப்பு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-
077 0267711

(சி 3138)




# சேவைநலன் பாராட்டு



## திருமதி.திலகவதிஅருளானந்தம்

Diploma in Music University of Jaffna
Education Diploma (NIE)

29 வருட ஆசிரிய சேவையை பூர்த்தி செய்து 28.04.2013 உடன் ஓய்வுபெறும் எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியர் திருமதி.திலகவதி அருளானந்தம் அவர்களின் சேவையைப் பாராட்டுவதோடு அவரின் ஓய்வுக்காலம் சிறப்புற அமைய பிரார்த்திக்கின்றோம்.

**சேவை விபரம்**

| | | |
|---|---|---|
| 1. மு/வித்தியானந்தக் கல்லூரி | 1984.08.05 | - 1992.01.10 |
| 2. மு/கரிப்பட்டமுறிப்புஅ.த.க | 1992.01.11 | - 1993.12.31 |
| 3. மு/கலைமகள்வித்தியாலயம் | 1994.01.01 | - 1994.01.28 |
| 4. மு/வற்றாப்பளை ம.வி | 1994.02.01 | - 1999.12.39 |
| 5. மு/வித்தியானந்தக் கல்லூரி | 2000.01.03 | - 2008.01.22 |
| 6. மு/கலைமகள் வித்தியாலயம் | 2008.01.23 | - 2013.04.28 |


பாடசாலைச் சமூகம்
மு/கலைமகள் வித்தியாலயம், முள்ளியவளை.

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி கூறலும்

அமரர்

## சின்னப்பு பேரம்பலம்

*கல்வெட்டித்திடல், புளியம்பொக்கணை.*



01.03.2013 அன்று அமரத்துவம் அடைந்த எமது அன்புத் தெய்வம் **சின்னப்பு பேரம்பலம்** அவர்களின் மறைவுச் செய்தி எட்டிய அந்த கண நேரம் தொடக்கம் இன்று வரை எமக்குப் பேருதவி புரிந்த அத்தனை அன்புள்ளங்கட்கும் எமது குடும்பம் சார்பான மனம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

30.04.2013 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்வு மற்றும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை என்பவற்றில் பங்கு கொண்டு தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்கு உதவுமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

நாகதம்பிரான் அரிசி ஆலை
புளியம்பொக்கணைச் சந்தி,
கண்டாவளை. (சி-3143)

தகவல்
திரு.பேரம்பலம் சிறிதரன் (மகன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## பசியைத் தூண்டலாம்

"வயிறு பசிக்கிறதே!" என்பது சிலரது கவலை.

''வயிறு பசிக்கவில்லையே!'' என்பது சில பேருடைய கவலை.

இந்த இரண்டு விதமான கவலைக்கும் வயிறுதான் காரணமாகும்.

வயிறு பசித்தால் அது இயற்கை. வயிறு பசிக்கவில்லையென்றால் அது வியாதி.

பசியை நீக்க வேண்டுமென்றால், சாப்பிட வேண்டும். பசியின்மையை நீக்க வேண்டுமென்றால் வைத்தியரை நாட வேண்டும்.

இது தொடர்பாக எவ்வளவோ ஆராய்ச்சிகள் இடம்பெறுகிறன. அதிகளவான மருந்துகளை கண்டுபிடித்துள்ளார்கள்.

நமது உடலில் பசியைத் தூண்டும் பகுதியை முதலிலே தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

நாம் உண்ணும் உணவு சமிபாடடையக் காரணம் எது தெரியுமா? நமது மூளையின் பின் பகுதிதான் அதற்குக் காரணமாக இருக்கிறது.

மூளையின் பின் பகுதியிலே நரம்பு செல்களால் அமைந்துள்ள இரண்டு வகையான "ஆரெக்சின்"கள் தான் பசியை ஏற்படுத்துகின்றன என இரண்டு ஆய்வாளர்கள் கண்டு பிடித்துள்ளார்கள்.

உண்பது தேவை என்று உணரப்படும்போது, மூளையின் "ஆரெக்சின்" எனும் ஓமோன்களைச் சுரக்கும் பகுதி பசியைத் தூண்டும்- அப்படி என்பதுதான் ஆய்வாளர்களின் கண்டுபிடிப்பு.

இந்த ''ஆரெக்சின்'' வேறு சில உயிர் இனங்களிலேயே உள்ளது. எலியிலேயும் உண்டு. அதனையும் பிடித்து ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள்.

எலிகளின் உடலிலே ஆரெக்சினைச் செலுத்திப் பார்த்தார்கள். உடனே எலிகள் அனைத்தும் பசியாலே துடிதுடித்ததைக் கண்டார்கள். எதையாவது சாப்பிட்டு பசியைத் தீர்த்தால் போதும் என்று எலிகளின் எண்ணம் இருந்தது.

இயல்பாக... சாதாரணமாக அந்த எலிகள் எவ்வளவு சாப்பிடுமோ அதைவிட எட்டு முதல் பத்து மடங்கு வரை அதிகமான ஆகாரத்தை ஓரிரு மணித்தியாலத்தினுள் சாப்பிட்டு தீர்த்து விட்டன.

சில எலிகளின் மூளையிலே இந்த 'ஆரெக்சின்' அளவைக் கட்டுப்படுத்திப் பார்த்தார்கள். உடனே அவை உணவைக் கண்டால் முகத்தைத் திருப்பிக் கொண்டு போக ஆரம்பித்து விட்டன. அந்த எலிகளுக்கு பசி ஏற்படவில்லை.

இந்த ஆராய்ச்சியின் அடிப்படையிலே... பசி எடுக்காமல் இருக்கிற மனிதர்களுக்கும் பசியைத் தூண்ட முடியுமென்று ஆராய்ச்சியாளர்கள் தெரிந்திருக்கிறார்கள்.

எனவே, "ஆரெக்சின்" தான் பசியைத் தூண்டுகிறது என்பது தெரிந்து விட்டது.

சரி... "ஆரெக்சின்" என்றால் என்ன? அதுவொரு கிரேக்கச் சொல் "பசி" என்று அர்த்தம்.

தற்போது நாட்டில் பசியைத் தூண்டுவதற்கு மருந்து தேவையில்லை.

பசியைக் குறைப்பதற்குத்தான் மருந்து தேவை.

ஒரு அம்மா வைத்தியரிடம் வந்தார்.

''ஐயா! எனது வீட்டுக்காரருக்கு திடீரென அகோரப்பசி ஏற்படுகிறது. நிறைய சமைத்து பரிமாறுகிறேன். அவ்வளவு உணவையும் சாப்பிட்டு விட்டு, கீழே கிடக்கும் குப்பை, கூழங்களையும் எடுத்து சாப்பிட ஆரம்பித்து விடுகிறார். என்னவென்று சோதித்துப் பாருங்கள்" என்றார்.

"எவ்வளவு நாட்களாக இப்படி நடக்கிறது?" என்று வைத்தியர் வினவினார்.

"ஒருவார காலமாக இப்படியாக உள்ளது" என்றார் அந்த அம்மா.

''இவ்வளவு நாட்கள் ஏன் அமைதியாக இருந்தீர்கள். வேளைக்கே அழைத்து வந்திருக்கலாமே..." என்றார்.

"வீடு பூராகவும் சுத்தம் செய்யட்டும் என்று காத்து இருந்தேன் ஐயா!" என்றார்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை முன்னிறுத்தி ஒற்றுமையுடன் செயற்படுவோம்

## ஆனந்தசங்கரி அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வா தன் இனத்திற்கு ஆற்றிய அளப்பரிய சேவையினால் ஒவ்வொரு தமிழ் மகன் இதயத்திலும் இரண்டறக் கலந்திருக்கின்றார். இதனால்தான் நாம் இப்பெருமகனை நினைத்து பெருமை கொள்கின்றோம் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் செயலாளர் நாயகம் வீ.ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார்.

தந்தை செல்வநாயகத்தின் 36 ஆவது நினைவு தினம் கடந்த 26ஆம் திகதி மாலை 3.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவகத்தில் நடைபெற்றது.

இவ் சிரார்த்த தின நிகழ்வில் கலந்து கொண்டு தலைமையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது உரையில்,

தந்தை செல்வா தன் இனத்துக்கு ஆற்றிய அளப்பரிய சேவையினால் இன்று ஒவ்வொரு தமிழ் மகன் இயத்திலும் இரண்டறக் கலந்திருக்கின்றார். இதனால் நாம் இப்பெருமகனை நினைத்து பெருமை கொள்கின்றோம். தந்தை செல்வா தனது இறுதிக் காலத்தில்தான் சார்ந்திருந்த அரசியல் கட்சியை விட்டு கூட்டுத்தலைமைத்துவத்தை முன்னிறுத்தி தமிழர் விடுதலைக் கூட்டணி என்னும் இக் கூட்டணிக் கட் சியை உருவாக்கினார்.

இறக்கும் வரை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராகவே தன்னை அறிமுகம் செய்ய அவர் தவறவில்லை. அதேநேரம் ஏனைய அரசியல் கட்சிகளையும் அதன் தலைவர்களையும் சம அந்தஸ்துடன் அவர்களுக்கே உரித்தான சுயகௌரவத்துடனும் வழி நடத்தும் அரசியல் தலைமைத்துவப் பண்பையும் கொண்டுருந்தார் என்பதை தந்தை செல்வாவின் பாசறையில் வளர்ந்த ஒவ்வொருவரும் நன்கு அறிவார்கள்.

இவ்வாறு அவரின் அரசியல் பாசறையில் வளர்ந்த தலைவர்களில் நானும் ஒருவன். அவரின் ஆத்மாத்த பலம் பொருந்திய தொலைநோக்கு அரசியற் பணிகளை எனது இறுதிமூச்சு இருக் கும் வரை நினைவுகூருவேன்.

ஒரு ஜனநாயக நாட்டில் தேர்தல்கள் வரும் போகும். இது மக்களின் விருப்பத்திற்கேற்ப அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான வாய்ப்புகளை மட்டுமே அவர்களுக்கு வழங்குகின்றது. தமிழ் அரசியல் சூழலில் தேர்தலை மையப்படுத்தும் போக்குடைய கட்சிகள்தான் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. தமிழ் மக்கள் வெறுமனே தமிழ் கட்சிகளிடமிருந்து தேர்தல் நிகழ்ச்சி நிரல்களை மட்டும் எதிர்பார்க்கவில்லை.

அவற்றுக்கும் அப்பால் நிரந்தரமான, கௌரவமான, நிலைத்திருக்கக் கூடிய அர சியல் தீர்வொன்றையும் பெற்றுத் தரக்கூடிய ஓர் நிர்வாகத்திறன் பொருந்திய அரசியல்சக்தியை எதிர்பார்க்கின்றார்கள். இத் தகைய அரசியல் இலக்கை இலங்கைத் தீவில் இன்றிருக்கும் எந்தவொரு தமிழ் அர சியல் கட்சியாலும் தனித்து முன்னெடுத்துச் செல்லமுடியாது என்பதை எனது அரசியல் வாழ்விலிருந்தும் வெளிப்படையாக எனது மனோபாவத்திலிருந்தும் கூறுகின்றேன். இதனை எனது வயதிலிருக்கும் சம்பந்தனும் புரிந்து வைத் திருப்பார்.

இலங்கை அரசிடமிருந்து எமது மக்கள் கௌரவமான, நிரந்தரமான, முழுப் பாதுகாப்புத் தன்மை கொண்ட அரசியல் தீர்வு ஒன்றையே எதிர் பார்த்து நிற்கின்றார்கள். அதனை அவர்கள் எமக்குத் தருவதற்கு சில விட்டுக் கொடுப்புகளையும் மன மாற்றங்களையும் செய்ய வேண்டும் என எதிர்பார்க்கின் றோம். அதேபோல்தமிழ் தேசியக் கூட்டமைப்பைப் பலம் பொருந்திய அரசியல் சக்தியாக உருவாக்குவதற்கு அரசியல் கட்சிகளுக்கிடையிலும் அதன் தலைவர்களும் தனி நபர்களுக்கிடையிலும் தமது தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளுக்கு அப்பால் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை முன்னிறுத்தி பற்றுறுதியுடன் பயணிக்கும் போதே அரசியல் ஒற்றுமை என்ற இலக்கை எட்டுவதோடு சம காலத்தில் உருவெடுத்துள்ள நெருக்கடிகளுக்கும் முடிவுகட்டமுடியும்.

இன்றைய சூழ்நிலையில் தமிழ் மக்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஒரு பதிவு செய்யப்பட்ட சட்ட அங்கீகாரத்துடன் கூடிய ஓர் முழுமையான வடிவமாக மாறுமா என்ற கேள்விகளுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். தமிழ் மக்களின் ஒட்டு மொத்தமான இவ் விருப்பத்தை ஏற்று நானும் எனது தமிழர் விடுதலைக் கூட்டணியும் தனியொரு கட்சியை முன்னிறுத்துவதற்கு அப்பால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற உன்னத கட்டமைப்பை உருவாக்குவதற்கு முழுமையாக அர்ப்பணிப்போம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 90 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 70-140 | 70 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 80 |
| தக்காளி | 60 | 40 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 50 |
| கோவா | 60 | 60 | 80 |
| கரட் | 120 | 80 | 140 |
| பூசணி | 40 | 30 | 50 |
| புடோல் | 40 | 40 | 60 |
| வாழைக்காய் | 30-35 | 30 | 60 |
| சின்ன வெங்காயம் | 120-160 | 120-140 | 120-180 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 80 |
| பாகற்காய் | 120 | 80 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | 70 | -- |
| பயற்றங்காய் | 50-70 | 120 | 100 |
| லீக்ஸ் | 100 | 140 | 120 |
| பீற்றூட் | 60 | 40 | 80 |
| கறிமிளகாய் | 100 | 60 | 120 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 600 |
| போஞ்சி | 120 | 90 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | -- | 60 |
| கீரை - 1 பிடி | 20 | 20-30 | 30 |
| தேசிக்காய் | 70-100 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 40-50 | 50 |
| இராவள்ளி | 100 | 90 | 100 |

# இராசி பலன்

30.04.2013

(சித்திரை 17, செவ்வாய்கிழமை)

சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு

பஞ்சமி பிற்பகல் 2.52 மணிவரை

மூலம் பிற்பகல் 10.06 மணிவரை

இராகுகாலம் 2.58-4.28 மணிவரை

சுபநேரம் 10.28-11.58 மணிவரை

**மேடம்** முற்கோபத்தை குறைத்துக் கொள்ளது நல்லது, மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலை ஒன்றை நீங்கள் எளிதில் செய்துமுடிப்பீர்கள், திடீர் பயணங்களால் நன்மை உண்டு.

**இடபம்** பிரயாண பயமுண்டு, எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், வரவைக் காட்டிலும் செலவு கூடலாம், பிறருக்காக பொறுப்புச் சொல்வதை தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்** நட்புவட்டம் விரிவடையும் நாள், தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட் பீர்கள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**கடகம்** ஆரோக்கியமான நாள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், சச்சரவை விட்டு சாதித்துக் காட்டும் நாள், புதிய திருப்பங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**சிங்கம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும் வாய்ப்புண்டு, வியாபார விருத்தியுண்டு, நீண்ட நாளைய கோரிக்கைகள் நிறைவேறலாம்.

**கன்னி** பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், வாகன சுகமுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம், கல்வியில் நாட்டம் காட்டுவீர்கள், பெற்றோரின் ஆசைகளைப் பூர்த்தி செய்வீர்கள்.

**துலாம்** எடுத்த காரியத்தை முடிக்க சகோதர வழியில் உதவிகள் கிடைக்கலாம், புதிய பொருட்கள் வாங்குவதில் நாட்டம் காட்டுவீர்கள், பயணங்களால் பலன் உண்டு.

**விருச்சிகம்** குடும்ப மகிழ்ச்சி கூடும், உறவினர் வருகையுண்டு, தொழில் நன்மையுண்டு, வருங்கால நலன்கருதி புதிய முடிவெடுப்பீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**தனுசு** வேலைச்சுமை கூடும், மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் எடுக்கவேண்டிய நாள், சிந்தனை மிகுதியுண்டு.

**மகரம்** அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், சயனசுகக்குறைவான நாள், சுப செலவுகள் செய்து மகிழ்வீர்கள்.

**கும்பம்** உன்னதமான வாழ்க்கைக்கு அடித்தளம் அமைப்பீர்கள், பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம்.

**மீனம்** செய்தொழில் மேன்மையுண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சிகூடும், பிறர் உதவியுண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், போசன நன்மையுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தங்கத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும்?

தங்கத்தைப் பற்றியே தற்போது பரவலாகப் பேசப்பட்டு வருகின்றது. என்றாலும் சில அடிப்படைக் கேள்விகள் தொடருகின்றன. உதாரணமாக சென்ற 12 ஆண்டுகள் தங்கத்தின் விலை ஏறிக் கொண்டே போனது எப்படி? அதன் விலையில் திடீர் வீழ்ச்சி ஏற்பட்டது எதனால்? இந்தச் சரிவு எவ்வளவு காலம் தொடரும்? அதில் இனி முதலீடு செய்வது புத்தி சாலித்தனமாகுமா? தங்கத்தின் விலை பழைய உச்சத்தை எட்டுமா? அதற்கு எவ்வளவு காலம் ஆகும்? எம்மவர்களுக்கு தங்க மோகம் குறையுமா?

இதற்கெல்லாம் விடை காண வேண்டுமானால் கடந்த 12 ஆண்டுகளின் உலக நிகழ்வுகளை உன்னிப்பாக அலச வேண்டும்.

தங்கத்தின் விலை உயர்ந்ததற்குக் காரணம் ஆபரணங்களுக்கான தேவை அதிகரித்ததால் அல்ல. மாறாக தங்கத்தில் முதலீடு செய்வது அதிகரித்தால்தான், அதன் விலை பல மடங்காக உயர்ந்தது.

கடந்த 11 ஆண்டுகளில் தங்கத்தின் விலை ஆறரை மடங்கு அதிகரித்தது.



2003 ஆண்டு முதல் பிரிக் நாடுகளான பிரேஷில், ரஷ்யா, இந்தியா,சீனா மற்றும் பல்வேறு நாடுகளின் பொருளாதாரம் வளர்ச்சி யடையத் தொடங்கியது. ஆனால் அமெரிக்கா, இராக் போரின் காரணமாக வளர்ச்சிப் பாதையிலிருந்து விலகியது. 2008ஆம் ஆண்டு, அமெரிக்கா கடும் நிதி நெருக்கடியைச் சந்தித்தது. டொலர் மதிப்பு தொடர்ந்து சரிந்தது. அதே கால கட்டத்தில் யூரோ நாணயமும் மதிப் பிழந்தது.இதனால் உலக அளவில் முதலீட்டாளர்கள் தங்கத்தில் முதலீடு செய்தனர்.



தங்கத்தின் விலை 2003 முதல் ஏறிக் கொண்டே போனது. அது 2011 செப்டம்பர் மாதம் உச்சத்தை எட்டியது. இனி இது ஏதோ ஒரு நிலையில் சரியத் தொடங்கும் என்பதை ஊகித்த ஊக பேர வணிகர்கள் 2011 கடைசியிலும் 2012 ஆம் ஆண்டிலும் ஊக பேர முதலீட்டை படிப்படியாகக் குறைத்துக் கொண்டார்கள்.

சர்வதேசப் பொருளாதாரத்தில் பங்குவகிக்கும் பெரு நிறுவனங்கள் மற்றும் நாடுகள் தங்களிடம் இருப்பில் உள்ள தங்கத்தை விற்க இருப்பதாக சில வாரங்களுக்கு முன்பு அறிவித்தன. கோல்டுமேன் சாக்ஸ் என்கின்ற சர்வதேச நிதி அமைப்பு 2014 ஆம் ஆண்டு தங்க விலை குறையும் என்று அண்மையில் கருத்து தெரிவித்தது.

ஏற்கெனவே ஐரேப்பிய நாடுகளான கிரீஸ், ஸ்பெயின், இத்தாலி போன்ற நாடுகள் பொருளாதார வீழ்ச்சியைச் சந்தித்திருந்தன. இந் நிலையில் புதிதாக சைப்ரஸ் நாடும் பொருளாதார வீழ்ச்சி அடைந்தது. அந்த நாட்டின் கை வசம் இருக்கும் தங்கத்தை விற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இது சந்தையில் தங்க வரத்தை அதிகரிக்கும் என்று சொல்லத் தேவையில்லை. அந்தச் செய்தியே, தங்கத்தின் தற்போதைய வீழ்ச்சிக்குக் கடைசி முக்கிய காரணமாக அமைந்து விட்டது.

சரி தங்கத்தின் விலை மேலும் வீழ்ச்சி அடையுமா? சரிவு நீண்ட காலம் தொடருமா? இதற்கு மேலும் கடும் வீழ்ச்சி அடைய வாய்ப்பில்லை என்றே தோன்றுகிறது.2013 ஆம் ஆண்டு முழுவதும் தங்கத்தின் விலை சிறிதளவு அவ்வப்போது குறைவதும் உயர்வதுமாக இருக்கும். ஆனால் பெரிய வீழ்ச்சியோ கணிசமான ஏற்றமோ இருப்பதற்கு வாய்ப்பில்லை.

இந்த நம்பிகைக்கு என்ன ஆதாரம் ஏன்றால் தங்கத்தின் விலை நீண்ட கால அடிப்படையில் உயருவதற்கான சாத்தியக்கூறுகளே அதிகமாக உள்ளன. கடந்த காலத்தில் விலை அதீதமாக உயர்ந்த போது ஆபரணங்களின் விற்பனை குறைந்துள்ளதால்தங்க நகைகளின் விற்பனை அதிகரிக் கும். இதனால் விலையும் உயரும்.

உலகின் பல நாடுகளில் பண வீக்கம் அதிகரித்துள்ளது. பணவீக்கத்தின் பாதிப்பிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக முதலீட்டாளர்கள் தங்களது முதலீட்டில் ஒரு பகுதியையாவது தங்கமாக வைத்திருக்க விரும்புவார்கள். இதனாலும் தங்கத்தின் விலை உயரும்.

பல நாடுகளின் மத்திய வங்கிகள் தங்களது கையிருப்பில் உள்ள தங்கத்தின் அளவை அதிகரித்துக் கொள்ள வேண்டும். அமெரிக்க டொலர்களின் அளவை குறைத்துக் கொள்ள வேண்டும் என்பதை ஒரு கொள்கையாகவே வைத்திருக்கின்றன. எனவேதான் தங்கத்தின் விலை இதற்கு மேலும் வீழ்ச்சி அடையாது என்று நம்பலாம்.

அடுத்து நடுத்தர மக்கள் தங்கத்தில் முதலீடு செய்திட இது ஏற்ற தருணமா என்றால் சில சுய கட்டுப் பாடுகளுடன் நிச்சயமாக முதலீடு செய்யலாம்.

நீண்டகால அடிப்படையில் தங்கத்தின் விலை அதிகரிக்கும் என்பதற்கு என்ன ஆதாரம்?ஆண்டுக்கு ஆண்டு தங்கத்தின் உலக அளவிலான உற்பத்தி சுருங்கிக் கொண்டே போகிறது.தென் ஆபிரிக்கா மற்றும் சில நாடுகளில் மட்டுமே தங்கச் சுரங்கங்கள் அதிகமாக உள்ளன. அங்கெல்லாம் தங்கத் தாது எடுப்பதற்கு முன்பை விட மிக அதிக ஆழத்திற்குச் செல்ல வேண்டியுள்ளது. இதனால் உற்பத்திச் செலவு அதிகரிக்கிறது.தங்க ஆபரணங்கள்,தங்க முதலீடு, மத்திய வங்கிகளின் தேவை ஆகியவற்றுக்காக தங்கத்தின் தேவை அதிகரித்துக் கொண்டே போகிறது.

சர்வதேச அளவில் அமெரிக்க டொலருக்கு நிகரான அல்லது அதைவிட கூடுதல் மதிப்பு வாய்ந்த முதலீட்டுப் பொருளாகத் தங்கம் கருதப்படுகிறது.

இதனால் சீனா தனது பல டிரில்லியன் டொலர் அளவிலான ஜி.டி.பி. (நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பு) யில் 1.6 சதவீதம் தங்கத்தை இப்போது கையிருப்பாக வைத்துள்ளது.

இதை வருங்காலத்தில் 2.5 சதவீதமாக, படிப்படியாக, உயர்த்திக் கொள்ள விரும்புகிறது. அந்த அதிகரிப்பு ஒரே ஒரு சதவீதத்துக்கும் குறைவு என்றாலும் அதற்கே பெரிய அளவில்தங்கம்வாங்கியாகவேண்டும்.

இதுதவிர இலங்கை,இந்தியா போன்றவற்றில் தங்கத்தை வெறும் உலோகமாகப் பார்ப்பதில்லை.அது நம் உணர்வுகளுடன் பின்னிப் பிணைந்து விட்ட மங்களகரமான உலோகம் .இந்தியர்கள் தங்கத்தை ஆசைக்காக ,ஆபரணத்துக்காகக் கூட வாங்குகிறார்கள்.


## தற்போதைய வீழ்ச்சி எதுவரை?

வங்கிகளிலும்,வங்கி சாராத நிதி நிறுவனங்களிலும் பெருமளவில் தங்கக் கடன் கொடுத்திருக்கிறார்கள்.

திருமணங்களில் தங்கம் முக்கியப் பங்கு வகிக்கிறது.

தங்க விலை இப்போது குறைந்திருப்பது அரசுக்கு நல்ல செய்தி தான்! அதேபோல் இல்லத்தரசிகளுக்கும் நல்ல செய்தி!

ஆனால் இந்த வீழ்ச்சி நிலையானது அல்ல 2014 ஆம் ஆண்டு மத்தியில் மீண்டும் தங்கம் எழுச்சி அடையும் என உலகப் பொருளாதார வல்லுநர்களும், பெரிய தங்க வியாபாரிகளும் கருத்து தெரிவிக்கிறார்கள். அதேநேரம் 2011 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் தங்கம் கண்ட உச்சத்தை அது மீண்டும் எட்டிப் பிடிக்க சில வருடங்கள் ஆகலாம்.






## கடந்த வாரம் பங்குச் சந்தை

கொழும்பு பங்குச் சந்தை கொடுக்கல் வாங்கல்களை பொறுத்தமட்டில் வங்கிகளின் பங்குகளை கொள்வனவு செய்வதில் பெருமளவான வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தமது ஆர்வத்தை வெளிப்படுத்தியிருந்ததை கடந்த வாரம் அவதானிக்க முடிந்தது.

4 நாட்களுக்கு மட்டுமே இடம் பெற்ற கடந்த வார கொடுக்கல் வாங்கல்களின்போது, நெஸ்லே நிறுவனம் தனது பங்குலாபம் வழங்குவது குறித்த அறிவித்தலை வெளியிட்டிருந்தது. அது போலவே, சிலோன் டுபாக்கோ நிறுவனம் வெகு விரைவில் இடைக்கால பங்கிலாபம் குறித்த அறிவித்தலை விடுக்கும் என எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

கடந்த வெள்ளிக்கிழமை பங்குச் சந்தை நடவடிக்கைகள் நிறைவடையும் பொழுது, அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 5, 962.17 ஆகவும் எஸ் அண்ட் பி ஸ்ரீலங்கா 20 சுட்டி 3359.36 ஆகவும் அமைந்திருந்தன.

ஏப்ரல் 22-ம் திகதியுடன் ஆரம்பமான கடந்த வாரத்தின் இறுதியில் மொத்த பங்கு புரள்வு பெறுமதியாக ரூ.3,913,532,480 அமைந்திருந்தது.

கடந்த வாரம் மொத்தமாக 45, 150 பங்கு கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றன. இதில் உள்நாட்டு கொடுக்கல் வாங்கல்கள் 43,889 ஆகவு ம் வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்கள் 1,251 ஆகவும் பதிவாகியிருந்தன.

கடந்தவார கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் சிலோன் லெதர் (உரிமைப்பங்குகள்) (5.00), சிலோன் பிரின்டர்ஸ், சிலோன் லெதர் (உரிமைப்பங்குகள்) (5.20), டச்வுட் மற்றும் இண்டஸ்ரியல் அஸ்ப் போன்றன முதல் ஐந்து சிறந்த இலாப மீட்டிய பட்டியலிடப்பட்ட கம்பனிகளாக பதிவாகியிருந்தன.

தங்கரீன், பிம்புத் பினான்ஸ், செலின்சிங், ஆர்பிக்கோ மற்றும் ஒன்அலி போன்ற நிறுவனங் களின் பங்குகள் அதிகளவு நட்டமீட்டியதாக பதிவாகியிருந்தன.

## சேவைத்துறை வளர்ச்சி குறைவடைந்தால் இவ்வருட பொருளாதார வளர்ச்சி குறைவடையும்


இலங்கையின் பொருளாதார கட்டமைப்பில் சேவைத் துறையின் வளர்ச்சிப் பங்களிப்பு வீதம் குறைவடைந்தமையே 2012ஆம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சி வீதம் 6.4 ஆக குறைவடைவதற்கு காரணமாக அமைந்துள்ளது.

பொருளாதாரத்தில் சேவைத் துறையின் வளர்ச்சிப் பங்களிப்பு வீதம் இவ்வருடமும் குறைவடைந்தால் 2013ஆம் ஆண்டும் பொருளாதார வளர்ச்சி மட்டம் குறைவடையும் அபாயமே உள்ளது என்று கணக்காய்வு அத்தியட்சகர் ஐ.எம். ரஷ்மி தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதாரத்தில் அதிக பங்களிப்பை சேவைத் துறையே கொண்டுள்ளதாகவும், எனவே சேவைத்துறையின் வீழ்ச்சியானது பொருளாதாரத்தை அதிகளவில் பாதிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் விபரிக்கையில்,

2012ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 6.4 வீதமாக பதிவாகியுள்ளது.அதாவது, நாட்டின் பொருளாதார வளர்ச்சியானது 6.4 வீதமாகப் பதிவாகியுள்ளது. ஆனால் [illegible] மொத்த தேசிய



உற்பத்தியானது (ஜிஎன்பி) 5.5 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதை அவதானிக்க வேண்டியுள்ளது.

கடந்த 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பதிவான ஆகக் குறைந்த சேவைத் துறை பங்களிப்பு வளர்ச்சி வீதம் அமைந்துள்ளமையே இதற்குக் காரணமாகும்.

அதாவது 2012ஆம் ஆண்டு சேவைத்துறை பங்களிப்பு வளர்ச்சியானது 4.6 வீதமாக பதிவாகியுள்ளது.

ஆனால் 2011ஆண்டில் மொத்த தேசிய உற்பத்தியில் சேவைத்துறைப் பங்களிப்பு வளர்ச்சி வீதமானது 8.6 வீதமாகப் பதிவாகியுள்ளது.

ஆனால், 2012ஆம் ஆண்டில் சேவைகள் துறை பங்களிப்பு வளர்ச்சியானது 4.6 என்ற குறைந்த வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

இருப்பினும்இந்தசேவைத் துறை பங்களிப்பு வளர்ச்சி வீதத்தினால் அதிகளவில் பாதிக்கப்படவிருந்த பொருளாதார வளர்ச்சியை நாட்டின் விவசாயத் துறையே தூக்கி நிறுத்தியுள்ளது..

அதாவது 2011ஆம் ஆண்டில் 1.4 வளர்ச்சி வீத அதிகரிப்பை காட்டிய விவசாயத் துறையானது 2012ஆம் ஆண்டில் 5.8 வீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது.

இதனாலேயே கடந்த வருடத்தின் பொருளாதார வளர்ச்சியானது 6.4 என்ற கௌரவமான நிலைக்கு வந்தது.


அந்த வகையில் சேவைத் துறைகளின் வளர்ச்சி வீதம் குறைவடைந்தால் இவ்வருடமும் பொருளாதார வளர்ச்சி வீதத்தில் பாதகமான தாக்கங்கள் ஏற்படலாம்.

எனவே சேவைத்துறை விவசாயம் மற்றும் கைத்தொழில் துறைகளின் வளர்ச்சியை மேலும் அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுவது அவசியமாகும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் காணி அபகரிப்புக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல்

## 5 ஆயிரம் பேரை அழைக்கிறார் சுமந்திரன் எம்.பி.



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பகுதியில் இராணுவத் தேவைக்காக தமிழ் மக்களின் காணிகள் சுவீகரிக்கப்பட்டமைக்கு எதிராக உயர்நீதிமன்றம் உட்பட நாட்டிலுள்ள சகலநீதிமன்றங்களிலும் வழக்குகள் தாக்கல் செய்வதற்கு 5 ஆயிரம் பேரை முன்வருமாறு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்குப் பகுதிகளில் இராணுவத் தேவைக்காக தமிழ் மக்களின் காணிகள் சுவீகரிக்கப்பட்டமையை எதிர்த்துத் தெல்லிப்பழை பிரதேச செயலகம் முன்பாக நேற்று இடம்பெற்ற கண்டனப் போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாகும்வரை உண்ணாவிரதப்போராட்டம் நடத்தப்பட்டால் அதைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முன்னின்று நடத்தும். ஆனால் அதற்கு முன் சில சட்டநடவடிக்கைகளை எம்மால் செய்யமுடியும். அதற்கான உறுதியளிப்பை எம்மால் கொடுக்கவும் முடியும்.

சாகத் தயராகவே இந்தப்போராட்டங்களை நாம் முன்னெடுக்க வந்துள்ளோம். மக்களின் உணர்வுகள் எமக்கு நன்றாகப் புரிகின்றன. 23 வருடங்களுக்கு மேலாக அவர்களைப் பொறுமை காக்கச் சொல்லி விட்டு சிறிய தொகை மக்களை மட்டும் ஆரம்பத்தில் உள்ளே குடியிருக்க அனுமதித்துவிட்டு பகுதிபகுதியாக எல்லோரையும் அனுமதிப்போம் எனக்கூறி இத்தனை காலமும் எம்மை ஏமாற்றிவிட்டு கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்பாக முட்கம்பி வேலிகள் அமைத்துவிட்டு தற்போது அந்தக்காணிகளை அரசாங்கம் சுவீகரிக்குமென அறிவித்தல்களை ஒட்டியிருப்பது மனவேதனையளிக்கிறது.

எல்லோருக்கும் உணர்வு இருக்கிறது. இந்த அரசாங்கம் சுமார் 20 வருடங்களுக்கு மேலாக எம்மை ஏமாற்றியிருக்கின்றது. சுமார் 10 வருடங்களுக்கு மேலாகத் தன்னுடைய உயர் நீதிமன்றத்தையே ஏமாற்றியிருக்கின்றது. உயர்நீதிமன்றத்தை இந்த அரசாங்கம் என்ன விதமாக நடத்துகின்றது என்பதை உங்களுக்கு நான் சொல்லித்தான் தெரியவேண்டுமென்றில்லை.

ஆகையினாலே நீதிமன்றத்தில் நம்பிக்கை வைத்து நாங்கள் வழக்குத் தாக்கல் செய்யவில்லை. ஆனால் இன்றைக்கு நாங்கள் போராடுகின்ற முறைமைகளிலே உண்ணா விரதப்போராட்டம் நடத்த வேண்டும் என்றால் உண்ணா விரதப் போராட்டம் நடத்தியேயாகவேண்டும்.

அத்தோடு இலங்கையில் இருக்கின்ற நீதிமன்றங்கள் அனைத்தையும் நிரப்பியாக வேண்டும். அதற்கு அப்பால் தான் சர்வதேச அரங்கிற்கு செல்ல வேண்டும். வலிகாமம் பகுதியில் இருந்து சுமார் 9 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இடம்பெயர்ந்து மீளக் குடியமர முடியாத நிலையில் உள்ளார்கள்.

இதில் குறைந்தது 5 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாவது முன்வருவீர்களாக இருந்தால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய முடியும். அதற்கான சட்டவரைபுகள் எல்லாம் தயாராகி விட்டன.

கையெழுத்துக்களைப் பெறுவதற்காக தாள்களையும் நான் கொண்டு வந்துள்ளேன். எனவே எதிர்வரும் 2 ஆம் திகதி உயர் நீதிமன்றில் வலிகாமம் பகுதியைச் சேர்ந்த 5 ஆயிரம் பேர் வழக்குத் தாக்கல் செய்தார்கள் என்ற செய்தி ஊடகங்களில் வெளியாகுமாயிருந்தால் அச் செய்தி உலகத்தைத் திரும்பிப் பார்க்க வைக்கும்.

இதை மக்கள் நம்ப வேண்டும். உலகத்தில் எங்கும் இப்படி நடந்ததில்லை. ஆகவே உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்குதல் செய்ய மக்கள் முன்வரவேண்டும்.

ஒரே ஒரு வழியில் மட்டும் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதால் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது. பல்வேறு வழிகளில் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யும் வரை நாங்கள் உயிரோடு இருக்க வேண்டும். அதற்குப் பின்னர் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்துவோம்.

பிரதேச செயலகத்தை முடக்க வேண்டுமானால் நாங்களே முன்னின்று முடக்குவோம். எமக்கு முன் தடைகள் போடப்படுமானால் அவற்றை நாம் தாண்ட தயாராகவுள்ளோம். சட்டத்தை மீறி செயற்படும் நேரம் வரும் போது அதனைச் செய்ய நாம் தயார். இதனை ஊடகங்கள் ஊடாகத் தான் நாங்கள் கூறுகின்றோம். பகிரங்கமாகத் தான் கூறுகின்றோம்.

செய்ய வேண்டிய கருமங்களை நிதானமாகச் செய்ய வேண்டும். எமக்கு உணர்வுகள் இருக்கின்றன. அதனை அடக்கி வைத்துக் கொண்டு சரியான முறையில் செயற்பட வேண்டும்.

சரியான விளைவுகள் எமக்குக் கிடைக்கின்ற வகையிலே நாங்கள் செயற்பட வேண்டும். ஒரே ஒரு வழியில் மட்டும் போராடி எமது பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு விட முடியாது.

எனவே தயவு செய்து காணி உறுதிகளின் பிரதிகளைக் கொடுத்தால் இந்த நாட்டில் இருக்கின்ற உயர் நீதிமன்றம், மேல் நீதிமன்றங்கள் உட்பட சகல நீதிமன்றங்களிலும் உடனடியாக வழக்குகளை பதிவு செய்ய தயாராக இருக்கின்றோம்.

எல்லா நடவடிக்கைகளும் முடிந்து விட்டன. வழக்கு தாக்கல் செய்ய மக்கள் முன்வர வேண்டும் என அவர் மீண்டும் மீண்டும் கோரிக்கை விடுத்தார்.

(அ-6)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: பூசம் 4
உயரம்: 5’8”
கி.பா: 37.25, 1 இல் செவ்.
தகைமை/தொழில்: A/L, Swiss (Not PR)
தொ.இ: B -1712

பிறப்பு: 1977 இந்து வேளாளர்
நட்சத்திரம்: அச்சுவினி
உயரம்: 5’6”
கி.பா: 27.75, 4 இல் செவ்.
தகைமை/ தொழில்:- O/L
சாரதி (தனியார்)
தொ.இ: B -1713

பிறப்பு: 1983 இந்து வேளாளர்
நட்சத்திரம்: உத்தரம் 2
உயரம்: 172 cm
கி.பா:5.25
தகைமை/ தொழில்: HNDE, EngineeringIESL, English (Assit)
தொ.இ: B -1715

பிறப்பு: 1980 இந்து வேளாளர்
நட்சத்திரம்: மகம் 4
உயரம்: 5’8”
கி.பா: 20.25, 2 இல் செவ்.
தகைமை/தொழில்: Bsc (Civil Eng) MSc,UK Migration
தொ.இ: B -1718

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1981 இந்துவேளாளர்
நட்சத்திரம்: மகம் 4
உயரம்:5’6”
கி.பா:63, 1 இல் செவ்.
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G -1740

பிறப்பு: 1979 றோ.க
நட்சத்திரம்: உத்தராடம்
உயரம் : 5’2”
தகைமை/ தொழில்: O/L
எ.பா: விவாகரத்தும் கப்படும்
தொ.இ: G-1741

பிறப்பு: 1988 இந்து விஸ்வகுலம்
நட்சத்திரம்: உத்தராடம், 7இல் செவ்
உயரம்: 153 cm
தகைமை/ தொழில்: கலைப் பட்டதாரி
தொ.இ: G -1742

பிறப்பு: 1983 இந்து விஸ்வகுலம்
நட்சத்திரம்: சுவாதி 4, 8இல் சூரி, செவ்
உயரம்: 5’4”
தகைமை/ தொழில்: BSc
கணக்கியல் (தனியார்)
தொ.இ: G -1746

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


## அரசாங்க அறிவித்தல்

## யாழ் மாவட்டச் செயலகம்

## வாகனம் விற்பனை

| No | Vehicle | Model & Make | Engine No | Chassis No |
|---|---|---|---|---|
| 01 | 251- 0899 | LN166R-PRMDS / Toyota Double | 3L – 4460780 | LN166 - 0003745 |
| 02 | 251-0895 | LN166R-PRMDS / Toyota Double | 3L – 4460197 | LN166 - 0003739 |
| 03 | 251-0900 | LN166R-PRMDS / Toyota Double | 3L - 4460654 | LN166 - 0003752 |
| 04 | 64 - 3093 | TOYOTA / Land Cruiser | IHZ – 0073788 | HZJ75 – 0013079 |

யாழ் மாவட்டச் செயலகத்திலுள்ள மேற்குறிப்பிடப்பட்டுள்ள இலக்க வாகனங்களை ஏல விற்பனை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்தை அலுவலக நாட்களில், அலுவலக நேரத்தில் களஞ்சிய நலன்புரிக்கிளையுடன் தொடர்பு கொண்டு நாவற்குழியிலுள்ள அரசாங்க களஞ்சியத்தில் பார்வையிடலாம் என்பதுடன், விற்பனை தொடர்பான கேள்வி விண்ணப்பப் படிவத்தினை மாவட்டச் செயலக களஞ்சிய நலன்புரிக்கிளையில் 30-04-2013ஆம் திகதியிலிருந்து 30-05-2013 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 9.00மணி தொடக்கம் பி.ப.3.30 மணி வரையும் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 1,000.00 உம் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 25,000.00 உம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை தலைவர், மாவட்டச் செயலகப் பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என விலாசமிட்டு, கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் வாகனம் ஏலவிற்பனைக்கான கேள்வி விண்ணப்பம் - 2013 எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலிலோ, அல்லது பிரதம கணக்காளர் அவர்களின் அலுவலகத்திலுள்ள அலுவலகக் கேள்விப் பெட்டியில் நேரடியாகவோ 30-05-2013ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பப்படல் வேண்டும். அன்றைய தினம் மு.ப. 11.00மணிக்கு கேள்விப்பத்திரப் பெட்டி திறக்கப்படும். அச்சமயம் விண்ணப்பதாரரோ அல்லது அவரது பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

### நிபந்தனைகள்

1. மாவட்டச் செயலகக் கணக்குக் கிளையில் மீளளிக்கப்படாத வைப்புப் பணம் ரூபா 1,000/= செலுத்தி பற்றுச்சிட்டையைப் பெற்றுக்கொண்ட பின்னரே வாகனத்தைப் பார்வையிட முடியும்.
2. கேள்வி ஆவணங்கள் யாவும் 30-05-2013ஆம் திகதி மு.ப. 11.00மணியளவில் அரச அதிபர் மாநாட்டு மண்டபத்திற் திறக்கப்படும்.
3. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் 30-05-2013ஆம் திகதியன்றே உரிய பணத்தினைச் செலுத்தி சகல ஆவணங்களுடனும் வாகனத்தை மாவட்டச் செயலகத்திலிருந்து கொண்டு செல்லுதல் வேண்டும்.

**சுந்தரம் அருமைநாயகம்,**
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலர்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

(சி-3137)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பன் கழகத்தின் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கம்பன் கழகத்தினால் கம் பன் விழாவை முன்னிட்டு கடந்த 28 ஆம் திகதி பாடசாலை மாணவர்களுக்கான பேச்சு, கவிதைப் போட்டிகள் ஆகியவை நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடாத்தப்பட்டது.

இதில் போட்டியின் அடிப்படையில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் பெயர் விபரங்களை மேற்படி கழகம் அறிவித்துள்ளது.

அதன் பெயர் விபரம் வருமாறு,

பாடசாலை மாணவர்களுக்கான
பேச்சுப் போட்டி

ஸ்ரீ.சிவஸ்கந்த ஸ்ரீ (யாழ். இந்துக் கல்லூரி), ஜீ. ஜீவன்(யாழ். இந்துக்கல்லூரி), ஸ்ரீ. ரூபகானன் (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி).

பாடசாலை மாணவர்களுக்கான
கவிதைப்போட்டி

ப.துவாரகன் (யாழ்.இந்துக் கல்லூரி), கி.சோபனா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ஸ்ரீ. சிவஸ்கந்தஸ்ரீ (யாழ். இந்துக் கல்லூரி).


பாடசாலை விட்டு
வெளியோருக்கான
பேச்சுப் போட்டி

வே.நந்தகுமார், க.உஷாந்தன், க.சாயிராம்.

பாடசாலையை விட்டு
வெளியோருக்கான
கவிதைப் போட்டி

த.கயூறியா, வே.நந்தகுமார், சு.சுதாஹரன், திருமதி.ச. குணேஸ்வரி. (அ-2)

நன்றி:- இலண்ட




# எமது மண்ணுக்குப் போகும்வரை போராட்டங்களை முன்னெடுப்போம்

## ஆர்ப்பாட்டத்தில் சுரேஷ் எம்.பி. ஆவேசம்





(யாழ்ப்பாணம்)

எமது மண்ணுக்கு போகும்வரை போராட்டங்களை முன்னெடுக்கவேண்டும் எனத் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் வடக்கு. வலிகாமம் கிழக்குப் பகுதிகளில் இராணுவத்தேவைக்காக சுவீகரிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் சுமார் 6 ஆயிரத்து 381 ஏக்கர் காணிகளை மீள மக்களிடமே வழங்கி மீள் குடியேற்றத்தைத் துரிதப் படுத்தக்கோரி தெல்லிப்பழை பிரதேச செயலகம் முன்பாக நேற்றுக்காலை 7 மணியளவில் ஆரம்பமான தொடர் கண்டனப் போராட் டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், வலிகாமம் பகுதி மக்களின் காணிகளை இராணுவத்தினர் அபகரிப்பதைத் தடுத்து நிறுத்தக்கோரியும் உடனடியாக மக்களை அங்கு மீள்குடியேற்ற வலியுறுத்தியும் வாழ் வுரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வலி.வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இராணுவத்தினர் காணிகளை சுவீகரித்தமை தொடர்பில் சமரசப்போக்குக்கு மக்கள் செல்லக் கூடாது. காணிகளுக்கான நட்ட ஈட்டினைப் பெற்றுக்கொள்வதற்கும் தேவையற்ற ஆவணங்களில் கையொப்பம் இடுவதையும் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

பல இலட்சம் பேர் நிலம் மீட்கும் போராட்டத்தில் உயிரிழந்துள்ளனர். இதில் பல ஆயிரம் சிறுவர்கள், பெண்கள் , முதியவர்கள் எனப் பலரும் உயிரிழந்துள்ளனர். எனவே மக்கள் தமது நிலங்களுக்கு செல்ல வேண்டுமானால் சமரசப்போக்குக்கு உடன்படக்கூடாது.

இழந்த மண்ணை மீட்பதற்காக சாகும் வரை நான் போராடத் தயராகவுள்ளேன். இது வெறும் வீரவசனமல்ல. மக்கள் தமது சொந்த இடங்களுக்கு போகும் வரை நான் தொடர் போராட்டங்களில் ஈடுபடத்தயார்.

சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வரை போராட்டங்களை முன்னெடுக்கவேண்டும். மக்கள் போராட்டங்களைக் கட்டுப்படுத்துவதன் ஊடாகதான் விரும்பியதை செய்ய நினைக்கிறது இந்த அரசாங்கம். ஆனால் திட்டங்கள் வெற்றி பெற நாம் விடமாட்டோம்.

யாழ்ப்பாணத்தில் வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்கு ஆகிய பகுதிகள் மட்டுமல்ல வடமாகாணத்தில் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி போன்ற மாவட்டங்களிலும் இராணுவத்தினர் காணிகளைச் சுவீகரித்துச் சிங்களக் குடியேற்றங்களையும் படைமுகாம்களையும் அமைத்து வருகின்றனர். இவற்றுக்கு நாம் ஒருபோதும் இடமளிக்கக் கூடாது. நாம் எல்லோரும் ஒன்றாகப் பயணித்துப் போராடுவதன் ஊடாகவே இவற்றைக் கட்டுப் படுத்த முடியும். தொடர்போராட்டங்கள் ஊடாக சர்வதேசத்தைத் திரும்பிப் பார்க்க வைக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கண்டனப்போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் மாவை சேனாதிராஜா, கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், சிவஞானம் சிறிதரன் உள்ளிட்ட அக் கட்சியின் பிரமுகர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், நகரசபை தவிசாளர்கள், உறுப்பினர்கள், பெருந்திரளான மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ-6)




## நூல் வெளியீட்டு விழா


உலக புத்தகத்தினத்தை முன்னிட்டு யாழ். மாநகர சபை பொதுசன நூலகம் நடத்தும் நூல் வெளியீட்டு விழா இன்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பொது சன நூலகம் கேட்போர் கூடத்தில் யாழ். பொது சன நூலகப் பிரதம நூலகர் திருமதி இமெல்டா கருணாகரன் தலைமையில் நடைபெறும்.

யாழ். மாநகர சபை பொதுசன நூலக நூலகரும் தொகுப்பாசிரியருமான சி.என்.எச். சாள்ஸ் எழுதிய **தகவலை நோக்கிய வலையின் வீசல்கள்....** எனும் நூல் வெளியீட்டின் வெளியீட்டுரையை யாழ். பொதுசன நூலக முன்னாள் பிரதம நூலகர் எஸ். தனபாலசிங்கம் ஆற்ற மதிப்பீட்டுரையை யாழ். பல் கலைக்கழக இந்து நாகரிகத்துறை உதவி விரிவுரையாளர் சி. ரமணராஜா நிகழ்த்துவார்.

நூலின் முதற் பிரதியை பூபாலசிங்கம் புத்தகசாலை முகாமையாளர் வீ. மகாலிங்கம் பெற்றுக்கொள்ளவார்.

ஏற்புரையை தொகுப்பாசிரியர் வழங்கி வைக்கவுள்ளார். (அ-2)

# உதைபந்தாட்ட இறுதிச் சுற்றுப் போட்டி




(கரவெட்டி)

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலக விளையாட்டு விழாவின் உதைப்பந்தாட்ட இறுதிப் போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

இதில் வடமராட்சியின் இரு பலம் வாய்ந்த அணிகளான கரணவாய் கொலின்ஸ் அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதவுள்ளது. வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட 26 கழகங்கள் பங்கு பற்றிய உதைபந்தாட்டப் போட்டியில் அரை இறுதியாட்டத்தில் வெற்றிவேலாயுத றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து மோதி 3:1 என்ற கோல் கணக்கில் கரணவாய் கொலின்ஸ் அணி வெற்றி பெற்றது.

இரண்டாவது அரை இறுதியாட்டத்தில் வதிரி பொம்மஸ் அணியை 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது. (அ-3-24)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெண்கள், குழந்தைகள் விற்பனை செய்யப்படும் நாடாக இலங்கை?

## இலங். மனித உரிமை குழுவின் ஆணையாளர்

உலகின் பெண்கள், குழந்தைகள் விற்பனை செய்யப்படும் மிகப் பிரதானமான நாடாக இலங்கை திகழ்கின்றது என மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் பிரதீப மனமேந்திர தெரிவித்துள்ளார்.

காலியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

கடற்பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தாலும் தங்காலை கரையின் ஊடாக ரோலர் படகைப் பயன்படுத்தி 35 நாட்களில் அவுஸ்திரேலியாவிற்கு ஆட்களைக் கடத்துகின்றனர்.

வரலாற்றுக் காலத்தில் காணப்பட்ட அடிமைச் சேவக முறைமை இன்று சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கையாக மாற்றமடைந்துள்ளது.

இந்தியாவில் இன்னமும் அடிமைச் சேவக முறைமை காணப்படுகின்றது. மனித உயிருக்கான மரியாதை அற்றுப் போயுள்ளது. பிறந்த குழந்தையைக் கைவிட்டுச் செல்கின்றனர். குழந்தைகளை வீசி எறிகின்றனர். சந்தேக நபர்களைப் பொலிஸார் சித்திரவதை செய்கின்றனர்.

இந்த ஆண்டில் இதுவரையில் இவ்வாறான சித்திரவதைகள் தொடர்பில் ஒரு சம்பவமே பதிவாகியுள்ளது. எனினும் ஏதேச்சாதிகாரமாக கைது செய்தல் தொடர்பில் 30 முறைப்பாடுகள் பொலிஸாருக்கு எதிராக பதிவாகியுள்ளன. பொலிஸ் நிலையங்களில் ஒரு முறைப்பாட்டை சரியான முறையில் பதிவு செய்யக் கூடிய அதிகாரிகளுக்கு தட்டுபாடுப் நிலவுகின்றது. சட்டவிரோதமான உத்தரவுகளை கடைநிலை அதிகாரிகள் பின்பற்ற வேண்டியதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# போர்க்குற்றம்புரிந்த நாட்டில் பொதுநலவாய மாநாடா?

## ஐ.நா. நிபுணர் யஸ்மின்சூகா அதிர்ச்சி

இலங்கையில் பொதுநலவாய தலைவர்களின் உச்சி மாநாடு நடைபெறவுள்ளமை குறித்து ஐ.நா. நிபுணர் குழுவின் ஒருவரான யஸ்மின் சூகா அதிர்ச்சி வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர் பாக, விசாரிக்க ஐ.நா.பொதுச் செயலர் பான் கீ மூன் நியமித்த நிபுணர்களில் ஒருவரான தென்னாபிரிக்காவைச் சேர்ந்த யஸ்மின் சூகா, இலங்கை தனது சொந்த மக்களுக்கு எதிரான உரிமை மீறல்களை இன்னும் தொடர்ந்து நடத்தி வருவதாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் ஏபிசி வானொலிக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர், இவ்வாறு தெரிவித்தார். இலங்கையில் மக்கள் தொடர்ந்து சித்திரவதை செய்யப்பட்டுவதாகவும் காணாமற் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

போர்க்குற்றங்களை விசாரிக்காது விடின் இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய தலைவர்களின் உச்சி மாநாட்டடை புறக்கணிக்கப் போவதாக கனடா கூறியுள்ளதை யஸ்மின் சூகா பாராட்டியுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தினால் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படாவிட்டால் பொது நலவாய தலைவர்களின் உச்சி மாநாட்டை நடத்த அவர்களை அனுமதிக்கக்கூடாது.

அவுஸ்திரேலியா உள்ளிட்ட ஏனைய நாடுகள் தாம் மாநாட்டில் பங்கேற்போம் என்று பலவீனமான முறையில் கூறியுள்ளமை எனக்கு ஆச்சரியமாகவும் மிகவும் அதிர்ச்சியளிப்பதாகவும் இருக்கிறதென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# இராணுவத்தின் பலவந்தங்கள் வடக்கு மக்கள் மீது திணிப்பு

## ஜே.வி.பி.பொதுச் செயலாளர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வடக்கில் தொடர்ந்தும் இராணுவ ஆட்சி நிலவி வருவதாக ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

போர் நிறைவின் பின்னர் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி வடக்கில் சிவில் நிர்வாகத்தை அரசாங்கம் ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

போரின் பின்னர் வடக்கு-கிழக்கில் காணிகளை இழந்தவர்களுக்கு மீளவும் காணிகளை வழங்கியிருக்க வேண்டும்.

அதற்கான திட்டமொன்றை வகுத்து அதனை நடைமுறைப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் அந்தக் காணிகளை அரசாங்கம் தனது தேவைகளுக்காக சுவீகரிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

அதன்படி, வலிகாமம் பிரதேசத்தில் அரசாங்கம் 6 ஆயிரத்து 381 ஏக்கர் காணிகளைப் பலவந்தமாக சுவீகரிக்க முயற்சி எடுத்து வருகின்றது.

இன்னும் இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் தமிழ் மக்கள் மீண்டும் தனி இராச்சிய கோரிக்கைக்குத் தள்ளப்படக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

அரசாங்கம் வடக்கின் சில பகுதிகளில் தங்கள் ஆதரவானவர்களுக்கு காணி களை வழங்கி அதன் மூலம் தேர்தல் இலாபங் களை ஈட்டமுயற்சித்து வருவது குறிப்பிடத் தக்கது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# குடியுரிமை வழங்கும் நாட்டுக்கு எங்களை அனுப்பிவையுங்கள்

23 வருடங்கள் கடந்த நிலையில் எங்களுக்கு குடியுரிமை கொடுக்கப்படவில்லை. இனியும் கொடுபடாத பட்சத்தில், தயவு செய்து எங்களை இலங்கை தவிர்ந்த ஈழத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்கி அகதிகளாக ஏற்றுக்கொள்ளும் நாடுகளான பிரான்ஸ், அவுஸ்திரேலியா, கனடா, லண்டன் போன்ற நாடுகளுக்கு அனுப்பி வையுங்கள்.

இவ்வாறு உருக்கமாக இந்திய அரசிடம் தமிழக வாழ் அகதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த 27,28ஆம் திகதிகளில் தமிழ் நாட்டிலுள்ள மூன்று அகதிகள் முகாம்களிலும் தொண்டு நிறுவனம் சார்பில் பாலியல் வன்கொடுமை விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பற்ற கடற்பயணங்களைத் தவிர்ப்பது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகள் இடம் பெற்றன.

எங்களின் குழந்தைகளும் இவ்வாறு தொடர்ந்து அவல வாழ்வு வாழப் போகின்றார்களே... என்ற அச்சம் எங்களைத் தொடர்ச்சியாக துயரத்தில் தள்ளி வருகின்றது. நிரந்தரமான தொழில்கள், வருமானம் எதுவுமின்றி எவ்வளவு காலம்தான் எங்களால் வாழ முடியும்? இதனை இந்திய அரசு உணர்ந்து கொள்ள வேண்டும் என்று லேனாவிலக்கு முகாமிலுள்ள வயதான தாயார் ஒருவர் கண்ணீர் மல்கத் தெரிவித்தார்.

விழிப்புணர்வு நிகழ்வின் இறுதியில் தமிழக முகாம்களில் வாழ்கின்ற ஈழத் தமிழ் மக்களின் பொதுவான கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் வழங்கப்பட்டது. (அ-2)

# விசேட பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் கடந்த 2002 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பருவகாலப் பரீட்சைகளில் (Semester) சித்தியடையத்தவறிய மாணவர்களுக்கு பரீட்சை எழுதுவதற்கு ஓர் இறுதிச் சந்தர்ப்பம் வழங்கியுள்ளது.

எனவே மாணவர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் மே மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இதனை தவறவிடும் மாணவர்களுக்கு இன்னுமொரு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது எனவும் மேலதிக விபரங்களுக்கு நிர்வாகப் பகுதியுடன் தொடர்புகொள்ளுமாறும் கேட்டுள்ளார் அந் நிறுவன உதவிப் பணிப்பாளர். (அ)

# பிரமந்தனாறு பகுதியில் சட்டவிரோதமாக மண் அகழ்வு

(ஆனையிறவு)

கண்டாவளை பிரதேச செயல கத்துக்கு உட்பட்ட பிரமந்தனாறுப் பகுதியில் அண்மைக்காலமாக சட்ட விரோத மண் அகழ்வு, மரம் அறு த்தல் என்பன தொடர்ச்சியாக இடம் பெற்று வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறாக சட்ட விரோதமான முறையில் இடம் பெறும் மணல் அகழ்வால் மழை காலங்களில் அசாதாரண நிலை காணப்படுகிறது. அத்துடன் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

ஆகவே இத்துறை சார்ந்த அதி காரிகள் மேற்குறித்த விடயத்தில் கவனமெடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதே அப்பகுதி மக்களின் வேண்டுகோளாகும். (அ-3-264)




கோண்டாவில் தில்லையம் பதி அருள் மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோவில் திருமண மண்டபம் நேற்றைய தினம் திருப்பணிச் செல்வர் முத்தன் இராசனின் புதல்வர் பிரபாகரன் குடும்பத்தினரால் மங்களகரமாகத் திறந்து வைக்கப்பட்டபோது... (படங்கள் : உ.சாளீன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தலைசிறந்த மாணவன்



ஆரவில்லி மலைத் தொடரின் அடிவாரத்திலிருந்த அழகாபுரி இராச்சியத்தை ஆண்டு வந்த மன்னன் விஜயசிம்மனுக்கு பிரசன்ன என்ற மகன் இருந்தான். விஜயசிம்மனும் ராணியும் பிரசன்னனை மிகவும் பிரியத்துடன் வளர்த்து ஆளாக்கினர்.

சிறிய வயதில் அரண்மனையிலேயே குருவிடம் பயின்று வாலிபனான பிரசன்னனை அதன்பின்பு விஜயசிம்மராஜா சர்வஞானி என்ற மிகப்புகழ்பெற்ற குரு நடத்திவந்த குருகுலத்திற்கு அனுப்பி வைத்தார்.

சர்வஞானி தன்னுடைய எல்லா மாணவர்களையும் அவர்களுடைய அந்தஸ்தைப் பாராமல் சமமாகப் பாவித்தார். ஒவ்வொரு மாணவனின் தகுதி, திறமை, அறிவு ஆகியவற்றை நன்கு ஆராய்ந்து அதன் பின்பு அவனை அதற்கேற்ற துறையில் வல்லவனாக்குவதே அவருடைய தனிச்சிறப்பாக இருந்தது.

ஒருநாள் சர்வஞானி ஆரவல்லி மலையில் இருந்து ஒரு குறிப்பிட்ட மூலிகையை எடுத்துவருமாறு எல்லா மாணவர்களையும் பணித்

## அம்புலிமாமா கதைகள்

தார். அது அவர்களுடைய வீரத்தையும் சாமர்த்தியத்தையும் சோதிப்பதற்கான சோதனை. எனவே மலையில் வசித்து வந்த ஆதிவாசிகள் அந்த மலையைத் தங்கள் தெய்வமாக நினைத்து வந்ததோடு அந்நியர் எவரையும் அந்த மலையில் இருந்து மூலிகை பறிக்க அனுமதிப்பதில்லை. ஆகவே எப்படியாவது அந்த மூலிகைகயைக் கொண்டு வருபவனே தன் சோதனையில் தேர்ச்சி பெறுவான் என்று அறிவித்தார்.

எல்லோரும் புறப்பட்டுச் சென்ற பின்பும் இளவரசன் பிரசன்னன் மட்டும் செல்லாமல் இருப்பதைக் கண்ட குரு ஏனப்பா நீ ஏன் போகவில்லை. இந்தச் சோதனையில் வெற்றிபெற விரும்பவில்லையா என்று கேட்டார்.

அதற்கு இளவரசன் அப்படியில்லை குருவே! நான் இளவரசன். எதிர்காலத்தில் இராச்சியத்தை ஆளப்போகிறவன். நான் ஒரு வேளை இதில் வெற்றி பெற முடியா மல் போனால் அது எனக்கு மிகப் பெரிய அவமானம் ஆகிவிடுமே என்று யோசிக்கிறேன் என்றான்.

இதென்ன நீ இப்படிப் பேசுகிறாய்? உன் திறமை மீது உனக்கே நம்பிக்கையில்லையா? அப்படிப் பட்டவன் நாளைக்கு ஒரு இராச்சியத்தை எவ்வாறு ஆளப்போகிறாய் என்றார் குரு.

குருவின் சொற்கள் இளவரசனுக்கு சுரீரென்று தைத்தன. உடனே அவன் காற்றினும் வேகமாக ஆரவல்லி மலையை நோக்கிச் சென்றான். மலையின் மீது அவன் ஏறத் தொடங்கியதும் எங்கிருந்தோ வந்த ஆதிவாசிகள் அவனைச் சூழ்ந்து கொண்டு



கட்டியிழுத்து தங்கள் தலைவனிடம் கொண்டு சென்றனர். அங்கு பார்த்தால் அவனுடைய சக மாணவர்கள் அனைவரும் கைகள் கட்டப்பட்டு கைதிகளாக தலைகுனிந்து நின்றனர்.

யாரடா நீ? எதற்காக இங்கு வந்தாய் என்று தலைவன் எகத்தாளமாக கேட்கவும் இளவரசனுக்கு கோபம் மூண்டது. நான் யாரென்பதை உனக்குக் காட்டுகிறேன். முதலில் என் கட்டை அவிழ்த்துவிடு. தனியாக வந்த என்னை நூறு ஆட்களாக வந்து பிடிப்பது வீரத்தின் அழகா? இப்படிச்செய்ய உனக்கு வெட்கமாக இல்லை. நீயெல்லாம் தலைவனா? என்று பொரிந்து தள்ளினான்.

அவன் துணிச்சலைக் கண்டு வியந்த ஆதிவாசிகளின் தலைவன் அவன் கட்டுக்களை அவிழ்க்க அடுத்தகணமே இளவரசன் தலைவன் மீது பாய்ந்து நீ தலைவன் என்பது உண்மையானால் என்னிடம் தனிக்குத் தனியாக சண்டையிட்டு உன் வீரத்தைக் காட்டு என்று உறும இருவருக்கும் மல்யுத்தம் தொடங்கியது.


தங்கள் தலைவனுடன் ஊர், பேர் தெரியாத இளைஞன் ஒருவன் சண்டையிடுவதைக்கண்டு ஆதிவாசிகள் கோபத்துடன் இளவரசனைக் கொல்லமுயல தலைவன் தடுத்துவிட்டான். சிறிது நேரப்போருக்குப் பின் ஆதிவாசிகளின் தலைவன் எழுந்திருக்க இயலாதளவுக்கு இளவரசன் அவனை அமுக்கிப்பிடிக்க தலைவன் தன் தோல்வியை ஒப்புக் கொண்டான். பின்பு இளவரசனை கனிவுடன் நோக்கிய தலைவன் தம்பி! உன்னுடைய வீரத்தையும் வேகத்தையும் பாராட்டுகிறேன். வீரர்களைக் கௌரவிப்பது என் வழக்கம். உன்னை எனக்கு மிகவும் பிடித்துவிட்டது. நீ என்ன வேண்டுமென்றாலும் கேள் தருகிறேன் என்றான்.

உடனே இளவரசன் குருகொண்டுவரச்சொன்ன மூலிகையைக் கேட்க உடனே தலைவன் அதைத் தந்து விட்டான். இன்னும் என்ன வேண்டும் கேள்! என்று தலைவன் சொல்ல என்னுடைய குருகுலத் தோழர்கள் அனை



வரையும் விடுதலை செய்ய வேண்டும் என்றான். உடனே தலைவன் அனைவரையும் விடுதலை செய்து இளவரசனையும் ஏனைய வர்களையும் சகல மரியாதையுடன் திருப்பி அனுப்பினான்.

குருவிடம் மூலிகையை இளவரசன் கொடுக்க ஏனைய மாணவர்கள் இளவரசன் எப்படி மூலிகையை பெற்றான் என்பதை விளக்கி அவனை வானளாவப் புகழ்ந்தனர். அதைக் கேட்ட பின் குருவும் தன்னை மனமாரப் பாராட்டுவார் என்று எதிர்பார்த்த



இளவரசன் ஏமார்ந்தான். குரு வாயே திறக்கவில்லை. மற்றொரு நாள் குருகுலத்தின் இரவு நேரங்களில் புகுந்து மாடுகளைத் தாக்கி வந்த புலியை நேர் கொண்டு கொன்றுவிட்டு வந்தபோதும் குரு அவனை ஒரு வார்த்தைகூடச் சொல்லிப் பாராட்டவில்லை. கடைசியில் குருகுலத்தில் கல்வி பயிலும் காலமும் முடிந்தது. இளவரசன் குருவிடம் விடை பெற்றுக் கொள்ள வந்தான். இருவர் மட்டுமே தனியாக இருக்க குரு அவனிடம் பிரசன்னா! நான் உனக்கு இட்ட சோதனைகளில் எல்லாம் நீ சிறப்பாகத் தேர்ச்சி பெற்று இது வரை நான் உன்னைப் பாராட்டியதேயில்லை. அதனால் நீ மிகவும் ஏமாற்றமடைந்திருப்பதை அறிவேன். இப்போது நீ என்னிடம் விடை பெறும் தருணம் வந்து விட்டதால் உன்னிடம் அதைப் பற்றிக் கூறுகிறேன். நீ அரசாளப் பிறந்தவன். ஏனையவர்களுடைய பாராட்டை எதிர் பார்த்து பணியாற்றுவது உனக்கு அழகல்ல. அப்படி எதிர்பார்ப்பது உன் பலவீனத்தைக் காட்டுகிறது. ஒருவர் உன்னைப் பாராட்டவேண்டும் என்று எதிர்பார்த்து நீ வேலை செய்தால் உன்னால் மனதளவில் உறுதியாக வளர்ந்து திறமையாக கடமையைச் செய்ய முடியாது. நான் உன்னைப்புகழ்ந்தால் அதற்கு மறைமுகமாக நீ உன்னால் முடிந்தளவு சாதித்து விட்டாய் என்று நான் உனக்கு உணர்த்துவது பொருளாகும். ஆக, அதற்கு மேலும் சாதிக்க வேண்டும் என்று உத்வேகம் இல்லாமல் போய்விடும். நான் மௌனமாக இருந்தால் இதற்கெல்லாம் பாராட்டை எதிர்பார்க்காதே! நீ இன்னும் பெரிய பெரிய விடயங்களை சாதிக்கவேண்டும் என்று பொருளாகும். மென்மேலும் சாதிக்கவேண்டும் என்ற உந்துதல் இருந்தால்தான் நீ பிரமாண்ட வளர்ச்சி பெறமுடியும். ஆகவே உன் நன்மைக்காகவே நான் மௌனம் சாதித்தேன். மேலும் புகழ்ச்சி பல நேரங்களில் ஒருவனது கர்வத்தை அதிகரிக்கவே உதவுகிறதே தவிர அவன் வீரத்தை வளர்ப்பதில்லை. இப்போது நான் மனம் திறந்து சொல்கிறேன். என்னுடைய மாணவர்களிலேயே தலைசிறந்த மாணவன் நீதான். வீரத்திலும் அறிவிலும் திறமையிலும் உனக்கு நிகராக வேறு யாரையும் நான் கண்டதில்லை. உன்னுடைய இந்த வீரம், அறிவு, திறமை ஆகிய அனைத்தும் இந்த இராச்சியத்திற்கு பூரணமாகப் பயன் படுமாறு ஆட்சி செய். உன்னுடைய ஆட்சியில் எதிர்காலத்தில் மக்கள் நலமுடன் வாழட்டும்! என்று அவனை ஆசிர்வதித்து அனுப்பினார். மனநிறைவுடனும் புதிய உத்வேகத்துடனும் பிரசன்னன் அரண்மனைக்குத் திரும்பினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாமன்னன் சங்கிலியன்

29



## முத்துச் சலாபம்

"போர்த்துக்கேயர் தங்களிடம் முத்துக்களை வாங்க ஆசைப்படுகின்றனர். அனுமதிக்கலாமா?"

"இம்முறை முடியாது... அடுத்தமுறை அரச சபையில் யோசிப்போம்"

இளம் சிங்கன் ஏமாற்றத்துடன் விடைபெற்றான்.

யாழ்ப்பாண இராச்சியத்தின் முத்துக்களுக்கு நிலவுகின்ற உலகப் புகழை மன்னன் அறிவான்.

தேடி வந்த ஜோர்டன்ஸ் என்ற பாதிரியார் எண்ணாயிரம் படகுகள் முத்துக் குளியலில் ஈடுபட்டிருப்பதாகக் குறித்துள்ளார். நமது முன்னோன் ஆரியச் சக்கரவர்த்தி ஒருவரைச் சந்தித்த இபன்பததுத்தா என்ற யாத்திரிகன் ஆரியச் சக்கரவர்த்தியிடம் பெரிய முத்துக்கள் நிறைய இருந்தன என எழுதியுள்ளாராம். எகிப்து மகாராணி ஒருத்தி யாழ்ப்பாணத்து முத்தை அராபிய வியாபாரியிடம் வாங்கி பாலில் கலந்து குடிப்பாளாம்.

முத்து வியாபாரத்துக்கு போர்த்தக்கேய்ரை அனுமதிக்க முடியாது. அவர்கள் வியாபாரம் புரியமட்டுமா வந்தார்கள்? மக்களை மதம் மாற்றவும் வந்தார்கள். தமது மதத்தை தழுவ வைப்பதன் மூலம் தம் ஆதிக்கத்தையும் ஏற்க வைத்து விடுவார்கள். அதற்கு ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

முன்னோன் செயவீர சிங்கை ஆரியன் காலத்தில் கம்பளையை தலைநகராகக் கொண்டு தென்னிலங்கையை ஆண்ட புவனேகபாகு முத்துச் சலாபத்தைத் தனதாக்க படையெடுத்தான். தோல்வியே கிடைத்தது. யாழ்ப்பாண அரசர்கள் தமது ஏகபோக உரிமையை விட்டுக் கொடுக்கவில்லை.

மன்னார்க் குடாக்கடலில் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை முத்துக்குளியலில் ஈடு படும் நாவாய்கள் மிதந்தன. ஒவ்வொரு நாவாயிலும் ஐந்துபேர் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் பட்டங்கட்டி எனும் முத்துக்குளிப்பவன். அவன் தன் அரையில் கயிற்றின் ஒரு முனையையும் பாரமான ஒரு கல்லையும் கட்டிக்கொண்டு கையில் ஒரு பறியையும் காவிக் கொண்டு கடலில் குதித்தான். கயிற்றின் மறு முனையை படகிலிருந்த மற்ற இருவரும் பற்றி இருந்தார்கள். பட்டங்கட்டி முத்துச்சிப்பிகளைப் பொறுக்கி முடித்ததும் கயிற்றை அசைப்பான். கயிறு இழுக்கப்படும்.

கயிற்றைப் பிடித்திருப்பவர்கள் பட்டங்கட்டியின் மைத்துனர்கள். நம்பிக்கையானவர்கள்.

பார்த்துக்கொண்டிருந்தான் சங்கிலி. தண்ணீருக்கு மேல் வந்த பட்டங்கட்டி பறியில் சேகரித்த சிப்பிகளைப் படகில் கொட்டிவிட்டு மீண்டும் சிப்பி பொறுக்க கடலில் ஆழ்ந்தான். இடையில் கட்டியிருந்த கல் நீருள் வேகமாக ஆழ்த்தியது.

மாலைவரை சிப்பி பொறுக்கப்பட்டது. அரச கண்காணிகளின்மேற்பார்வையில் முத்துக்குளித்தல் நடை பெற்றது. நாவாய்கள் சிப்பிகளுடன் கரைசேர்ந்தன. அரசனின் போர்வீரர்களின் உதவியுடன் அச்சிப்பிகள் பிரிக்கப்பட்டன. அரைப்பங்கை அரசனுக்கு ஒதுக்கினர். மிகுதியை நாவாயிலுள்ளவர்கள் பங்கிட்டனர்.

அரசனின் முத்துச்சிப்பிகள் பிளக்கப்பட்டன. சமையற்காரர் பிளந்த சிப்பிகளின் சதைகளைப் பெற்று போக வந்தார்கள். அன்று சிப்பிக் கறியுடன் சோறு பரிமாறப் பட்டது.

முத்துச்சிப்பி ஒன்றைப் பிரித்த காவலாளி ஒருத்தன் "ஆ" வென வாயைப் பிளந்தான்.

"கரு முத்து..."

சங்கிலி ஆவலோடும் அதிசயத்தோடும் அந்த கரும் தரளத்தைப் பார்த்தான். முத்துக்களிடையே ஓர் அதிசய பிறப்பு.

உரிமையாளன் கரு முத்தை வைத்திருக்கக் கூடாது என்கிறது சாஸ்திரம். துயரம் வருவதற்கான முன்னறிவிப்பு ...விற்றுவிடுங்கள்..." என்றான். சாத்திரி.

தவசி திப்பையைச் செட்டி முந்நூறு பர்தாங் போர்துக் கேயப் பொற்காசுகள் கொடுத்து உடன் வாங்கிக் கொண்டார். அவர் போன கையோடு ஒரு காவலாளி வந்து வணங்கினான்.

"என்ன?"

"மாதோட்ட முதலியார் தங்கள் சமூகத்தை வேண்டுகிறார்."

"வரச்சொல்."

தாரைதப்பட்டை பொற்கொடியோடு மாதோட்ட முதலியார் வந்தார்.

"வருக முதலியாரே."

"தங்கள் சமூகத்திற்கு வணக்கம் மன்னா"

"என் பெயர் மகித்தன்... மகித்தன் முதிலி மாதோட்ட முதலி..."

"சந்தோசம்...வந்த காரணம்?"

உங்கள் ஆட்சியில் குறை காண இயலாது. ஆனால், அதிகாரிகள் தம் எண்ணப்படி நிர்வகிக்கின்றனர். நான் வந்த விசயத்தை மட்டும் கூறுகிறேன். முடிவு உங்களைப் பொறுத்தது... மன்னார் அதிகாரி இளம்சிங்கன் தன் எண்ணப்படி நடக்கிறார். மன்னார்த்தீவில் தோட்ட வெளிக் கிராமத்தில் உள்ள 99 குடும்பங்களைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் மதம் மாறி விட்டனர். அதிகாரி இளஞ்சிங்கனும் மதம் மாறிவிட்டான். தலைவன் எவ்வழி மக்கள் அவ்வழி...நகரத்தில் போர்த்துக்கேயர்கள் வியாபாரம் செய்கிறார்கள். வந்து போகிறார்கள். மன்னாரில் திருக்கேதீஸ்வரத்தில் பரவிக் கிடக்கும் சிவன் கோயில் கல்லைக் கொண்டு கோட்டை கட்டவும் அனுமதிக்கவுள்ளார். முதலிமார்களை மதிப்பதில்லை...

செங்கை ஆழியான்

(தொடரும்)

# படைச்செறிவு உணர்த்துவது?

வடக்கு கிழக்கிற்தான் ஒட்டு மொத்த படைகளின் பெரும்பகுதி நிலை நிறுத்தப்பட்டுள்ளது என்பது ஆச்சரியமான விடயமல்ல.

இரண்டு இலட்சம் பேரைக் கொண்ட இலங்கை இராணுவத்தில் ஒன்றரை இலட்சம் பேர் வடக்கு கிழக்கில் நிலை கொண்டுள்ளதாக ரைம்ஸ் ஒவ் இந்தியாவுக்கு பேட்டி அளித்தது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரனிடம் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கடந்தவாரம் விசாரணை நடத்தியிருந்தனர்.

இவர், இராணுவ இரகசியங்களைவெளியிட்டார் என்றகோணத்திலேயே விசாரிக்கப்பட்டிருந்தார்.

ஒன்றரை இலட்சம் இராணுவத்தினர் வடக்கு,கிழக்கில் நிலைகொண்டுள்ளனர் என்று அவர் கூறிய எண்ணிக்கை,சிலவேளைகளில் சரியாக இருந்திருக்கலாம்.

ஆனால், வடக்கு, கிழக்கில் படைக்குவிப்பு இல்லை என்றும், ஏனைய பகுதிகளைப்போல் தான் அங்கும் நிலை கொண்டுள்ளனர் என்றும் அரசாங்கம் கூறுவது சரியானால், சுரேஸ் பிரேமச்சந்திரன் கூறிய கணக்கு நிச்சயம் இராணுவ இரகசியமாக இருந்திருக்க முடியாது.

ஏதோ ஒருவகையில் அவரது கணக்கு உண்மையான இராணுவ இரகசியத்துடன் ஒத்துப் போயிருந்திருக்கலாம்.

அதேவேளை, வடக்கில் படைக்குவிப்பு தொடர்பாக வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட வுள்ள தயா மாஸ்டரிடம் இந்தியன் எகஸ்பிரஸ் கேள்வி எழுப்பியபோது அது ஆதாரமற்ற குற்றச்சாட்டு என்று பதிலளித்துள்ளார். அவ்வாறாயின் அவரது பார்வைக்கு படைக்குவிப்பு என்பது பொய்யானது என்றே பொருள். இந்நிலையில், போர் முடிவுக்கு வந்தபின்னர், வடக்கு, கிழக்கில் எவ்வளவு படையினர் நிலை கொண்டுள்ளனர் என்ற ஆதாரபூர்வமான ஒரு ஆய்வை மேற்கொள்வது பொருத்தமானது.

இலங்கை இராணுவத்தில் மொத்தம் 6 பிராந்தியப் படைத்தலைமையகங்கள் உள்ளன.

அவற்றில் யாழ், கிளிநொச்சி, முல்லைத்தீவு,வன்னி, கிழக்கு என ஐந்து படைத் தலைமையகங்கள் வடக்கு,கிழக்கிற் தான் உள்ளன.

எஞ்சிய ஒரே ஒரு படைத்தலைமையகம் மட்டுமே தெற்கில் செயற்படுகிறது.

படைத்தலைமையக ரீதியாக பார்த்தால், ஆறில் ஐந்து படையினர் வடக்கு, கிழக்கில்தான் நிலை கொண்டிருக்கவேண்டும். டிவிசன்கள், அரை நிலை டிவிசன்கள் (அதிரடிப்படைப் பிரிவு) என்று பார்த்தால், மொத்தமுள்ள 18 இல் 17 டிவிசன்களும் வடக்கு கிழக்கிற்தான் உள்ளன. அதாவது 22, 23, 51, 52, 53, 54, 55, 56,57, 58, 59, 61, 62, 63, 64,65,66வது டிவிசன்களே அவையாகும்.11வது டிவிசனும் சில பிரதேச படைத் தலைமையகங்களும் மட்டும் தான் பிற பகுதிகளில் நிலை கொண்டுள்ளன. இந்தவகையில் 18 இல் 17 பங்கு படையினர் வடக்கு கிழக்கில் தான் நிலை கொண்டிருக்க வேண்டும்.



பிரிகேட் என்ற வகையில் கணக்கெடுப்பு நடத்தினால், இலங்கை இராணுவம், காலாற்படை மற்றும், சிறப்புப்படை, கொமாண்டோ படை என்று மொத்தம் சுமார் 53 வரையான பிரிகேட்களை கொண்டுள்ளது. இவற்றில், வன்னிப் படைத் தலைமையகத்தின் கீழ் 14 பிரிகேட்களும், கிளிநொச்சிப் படைத்தலைமையகத்தின் கீழ் 12 பிரிகேட்களும், முல்லைத்தீவுப் படைத் தலைமையகத்தின் கீழ் 7 பிரிகேட்களும், யாழ். படைத்தலைமையகத்தின் கீழ் 10 பிரிகேட்களும், கிழக்குப் படைத் தலைமையகத்தின் கீழ் 10 பிரிகேட்களும் என மொத்தம்– 53 பிரி கேட்கள் வடக்கு, கிழக்கில்தான் உள்ளன. பற்றாலியன்களின் கணக்குப்படி, இலங்கை இராணுவத்தில் உள்ள மொத்தம் 277 பற்றாலியன்களில் பெரும்பாலானவை வடக்கு, கிழக்கில் தான் உள்ளன. இவற்றுள் நிரந்தர, தொண்டர், சேவை, மருத்துவ, புலனாய்வு, ஆட்டிலறி, கவசப் படைப் பிரிவுகள் என்று அனைத்துப் படைப் பிரிவுகளும் உள்ளடங்குகின்றன. இந்த 277 பற்றாலியன்களில் வன்னிப் படைத்தலைமையகத்தின் கீழ் 43பற்றாலியன்களும், கிளி நொச்சிப் படைத்தலைமையகத்தின் கீழ் 39 பற்றாலியன்களும், கிழக்குப் படைத் தலைமையகத்தின் கீழ் 48பற்றாலியன் களும் இருப்பதை அந்தந்த பிரதேச படைத்தலைமையகங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. ஆனால், முல்லைத்தீவிலும், யாழ்ப்பாணத்திலும் உள்ள பற்றாலியன்களின் அதிகாரபூர்வ கணக்கு இல்லை. எனினும், முல்லைத்தீவில் 7 பிரிகேட்கள் உள்ள நிலையில், குறைந்தது 21-26 வரையிலான பற்றாலியன்கள் அங்கு நிலை கொண்டிருப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன. அதே வேளை, யாழ்ப்பாணத்தில் 10 பிரிகேட்கள் உள்ளமையால், குறைந்தது 30 தொடக்கம் 35 வரையிலான பற்றாலியன்கள் அங்கிருப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன. இந்த வகையில் வடக்கு, கிழக்கில் மட்டும், 190 ற்கு குறையாத பற்றாலியன்கள் நிலைகொண்டிருக்கவேண்டும். இவற்றில், தற்போது றிசேவ் நிலைமையில் வைக்கப்பட்டுள்ள,53 வது மற்றும் 58வது டிவிசன்களை சேர்ந்த பற்றாலியன்கள் உள்ளடக்கப் படவில்லை. அவற்றையும் சேர்த்தால் இந்த எண்ணிக்கை 200 பற்றாலியன்களையும் தாண்டும். அதாவது, இலங்கை இராணுவத்தின் ஒட்டு மொத்த பற்றாலியன்களின் எண்ணிக்கையில், நான்கில் மூன்று பங்கு வடக்கு, கிழக்கில் நிலை கொண்டிருப்பது உறுதியாகிறது.

இலங்கை இராணுவத்தில் சராசரியாக ஒரு பற்றாலியனில் 600 படையினர் வரை இருப்பது உண்டு. சிலவற்றில் இந்த எண்ணிக்கை 800 வரை இருக்கும். சராசரியாக 600 பேர் ஒரு பற்றாலியனில் இருப்பதாக கணக்கிட்டாலும், 200 வரையிலான பற்றாலியன்களிலும் குறைந்தபட்சம், 1 இலட்சத்து 20 ஆயிரம் படையினர் வடக்கில், கிழக்கில் நிலை கொண்டிருக்க வாய்ப்புகள் உள்ளன. இந்தக் கணக்கில், விமானப்படை, கடற்படை, பொலிஸ், விசேட அதிர டிப் படை, ஊர்காவல் படை என்பன உள்ளடக்கப்பட வில்லை. இவற்றையும் சேர்த்தால், அது மிகப் பெரிய தொகையை எட்டும்.

ஏனென்றால், வடக்கு, கிழக்கில் கடற்படையும் விமானப்படையும், பாரிய தளங்களையும், பெருமளவு படையினரையும் கொண்டுள்ளன.

அவற்றில் ஆயிரக்கணக் கான படையினர் உள்ளனர்.

இந்த நிலையிலேயே அரசாங்கமும் படைத்தரப்பும், வடக்கு, கிழக்கில் படையினர் குவிக்கப்பட்டிருக்கவில்லை என்றும்,ஏனைய பகுதிகளைப் போலவே அங்கும் நிலை கொண்டுள்ளதாகவும் கூறி வருகின்றனர்.

ஆனால், இந்தக் கணக்கை வெளியுலகம் நம்பப்போவதில்லை.

யாழ்.குடாநாட்டில் இப்போது 13,500 படையினர்மட்டுமே இருப்பதாக யாழ்.படைத்தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க கூறியிருந்தார். ஆனால், யாழப்பாணத்தில் குறைந்தது30 பற்றாலியன்கள் மட்டுமே இருப்பதாக கணக்கிட்டால் கூட,18 ஆயிரத்துக்கும் குறையாத படையினர் அங்கு நிலை கொண்டிருப்பர். இதற்குள்ளேயும்விமானப்படை, பொலிஸ், கடற்படை என்பன உள்ளடக்கப் படவில்லை.

போர் முடிந்து நான்கு ஆண்டுகளாகியும், வடக்கு, கிழக்கில் குறைந்தது இரண்டு இலட்சம் வரையிலான ஆயுதப்படையினரை நிறுத்தி வைத்துள்ளது. அரசாங்கம், 26 இலட்சம் பேரைக்கொண்ட வடக்கு, கிழக்கில் சுமார் 2 இலட்சம் ஆயுதப் படையினர் நிலை கொண்டிருக்கின்றனர். இது,13 பேருக்கு ஒரு இராணுவம் எனறவிகிதத்தில் அமைகிறது.

-சுபத்ரா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலஸ்ட்ரோலைக் குறைக்க...

உணவே மருந்து

நம்மில் பலரும் நோய் முற்றி, முடியாத நிலையில் மட்டுமே டாக்டரிடம் ஓடுகிறோம். நாற்பது வயது ஆகிவிட்டாலே வருடம் ஒருமுறை உடலை முழுவதும் பரிசோதனை செய்ய வேண்டும் என்னும் நிலை மாறி சிறிய வயதிலிருந்தே வருடம் ஒரு முறை ஹெல்த் பரிசோதனை செய்தால் பல பிரச்சினைகள் வராமல் தடுக்கலாமென்ற நிலை வந்து விட்டது. உங்களுக்குத் தெரிந்த பத்து நபரை கொலஸ்ட்ரோல் பரிசோதனை செய்யச் சொல்லுங்கள். பயந்து விடுவீர்கள்- அதில் ஆறு பேருக்கு கொலஸ்ட்ரோல் அதி கம் உள்ளதைப் பார்த்து.

முதலில் கொலஸ்ட்ரோல் என்றால் என்ன என்று தெரிந்து கொள்வோம். மஞ்சள் நிறமான மெழுகு போன்ற ஒருவகை கொழுப்பு இரத்தத்தின் மூலமாக உணவில் இருந்து கடத்தப்பட்டு உடலில் உள்ள இரத்தக் குழாய்களில் படிந்துவிடும். அதே இடத்தில் கொழுப்பு சேரச்சேர குழாய்களில் அடைப்பு ஏற்படுவதால் அது சுலபமாக அமைகிறது.

மருந்து-மாத்திரைகளின் மூலம் கொலஸ்ட்ரோலை கரைப்பது ஒரு வழியாக இருந்தாலும் உணவுக் கட்டுப்பாட்டின் மூலமாகவும் குறைக்க முடியு மென்று பல ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன.

**உணவில் கட்டுப்பாடு என்றால்...**

* முதலில் அடர்த்தி குறைவாகவுள்ள கொழுப்புகளை (மிதக்கும் தன்மை உடைய கொழுப்புகள்) கட்டாயம் தவிர்க்க வேண்டும். திரவ நிலையில் உள்ள அடர்த்தி அதிகமான கொழ்ப்புகளை உடல்தேவைக்கேற்ப மட்டுமே எடுத்துக் கொள்ள வேண்டும்.


வெண்ணெய், மாஜரின் போன்றவகை கொழுப்புகள் சுலபமாக கொலஸ்ட்ரோலாக உடலில் மாற்றப்பட்டு விடும். (இதை கெட்ட கொலஸ்ட்ரோல் என்று கூறுவர். Law Density Lifio Protein பிராணிகளிலிருந்து எடுக்கப்படும் எல்லாக் கொழுப்பையும் தவிர்க்க வேண்டும்.

அடுத்ததாக நேரடி கொலஸ்ட்ரோலாக நமது உடலில் நுழைபவை மாமிச உணவுகள் முட்டை, பால், பாற்பொருட்களான சீஸ், பனீர் போன்றவை பாற்பொருட்க்ளில் தயிரைத் தவிர்த்தல் நலம். கொழுப்பு நீக்கப்பட்ட தயிரில் இருந்து தயாரிக்கும் மோரை எடுத்துக் கொள்ளலாம்.

எல்லா விதமான சுண்டல் வகைகளிலுமுள்ள புரதம், நார்ச்சத்து கொலஸ்ட்ரோலைக் குறைக்க உதவுகிறது. சோயாபீன்சில் முக்கியமாக கொலஸ்ட்ரோலைக் குறைக்கச் செய்யும்புரதம்உள்ளதாகவும்அதுசோயாப் பால், சோயா பனீர், சோயா உருண்டைகளென்று எதை எடுத்துக் கொண்டாலும் நல்லதே செய்யும் என்றும் பல புத்தகங்களில் குறிப்பிடப்படுகின்றது.

ஓட்ஸ் மற்றும் ஓட்ஸ் தவிடு (Oatbran) இதிலுள்ள பீட்டா குளுகான் எனப்படும் கரையும் தன்மையுள்ள நார்ச்சத்து கொலஸ்ட்ரோலை இரத்தத்தில் இருந்து வெளியேறச் செய்யும்.

(இதைப்போல ஜெலி போல வளவளப்பைத் தரும் எல்லா உணவுகளும் நன்மை செய்யும். உதாரணம்: வெந்தயம், பாதாம் பிசின் போன்ற உணவுகள்




* தினமும் நான்கு அல்லது ஐந்து பல் பூண்டு பச்சையாகவோ இடித்து தாளித்து சேர்த்தோவேக வைத்தோ சேர்ப்பது இரத்தத்தில் உள்ள தேவையற்ற கொழுப்பைக் கரைத்து இரத்தத்தின் அடர்த்தி யைக் குறைக்கும்.

* தினமும் பாதி வெங்காய த்தை பச்சையாகவே உணவில் சேர்ப்பது நன்று. அது கொலஸ்ட்ரோலைத் குறைக்கிறது என்று பல விஞ்ஞானிகள் கண்டறிந்து கூறியுள்ளனர்.

* ஒருசில மீன் வகைகளை உண்ணும் போது அதில் உள்ள ஒமேகா 3 எனும் கொழுப்பு கொலஸ்ட்ரோலைக் குறைக்க உதவி புரியும்.

* ஏனைய எண்ணெயைக் குறைத்து கொலஸ்ட்ரோல் உள்ள நோயாளிகள் தினசரி தேவையான அளவு மட்டும் ஒலிவ் எண்ணெய் உபயோகப்படுத்தினால் கட்டாயம் குறையுமென நிரூபிக்கப்பட்டுள்ளது.

* நமது நாட்டில் உள்ள நல்லெண்ணெய்க்கும் இதய நோய்களை கட்டுப்படுத்தும் சக்தி உள்ளது என்பது பல்லாண்டுகளாகவே எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

* பாதாம், அக்ரோட் இரண்டிலும் உள்ள நல்ல கொழுப்பு கொலஸ்ட்ரோலை குறைக்கும் தன்மை உடையது. இவைகளை எடுத்துக் கொள்ளும் போது கலோரிகளைக் பற்றித் தெரிந்து ஒரு நாளைய தேவைக்குள் இருக்கும்படி எடுத்துக் கொள்ளவும். வறுக்கக் கூடாது. பச்சையாகவே உண்ண வேண்டும்.

* நல்லதைச் செய்யும் பழங்கள் என்று ப்ார்த்தால் ஸ்ரோபரி, அப்பிள், ஒரேஞ், சாத்துக்குடி, புதிய ஒவ்ரிகாட், அவோகேடோ எனப்படும் பட்டர் ஃப்ரூட் போன்றவை.

* காய்கறிகளில் கரட், டர்னிப் பட்டாணி, களக்கோஸ் (brussels strouts) ப்ராக்கோலி, வெண்டைக்காய், காளான் போன்றவைகளை கொலஸ்ட்ரோலைக் குறைக்கும் காய் களாகக் குறிப்பிட்டுள்ளனர்.

* ஒரு நாளைக்கு இரண்டு கோப்பி மட்டும் அதுவும் ஃபில்டர் கோப்பி குடிப்பது பரவாயில்லை என்கின்றனர். கோப்பித்தூளை ஃபில்டர் செய்யும் போது அதில் உள்ள கொலஸ்ட்ரோலை குறைக்கும் இர்சாயனங்கள் பொடியிலேயே தங்கி விடுவதாக டச்சு நாட்டில் விஞ்ஞானிகள் நிரூபித்துள்ளனர்.

* பார்லி அரிசி, அரிசித் தவிடு (rice bran) மற்றும் தோலுடன் கூடிய கேழ்வரகு, சாமை, வரகு, கம்பு போன்ற சிறுதானியங்களில் உள்ள நார்ச்சத்தும் நலம் பயக்கும்.

* கிரீன் டீ, பிளாக் டீ போன்றவை நன்மை செய்யும்.

* ஆன்ட்டி, ஆக்ஸிடென்ட்ஸ் உள்ளதாக கூறப்படும் விற்றமின் சி மற்றும் விற்றமின் ஈ நிறைந்த உணவுகள் நலம் பயக்கும். எலுமிச்சை, ஒரேஞ், நெல்லி போன்றவை விற்றமின் சி மிகுந்தவை. எண்ணெய்வித்துக்கள்,விதைவகைகள் விற்றமின் ஈ நிறைந்தவை.

மேலே கூறியுள்ள இந்த அனைத்து விடயங்களையும் கவனமாகப் படித்து மனதில் இருத்துங்கள்.கெட்ட கொலஸ்ட்ரோலை உடலில் இருந்து முறியடிக்கலாம்.




## கடல்வள பாதுகாப்புக்கு சீனா ஒத்துழைப்பு வழங்கும்

இலங்கையின் கடல்வள பாதுகாப்புக்கு ஒத்துழைப்பு வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது. கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எக்மோ என்னும் அமெரிக்க கடற்பாதுகாப்பு திட்ட பயிற்சியை இரண்டாவது தடவையாகவும் அமெரிக்கா இலங்கைக்கு வழங்க இருக்கின்றது.

இதன்படி அமெரிக்கக் கடற்படை அதிகாரிகள் மூன்று பேரும் இலங்கையின் கடற்பாதுகாப்பு பொலிசில் இருந்து 10 பேரும் கடற்படையில் இருந்து 4 பேரும் இந்தப் பயிற்சியில் ஈடுபடவுள்ளனர்.

இதன்மூலம் இலங்கையின் பிராந்திய கடற்பரப்பின் பாதுகாப்பினை விஸ்தரிப்பதுடன் சட்டவிரோத செயற்பாடுகளை முழுமையாக கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும் என்றும் கொழும்பில் உள்ள இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் மிச்சல் ஜேசிசன் தெரிவித்துள்ளார். (அ-2)

## அரசாங்கத்திற்கு இரண்டு முகங்கள்-சஜித் எம்.பி.

அரசாங்கம் இரண்டு முகங்களைக் கொண்டது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கட்டான பிரதேசத்தில் நடைபெற்ற மின்சாரக் கட்டண உயர்விற்கு எதிரான போராட்டத்தில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

உள்நாட்டுக்கு ஒரு முகத்தைக் காட்டும் அரசாங்கம் வெளிநாட்டுக்கு மற்றொரு முகத்தைக் காட்டி வருகின்றது.

போர் வெற்றி குறித்த பிரசாரங்களைத் தவிர நாட்டில் வேறு எந்த அபிவிருத்தியும் கிடையாது. நாட்டின் அபிவிருத்தியை சோடா போத்தல் அபிவிருத்தியாக அடையாளப்படுத்த முடியும்.

மின்சாரக் கட்டண உயர்வின் மூலம் நாட்டின் அனைத்து மக்கள் மீதும் அரசாங்கம் மின்சாரத்தை பாய்ச்சியிருக்கிறது என சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். (அ-2)

## நான்கு குடும்பங்களை சீரழித்தவர் ஜனாதிபதியிடம் ஆசி பெறுகிறார்-ஹிருணிகா

நாட்டில் உண்மைக்கு இடமில்லை என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் மகள் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

நடக்கும் எல்லா விடயங்கள் பற்றியும் நாம் உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம்.

துமிந்த சில்வா தொடர்பில் தீர்மானிக்கும் ஆற்றல் ஜனாதிபதிக்கே காணப்படுகின்றது.

நான்கு குடும்பங்களைச் சீரழித்த துமிந்த சில்வா ஜனாதிபதியிடம் ஆசி பெற்றுக் கொள்ள சென்றதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதியிடம் நியாயம் கோரவுள்ளதாக ஹிருணிகா தெரிவித்துள்ளார். (அ-2)



சண்டிலிப்பாய் பிரதேச பதிவு செய்யப்பட இளைஞர் கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டப் போட்டிகளில் வெற்றிக்கிண்ணத்தை தமதாக்கிக் கொண்ட பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியினரைப் படத்தில் காணலாம். (படங்கள்: மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் க.பொ.த. சா/த - 2012 விஞ்ஞான பாடப் பெறுபேறு - ஓர் பார்வை



பேராசிரியர்
பொ. பாலசுந்தரம்பிள்ளை
முன்னாள் துணைவேந்தர்/
வாழ்நாள் பேராசிரியர்

நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு விஞ்ஞானக் கல்வியின் தரம் பரவலாக்கல் முக்கிய இடம் வகிக்கின்றது.

விஞ்ஞானக் கல்வியில் பின்னடைவு ஏற்படுமிடத்து அபிவிருத்தி, மேம்பாடு பின்தள்ளப்படும். இன்று வளர்ச்சியடைந்த நாடுகளில் கூட விஞ்ஞானக் கல்வியில் கூடிய கரிசனை செலுத்தத் தவறிவிட்டன என குறை கூறப்படுகின்றது.

| அட்டவணை 1 | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கோட்டம் | பரீட்சைக்குத் தோற்றியோர் | ஏ | பி | சி | எஸ் | டபிள்யூ |
| யாழ்ப்பாணம் | 1331 | 158 | 164 | 219 | 365 | 425 |
| நல்லூர் | 1099 | 131 | 129 | 219 | 356 | 264 |
| கோப்பாய் | 622 | 14 | 29 | 79 | 225 | 276 |
| வலயம் | 3052 | 303 | 322 | 517 | 946 | 964 |

இதனால் அந் நாடுகள் தங்களுக்குத் தேவையான பல மட்ட விஞ்ஞான வேலை படையை பிற நாடுகளில் இருந்து வரவழைக்க வேண்டியுள்ளன.

இங்கிலாந்து, ஜேர்மன், ஐக்கிய அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் பல, இந்தியா மற்றும் வளர்முக நாடுகளில் இருந்து விஞ்ஞானத்துறை சார்ந்த புலமையாளர்கள் மற்றும் ஆளணியினரை வரவழைத்துள்ளனர்.

வட மாகாணத்தில் 12 கல்வி வலயங்கள் (அட்டவணை 2) இருக்கின்றன. இவ் வலயங்களுள் விஞ்ஞானக் கல்வியில் யாழ்ப்பாண கல்வி வலயம் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

க.பொ.த. உ/த வகுப்பில் உயிரியல் விஞ்ஞானம் கற்க க.பொ.த சா/த பரீட்சையில் கணிதம் உட்பட ஆறு

| அட்டவணை 2 | | | | | |
|---|---|---|---|---|---|
| | தமிழ் | கணிதம் | விஞ்ஞானம் | வரலாறு | ஆங்கிலம் |
| யாழ்ப்பாணம் | 83.00 | 66.45 | 68.55 | 67.79 | 49.87 |
| வலிகாமம் | 77.99 | 56.13 | 54.91 | 58.37 | 28.81 |
| வடமராட்சி | 82.47 | 61.87 | 62.77 | 64.69 | 38.35 |
| தென்மராட்சி | 80.27 | 57.01 | 61.12 | 56.86 | 34.17 |
| தீவுகள் | 70.36 | 45.23 | 42.91 | 42.56 | 13.19 |
| கிளிநொச்சி | 71.13 | 41.45 | 42.16 | 44.78 | 14.08 |
| மன்னார் | 85.00 | 62.65 | 62.08 | 70.16 | 38.42 |
| மடு | 78.22 | 43.58 | 50.77 | 55.83 | 18.82 |
| வவுனியா வடக்கு | 76.79 | 39.27 | 43.80 | 58.81 | 13.09 |
| வவுனியா தெற்கு | 87.78 | 60.49 | 64.29 | 69.38 | 34.24 |
| முல்லைத்தீவு | 72.99 | 45.50 | 43.40 | 42.51 | 13.45 |
| துணுக்காய் | 72.90 | 39.34 | 34.62 | 43.58 | 6.82 |
| மாகாணம் | 79.80 | 55.57 | 56.66 | 59.45 | 30.73 |

தரவு - வடக்கு மாகாண சபை - கல்விப் பிரிவு

பாடங்கள் சித்தியடைந்து இதில் விஞ்ஞானம் உட்பட மூன்று பாடங்களில் சி சித்தி பெற்றிருக்க வேண்டும். மேலும் விஞ்ஞான பாடத்தில் சித்தி பெறாது விட்டால் கணிதத் துறையையும் தெரிவு செய்ய முடியாது. பாடசாலை மட்ட வேலைகளில் இருந்து விஞ்ஞான பாடத்திற்கு சில புள்ளிகள் வழங்கலாம். எனினும் சி சித்தி அடையாதவர்களை இப்பிரிவில் சேர்ப்பது குறைவு.

மருத்துவம், பல் மருத்துவம் இணைந்த மருத்துவக் கற்கைகள், மிருக வைத்தியம், சித்த வைத்தியம் மற்றும் பல்வேறு விவசாய, சூழலியல் கற்கைகள், உயிரியல் விஞ்ஞானப் பாடக் கற்கைகள் கற்க க.பொ.த. உ/த உயிரியல் விஞ்ஞானப் பிரிவு மாணவராக இருக்க வேண்டும்.

தமிழ் மாணவர்கள் மத்தியில் உயிரியல் கற்கும் எண்ணிக்கை குறைந்து வருவது கவலை தருவதாக உள்ளது. பல்வேறு தொழில் துறைகளில் வேலை வாய்ப்புக்கள் உயிரியல் விஞ்ஞான துறையினருக்கு இருந்தும் இத்துறை சார்ந்தவர்கள் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் பதவிகளை நிரப்ப முடியாதுள்ளது.

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் என மூன்று கோட்டங்கள் உண்டு. இக் கல்வி வலயத்தில் க.பொ.த. சா/த 2012 பரீட்சைக்கு 3173 பேர் விண்ணப்பத்து 3052 பேர் பரீட்சைக்கு தோற்றினர்.

கோட்ட அடிப்படையில் வலயத்தின் பெறுபேறுகள் அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண வலயத்தில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய 3052 பேரில் 2088 பேர் (68.5%) விஞ்ஞான பாடத்தில் சித்தியடைந்துள்ளனர். இவர்களுள் 1142 பேர் (37.42%) சி யும் அதற்கு மேல் தரங்களும் பெற்று க.பொ.த. உ/த விஞ்ஞானம் கற்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இவ் வலயம் வட பகுதியின் கல்வியில் சிறந்த வலயமாக இருப்பினும் இதன் விஞ்ஞானப் பாடப் பெறுபேறு தேசிய மட்ட சராசரியை ஒத்து இருக்கிறதேயல்லாமல் அதற்கு மேல் செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

2009 இல் 52.7% இருந்த பெறுபேறு 2010 இல் 61.72% ஆகவும் 2011 இல் 62.3% ஆகவும் 2012 இல் 68.4% ஆகவும் உயர்ந்து வந்துள்ளது பாராட்டத்தக்கது.

2012 க.பொ.த. சா/த வினாத்தாளில் ஏற்பட்ட பிழைகள் காரணமாக 19 வினாக்களுக்கு புள்ளிகள் கொடுக்கப்பட்டதும் பெறுபேற்று உயர்வுக்கு பங்களித்திருக்கலாம்.

மேலும் வலயத்துக்குள் கோட்ட அடிப்படையில் வேறுபாடுகள் இருப்பதைக் காணலாம். யாழ்ப்பாணக் கோட்டத்தில் சி யும் அதற்கு மேல் தரங்களில் 541 பேர் (40.65%), நல்லூரில் 479 (43.59%), கோப்பாய் 122 பேர் (19.61%), உயிரியல் விஞ்ஞானம் கற்கத் தகுதி பெறுகின்றனர்.

இவ் எண்ணிக்கையும் க.பொ.த. உ/த கற்க ஏனைய க.பொ.த. சா/த நிபந்தனைகளை பூர்த்தி செய்யுமிடத்தே பொருந்தும். மேலும் தகுதி பெற்றவர்களில் விஞ்ஞானக் கல்வியை கற்க சிறு பிரிவினரே முன் வருவதும் கவலைக்குரிய விடயமாகும்.

வட மாகாணத்தில் வலய மட்டத்தில் 5 பாடத்துக்குரிய சித்தி பெறுபேறுகள் விகிதத்தில் (அட்டவணை 2) தரப்பட்டுள்ளன. சமய பாடப் பெறுபேறுகள் எல்லா வலயங்களிலும் மிகவும் உயர்வாக இருப்பதால் இங்கு சேர்க்கப்படவில்லை.

அட்டவணை 2 இன் தரவுகளில் கணிதம், விஞ்ஞானம் இரண்டிற்குமிடையில் பெறுபேறுகளில் தொடர்பு காணப்படுகின்றது. இங்கு தரப்பட்ட தரவு சித்தியை குறிப்பதாக இருக்கின்றது. சி சித்தியும் அதற்கு மேல் தரவுகள் இருந்தாலே க.பொ.த. உ/த உயர்தரம் கற்ற கூடிய உண்மை நிலையை பிரதிபலிக்கும். தீவுகள், கிளிநொச்சி, வவுனியா வடக்கு, முல்லைத்தீவு, துணுக்காய் வலயங்களில் விஞ்ஞானப் பெறுபேறு மிகவும் குறைவாக உள்ளது.

யாழ்ப்பாண கல்வி வலயத்தில் பாடசாலை மட்ட பெறுபேறுகள் அட்டவணை 3 இல் தரப்பட்டுள்ளன. மொத்தம் 59 பாடசாலைகளில் 9 பாடசாலைகள் 100 மாணவர்களுக்கு மேல் பரீட்சைக்கு அனுப்பியிருந்தனர்.

இந்த 9 பாடசாலைகளில் இருந்து 1608 பரீட்சார்த்திகள் தோற்றி அவர்களுள் 940 பேர் சி சித்தியும் அதற்கு மேலும் பெற்றுள்ளனர். 1608 பேரில் 1370 பேர் (85.20%) சித்தி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மிகுதி 50 பாடசாலைகளிலிருந்து 1444 பேர் பரீட்சைக்குத் தோற்றி 199 பேர் மாத்திரம் சி யும் அதற்கு மேல் தரங்களிலும் சித்திபெற்றுள்ளனர். 1444 பேரில் 726 பேர் சித்தி பெறவில்லை.

வேம்படி மகளிர் கல்லூரி (99.15%), யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி (98.33%) சித்தி பெற்றுள்ளன. 6 பாடசாலைகளில் ஒருவராவது சி சித்தி பெறவில்லை.

பாடசாலை மட்ட பெறுபேறுகளை நோக்கும்பொழுது யாழ்.வலயம், நல்ல ஆசிரிய வளம், விஞ்ஞான ஆய்வு கூட வசதிகள், ரியூசன் வசதி, பாடசாலைகளின் நீண்ட கல்விப் பாரம்பரியம் கொண்டிருந்த நிலையில் பிரபல பாடசாலைகள் உட்பட பல பாடசாலைகள் நல்ல பெறுபேறுகளைத் தரத் தவறிவிட்டன.

இங்கு எஸ் சித்தியும் டபிள்யூ சித்தியையும் சேர்த்து பார்க்குமிடத்து பெறுபேறுகள் திருப்தி தருவதாக இல்லை. 1996 ஆம் ஆண்டிலிருந்து இடப்பட்ட உள்ளீடுகளுக்கு ஏற்ப பெறுபேறுகள் அமையவில்லை. சி யும் அதற்கு மேல் தர பெறுபேறுகள் குறைவாக இருப்பது உயிரியல் விஞ்ஞான பிரிவில் மாணவர் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு தடையாக இருக்கும்.

யாழ்ப்பாணத்திலும், வட மாகாணத்திலும் விஞ்ஞானம், கணிதம் பிரிவுகள் கற்பிக்கும் பாடசாலைகள் எண்ணிக்கை, வகுப்புக்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். விஞ்ஞானக் கல்வி வளர்ச்சிக்கும் விரிவாக்கத்துக்கும் கல்வித் துறையினர் கூடிய முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

நாட்டின் வளர்ச்சிக்கு விஞ்ஞானம், கணிதம் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையையும், கல்வித் தரத்தையும் உயர்த்துவது காலத்தின் தேவையாகும். இதை அடைவதற்கு சகல தரப்பினரும் இணைந்து செயற்பட வேண்டும்.

✱ ✱ ✱

| யாழ்.வலய பாடசாலை அடிப்படையில் விஞ்ஞான பாடப் பெறுபேறுகள் க.பொ.த. சா/த - 2012 | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Name of the School | No.sat | A | B | C | S | W | % Passed |
| 3 | J/Vembady Girls High School | 234 | 95 | 69 | 44 | 24 | 2 | 99.15 |
| 1 | J/Columbuthurai Hindu M.V | 16 | 0 | 2 | 3 | 9 | 2 | 87.5 |
| 19 | J/Chundukuli Girls' College | 125 | 19 | 23 | 35 | 29 | 19 | 84.8 |
| 18 | J/St.John's College | 157 | 22 | 24 | 40 | 43 | 28 | 82.17 |
| 20 | St.Patricks College | 156 | 13 | 21 | 29 | 44 | 49 | 68.59 |
| 4 | J/Holy Family Convent | 118 | 3 | 5 | 16 | 56 | 38 | 67.8 |
| 15 | J/St.James Girls School | 46 | 1 | 1 | 9 | 18 | 17 | 63.04 |
| 2 | J/Central College | 150 | 3 | 14 | 26 | 51 | 56 | 62.67 |
| 21 | J/Osmania College | 15 | 0 | 1 | 1 | 7 | 6 | 60 |
| 14 | J/Pasai St.Antonys Girls | 22 | 0 | 0 | 2 | 11 | 9 | 59.09 |
| 12 | J/Nallur South Vigneswara | 10 | 0 | 1 | 1 | 3 | 5 | 50 |
| 22 | J/St.Rochs Vid | 14 | 0 | 0 | 1 | 6 | 7 | 50 |
| 17 | J/Van.Navalar Vid | 21 | 1 | 0 | 2 | 7 | 11 | 47.62 |
| 6 | J/Sanmarga M.V | 10 | 0 | 0 | 1 | 3 | 6 | 40 |
| 5 | J/Vaitheeswara College | 52 | 0 | 1 | 4 | 15 | 32 | 38.46 |
| 13 | J/Navanthurai R.C.T.M.S | 46 | 0 | 0 | 1 | 15 | 30 | 34.78 |
| 11 | J/Kottady Namasivaya Vid | 19 | 0 | 0 | 0 | 5 | 14 | 26.32 |
| 7 | J/St.Charles M.V | 67 | 1 | 2 | 3 | 11 | 50 | 25.37 |
| 16 | J/St.Marys Vid | 21 | 0 | 0 | 0 | 5 | 16 | 23.81 |
| 8 | J/St.James Boys School | 12 | 0 | 0 | 1 | 1 | 10 | 16.67 |
| 10 | J/Col.Duraiyappah Vid | 8 | 0 | 0 | 0 | 1 | 7 | 12.5 |
| 9 | J/Col.St.Josephs Vid | 12 | 0 | 0 | 0 | 1 | 11 | 8.333 |
| | **Total** | **1331** | **158** | **164** | **219** | **365** | **425** | **68.07** |
| 24 | J/Hindu College | 239 | 84 | 59 | 60 | 32 | 4 | 98.33 |
| 25 | J/Jindu Ladies College | 226 | 19 | 40 | 70 | 75 | 22 | 90.27 |
| 26 | J/Kokuvil Hindu College | 230 | 23 | 20 | 64 | 76 | 20 | 90.15 |
| 32 | J/Kokuvil Namagal Vid | 12 | 0 | 0 | 1 | 9 | 2 | 83.33 |
| 31 | J/Kokuvil Ramakrishna Vid | 9 | 0 | 0 | 1 | 6 | 2 | 77.78 |
| 33 | J/Kokuvil Gnanapanditha Vid | 11 | 0 | 1 | 0 | 6 | 4 | 63.64 |
| 23 | J/Canagaratnam M.M.V | 83 | 0 | 1 | 4 | 43 | 35 | 57.83 |
| 39 | J/Periyapulam M.V | 56 | 3 | 0 | 4 | 25 | 24 | 57.14 |
| 29 | J/Ariyalai Sri Parwathy Vid | 20 | 1 | 2 | 1 | 7 | 9 | 55 |
| 35 | J/Kondavil Ramakrishna M.V | 35 | 0 | 2 | 2 | 15 | 16 | 54.29 |
| 28 | J/Muthuthamby M.V. | 59 | 1 | 0 | 4 | 26 | 28 | 52.54 |
| 30 | J/Kantharmadam Saivapiraga | 8 | 0 | 0 | 0 | 4 | 4 | 50 |
| 36 | J/Nallur Hindu Tamil Mixed | 13 | 0 | 1 | 2 | 2 | 8 | 38.46 |
| 34 | J/Kondavil Hindu M.V | 39 | 0 | 2 | 2 | 10 | 25 | 35.9 |
| 27 | J/Seguntha Hindu College | 33 | 0 | 1 | 2 | 8 | 22 | 33.33 |
| 40 | J/Uyarapulam M.V | 9 | 0 | 0 | 0 | 3 | 6 | 33.33 |
| 38 | J/Nayanmarkattu Maheswary | 17 | 0 | 0 | 1 | 4 | 12 | 29.41 |
| 37 | J/Nallur Station C.C.T.M.S | 12 | 0 | 0 | 0 | 3 | 9 | 25 |
| 41 | J/Kondavil Paramsothy Vid | 9 | 0 | 0 | 1 | 1 | 7 | 22.22 |
| 42 | J/Elayathamby Hindy Vid | 6 | 0 | 0 | 0 | 1 | 5 | 16.67 |
| | **Total** | **1099** | **131** | **129** | **219** | **356** | **264** | **75.98** |
| 58 | J/Vatharawatha Vigneswara | 12 | 0 | 1 | 2 | 7 | 2 | 83.33 |
| 56 | J/Puthakaladdy Sri Vishnu Vid | 11 | 0 | 0 | 3 | 6 | 2 | 81.82 |
| 45 | J/Idaikadu M.V | 26 | 3 | 8 | 5 | 5 | 5 | 80.77 |
| 53 | J/Ava.Nadaraja Ramalinga Vid | 49 | 1 | 2 | 15 | 19 | 12 | 75.51 |
| 52 | J/Atchelu Saivapiragasa Vid | 14 | 0 | 0 | 3 | 7 | 4 | 71.43 |
| 51 | J/Atchuvely Saraswathy Vid | 6 | 0 | 2 | 1 | 1 | 2 | 66.67 |
| 49 | St.Theresa Girls School | 50 | 0 | 1 | 6 | 25 | 18 | 64 |
| 59 | J/Urumbirai Saivathamil Vid | 35 | 3 | 1 | 5 | 13 | 13 | 62.86 |
| 47 | J/Sri Somaskanda College | 81 | 4 | 3 | 9 | 31 | 34 | 58.02 |
| 55 | J/Kopay Saravanapavanantha | 16 | 1 | 2 | 1 | 5 | 7 | 56.25 |
| 50 | J/Kopay M.V | 18 | 0 | 1 | 1 | 8 | 8 | 55.56 |
| 44 | J/Attiyar Hindu College | 59 | 0 | 2 | 5 | 24 | 28 | 52.54 |
| 43 | J/Atchuvely Central College | 87 | 1 | 2 | 12 | 26 | 47 | 47.13 |
| 46 | J/Kopay Christian College | 85 | 1 | 3 | 8 | 27 | 46 | 45.88 |
| 57 | J/Urelu Ganesha | 19 | 0 | 1 | 1 | 6 | 11 | 42.11 |
| 54 | J/Ava.Mahajana Vid | 11 | 0 | 0 | 1 | 3 | 7 | 36.36 |
| 48 | J/Urumbirai Hindu College | 43 | 0 | 0 | 1 | 12 | 30 | 30.23 |
| | Total | 622 | 14 | 29 | 79 | 255 | 276 | 55.79 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் அனைத்து எதிர்ப்பு சக்திகளும் தோற்கடிக்கப்பட்டுவிட்டன!

**நந்திக்கடலில் தோற்கடிக்கப்பட்டது விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டும் அல்ல. இலங்கைத்தீவில் அரசாங்கத்திற்கு எதிராகக் காணப்பட்ட அனைத்து எதிர்ப்புச் சக்திகளும் தோற்கடிக்கப்பட்டுவிட்டன.**



தகவல் புரட்சி, நாடுகளையும் கண்டங்களையும திறந்து வருகின்றது. நிதி மூலதனமும் நாடுகளையும் கண்டங்களையும் திறந்து வருகின்றது. தொழில்நுட்பம் மற்றும் பொருளாதாரம் என்பவற்றின் அடிப்படையில் கூறின் உலகம் மேலும் மேலும் திறக்கப்பட்டு வருகிறது. இப்பொறி முறைக்கு எதிராக நாடுகளையும் சமூகங்களையும் மூடமுற்படும் அரசாங்கங்களோ அல்லது அமைப்புகளோ இப்பொறி முறையை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முற்படும் நாடுகளோடு அல்லது நாடுகளின் கூட்டமைப் போடு மோதவேண்டிவரும்.

இலங்கைத் தீவைப் பொறுத்த வரை விடுதலைப்புலிகள் பலமாக இருந்த வரை தமிழ் மக்களின் அரசியலானது மூடப்பட்டிருந்தது. விடுதலைப் புலிகளை மீறி யாரும் அதைக் கையாள முடிந்ததில்லை. அதற்குள் ஊடுருவவும் முடிந்ததில்லை. அதாவது, விடுதலைப்புலிகள் பலமாக இருந்த வரை தமிழ் மக்களின் அரசியலானது ஒரு இரும்புக் கோட்டையைப்போல மூடப்பட்டதாகக் காணப்பட்டது. ரணில்-பிரபா உடன்படிக்கை காலத்தில் இக் கோட்டையை திறந்து விடுதலைப் புலிகளை நெகிழச் செய்து தமது வழிக்குக் கொண்டுவர மேற்கு நாடுகள் முயற்சித்தன. ஆனால், அது நடக்கவில்லை. ரணில் விக்கிரம சிங்கவைத் தோற்கடிப்பது என்ற முடிவை எடுத்தன் மூலம் விடுதலைப்புலிகள் மேற்கு நாடுகளின் முயற்சிகளுக்கு வரையறைகளை ஏற்படுத்தினர்.

எனவே, விடுதலைப்புலிகளைத் தோற்கடிப்பது என்ற முடிவை ஏறக்குறைய எல்லா நாடுகளும் எடுத்தன. விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டதோடு தமிழ் மக்களின் அரசியல் திறக்கப்பட்டுவிட்டது. ஆனால், சிங்கள மக்களின் அரசியல் அரங்கு மூடப்பட்டுவிட்டது. நந்திக்கடலில் தோற்கடிக்கப்பட்டது விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டும் அல்ல. இலங்கைத் தீவில் அரசாங்கத்திற்கு எதிராகக் காணப்பட்ட அனைத்து எதிர்ப்புச் சக்திகளும் தோற்கடிக்கப்பட்டுவிட்டன. அரசாங்கத்திற்கு எதிரான எதிர்ப்பு வெளி என்பதே இல்லாமல் செய்யப்பட்டுவிட்டது. இந்த அரசாங்கத்தைவிட தீவிர தேசிய சக்தி எதுவும் நாட்டில் இப்பொழுது இல்லை. யுத்த வெற்றிவாதத்தின் மீது சிங்கள மக்களின் அரசியல் கட்டியெழுப்பப் பட்டுவிட்டது. வெற்றியின் உச்சிக் கோபரத்தில் ஆட்சியாளர்கள் அமர்ந்திருக்கின்றனர். வெற்றிக் கோட்டையைத் தாண்டி யாரும் உள் நுழைய முடியாது. விடுதலைப்புலிகள் பலமாக இருந்தவரை தமிழ் மக்களின் அரசியல் எப்படி இருந்ததோ அப்படித்தான் இப்பொழுது சிங்கள மக்களின் அரசியலும் காணப்படுகிறது.

மேற்கு நாடுகள் இலங்கைத் தீவில் ஒன்றில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த எத்தனிக்கின்றன. அல்லது ஆட்சியாளர்கள் மத்தியில் மனமாற்றத்தை ஏற்படுத்த எத்தனிக்கின்றன. ஆனால், தேர்தல் வழிமுறைகளின் ஊடாகவோ அல்லது நாடாளுமன்றத்துக்கு வெளியிலான நடவடிக்கைகளின் மூலமாகவோ இப்போது ஆட்சியிலிருக்கும் வம்சத்தை எளிதாக அசைத்துவிட முடியாது. ஏனெனில், இந்த அரசாங்கம் சிங்கள மக்களுக்கு பெற்றுக் கொடுத்த வெற்றியின் பிரமாண்டம் அத்தகையது. நாடாளுமன்றத்துக்குள்ளேயும் வெளியேயும் இந்த அரசாங்கத்திற்கு சவாலாக எழக்கூடிய ஜனவசியம் மிக்க ஆளுமைகள் மிக அரிதாகவே காணப்படுகின்றன. யுத்த வெற்றிவாதத்தின் இரும்புக்கோட்டையைத் தகர்த்து மாற்றங்களை ஏற்படுத்துவதாக இருந்தால், அதற்கு வெளியாரின் பின்பலம் வேண்டும், ஆனால், எவ்வளவுக்கு எவ்வளவு வெளிச்சக்திகள் அரசாங்கத்திற்கு எதிரான தரப்புகளை ஆதரிக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு சாதாரண சிங்களப் பொதுசனங்கள் அரசாங்கத்தை ஆதரிப்பார்கள். வெளியாரின் உதவியோடு அரசாங்கத்தை எதிர்க்கும் எவரும் யுத்த வெற்றிவாதத்தின் முன், துரோகியாகவே கருதப்படுவர். யுத்தத்தின் கிடைத்தற்கரிய வெற்றிகளை வெளியாருக்குக் காட்டிக் கொடுக்கும் ஒருவராகவே அவர் பார்க்கப்படுவார். யுத்தவெற்றி நாயகர்களில் ஒருவரான தளபதி சுரத் பொன்சேகாவுக்கு இதுதான் நடந்தது.

மூடப்பட்டுள்ள சிங்கள மக்களின் அரசியலுக்குள் உள் நுழைய முற்பட்ட குமார் குணரத்தினமும் தோல்வியோடு பின்வாங்க வேண்டியதாயிற்று இப்பொழுது முன்னாள் ஜனாதிபதி திருமதி சந்திரிக்காவைப் பற்றி பிரஸ்தாபிக்கப்படுகிறது. ஆனால், இலங்கைத்தீவின் அரசியலில் மாற்றங்களை ஏற்படுத்த வல்லதும் யுத்த வெற்றி வாதத்தை மீறி எழுமளவிற்கு ஜனவசியம் மிக்கதுமாகிய ஆளுமைகள் எதையும் உடனடிக்கு தென்னிலங்கை அரசியல் அரங்கில் காணமுடியவில்லை. குறைந்தபட்சம் ஒரு கதைக்காகவேனும் ஆட்சியாளரிடத்தில் மனமாற்றங்களை ஏற்படுத்தவல்ல ஒரு போதிசத்வரையும் காணமுடியவில்லை.

எனவே, இரும்புக் கோட்டையாக மூடப்பட்டுள்ள தென்னிலங்கை அரசியல் அரங்கினுள் ஊடுருவ மேற்கு நாடுகளாலும் முடியவில்லை. இந்தியாவாலும் முடியவில்லை. இதனாற்றான் ஆகக்குறைந்தது அரசாங்கத்தையாவது அவர்கள் கையாள வேண்டியிருக்கின்றது. கடந்த இரண்டு ஜெனிவா கூட்டத் தொடர்களின் பின்பும் இதுதான் நடந்தது.

மேற்கு நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் இலங்கைத்தீவில் இப்போது திறக்கப்பட்டுள்ள ஒரே கதவு தமிழ் அரசியல்தான். விடுதலைப்புலிகளின் வீழ்ச்சியோடு அது முற்றாகத் திறக்கப்பட்டுவிட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட ஒரு கட்சியாகக் காணப்படுவது அதனுடைய அடிப்படைப் பலம். இது காரணமாகவே அது அனைத்துலக அரங்கில் விடுதலைப் புலிகளை விடவும் கூடுதலான அங்கீகாரத்தோடு காணப்படுகிறது. இது மற்றொரு பலம்.

ஆனால், ஒரு பொது இலட்சியத்தின் அடிப்படையில் தனக்குள் ஐக்கியப்பட முடியாத கட்சி அது. ஈழத் தமிழர்களின் அடுத்த கட்ட அரசியலை முன்னெடுத்துச் செல்லவல்ல தீர்க்க தரிசனமோ, படைப்பாற்றலோ அவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை. இப்போதுள்ள அரசாங்கம் தனது சொந்த வெற்றியின் கைதியாக உள்ளது. வெற்றிச் சிறையைவிட்டு வெளியே வந்தாற்றான் இனப்பிரச் சினைக்கான தீர்வைப் பற்றிச் சிந்திக்கலாம். ஆனால், இந்த அரசாங்கம் வெற்றிச் சிறையை விட்டு வெளியே வர முடியாது. ஏனெனில், அது எத்தகைய தீவிர தேசிய சக்திகளுக்குத் தலைமை தாங்குகின்றதோ, அவற்றை மீறி தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வை வழங்க முடியாது. எனவே, தமிழ்தேசியக் கூட்டமைப்பானது, இந்த அரசாங்கத்திடமிருந்து தீர்வு எதையும் பெறமுடியாது. இந்த அரசாங்கம் தரக்கூடியதை தமிழர்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. தமிழர்கள் கேட்பதை இந்த அரசாங்கம் கொடுக்கப் போவதுமில்லை. தன் சொந்த வெற்றிச் சிறைக்குள்ளிருந்து வெளிவர முடியாத ஓர் அரசாங்கத்திற்கு எதிராக நாடாளுமன்றத்துக்கு வெளியே போராடத் தேவையான திடசித்தமோ தீர்க்கதரினமோ தியாக சிந்தனையோ அதற்குரிய பாரம்பரியமோ படைப்புத் திறனோ கூட்டமைப்பிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

எனினும் எல்லாப் பலவீனங்களுக்கும் அப்பால் த.தே.கூட்டமைப்புத் தான் இப்பொழுது தமிழ்த் தரப்பாகக் காணமுடிகிறது. மொட்டைக் கத்தி என்றாலும் உறைக்குள் இருப்பது அந்தக் கத்திதான். அமெரிக்காவும் இந்தியாவும் அதைத்தான் கையாள முடியும். மற்றது புலம்பெயர் தமிழ்ச் சமூகம். புலம்பெயர் தமிழ்ச் சமூகத்திலும் ஒற்றுமை காணப்படவில்லை. ஒரு பொது தமிழ் நிதியத்தை உரு வாக்க முடியாத அளவிற்கும் ஒரு தமிழ் அறிவியல் நடுவத்தை கட்டியெழுப்ப முடியாத அளவிற்கும் அனைத்துலக அரங்கில் தமிழர்கள் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தரப்பாக மேலெழ முடியாமைக்கு புலம்பெயர் தமிழ்ச் சமூகத்திற்குள் காணப்படும் ஐக்கிய மின்மையும் ஒரு காரணம்.

களத்திலும் புலத்திலும் ஓரளவுக்கேனும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனவசியம் மிக்க ஒரு தலைமைத்துவம் தமிழர்களுக்கு இப்பொழுது இல்லை. விடுதலைப்புலிகள் இருந்த வரை சரிகளோடும் பிழைகளோடும் களத்திலும் புலத்திலும் குறிப்பிடத்தக்க அளவிற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தலைமைத்துவத்தை வழங்கினார்கள். இப்பொழுது அது வெற்றிடமாகவுள்ளது. அந்த வெற்றிடத்தை நிரப்பவல்ல தீர்க்க தரிசனமும் அரசியலில் படைப்பாற்றலும் மிக்க பேராளுமைகள் மேலெழும்போதே அனைத்துலக அரங்கிலும் உள்நாட்டிலும் தமிழர்கள் கேள்விக்கிடமற்ற ஒரு தரப்பாக நிமிர முடியும்.

அத்தகைய பேராளுமைகள் அற்ற ஒரு வெற்றிடத்திலேயே இந்தியாவும் மேற்கு நாடுகளும் தமிழ் அரசியலை கையாள வேண்டியிருக்கிறது. இதனால், தமிழர்கள் தமது சொந்த நிகழ்ச்சிநிரலை சக்திமிக்க நாடுகளின் நிகழ்ச்சி நிரலோடு பொருந்தச் செய்வதற்குப் பதிலாக சக்தி மிக்க நாடுகளின் கருவிகளாகவோ அல்லது அழுத்தக் குழுக்களாகவோ அல்லது அரசியல் நொதியங்களாகவோ சுருங்கிப்போகும் ஆபத்தும் உண்டு.

எனவே, மேற்கண்டவைகளைத் தொகுத்துக் கூறின் இலங்கைத் தீவில் மேற்கு நாடுகளையும், இந்தியாவையும் பொறுத்தவரை மூடப்பட்டுள்ள தென்னிலங்கை அரசியலை திறப்பதிலும் வரையறை உண்டு. அதே சமயம், திறக்கப்பட்டுள்ள தமிழ் அரசியலைக் கையாள்வதிலும் வரையறைகள் உண்டு. மொத்தத்தில் இலங்கைத் தீவில் அனைத்துலக சமூகத்திற்கான தெரிவுகள் மிகவும் சுருங்கிப் போயுள்ளன. அதாவது, புலிகளைத் தோற்கடித்த பின்னரும், அனைத்துலக சமூகமானது கடந்த நான்காண்டுகளாக இலங்கைத் தீவில் தமக்குச்சாதகமான தெரிவுகளை உருவாக்க முடியவில்லை என்று அர்த்தம்.

குளோபல் தமிழ் நியூஸ் நெற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாய மாநாட்டை கனடா மட்டுமே புறக்கணிக்கும்

## அவுஸ். வெளிவிவகார அமைச்சர் பொப்கார்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டை இறுதியில் கனடா மாத்திரமே புறக்கணிக்கும் என்று அவுஸ்திரேலியாவின் வெளிவிவகார அமைச்சர் பொப்கார் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநல்வாய நாடுகளைப் புறக்கணிக்க வேண்டும் என்று அவுஸ்திரேலியாவைப் பல்வேறு தரப்பினர்கள் வலியுறுத்துகின்ற போதும் அவுஸ்திரேலியா அதனைப் புறக்கணிக்காது என்று பொப்கார் அறிவித்திருந்தார்.

எனினும் இந்த முறை இலங்கையில் நடைபெறவுள்ள மாநாட்டில் தாம் கலந்து கொள்ளப் போவதில்லை என்று கனடாவின் பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் அறிவித்திருந்தார்.

இந்நிலையில் கனடா மாத்திரமே இறுதியில் இந்த மாநாட்டை புறக்கணிக்கும் என்றும் ஏனைய நாடுகள் அனைத்தும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் என்று அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

# மனித உரிமை விவகாரங்கள் குறித்து பொதுநலவாய நாடுகள் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் நீதித்துறை தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இலங்கையின் மனித உரிமைகள் ஆணையாளர் ப்ரதீபா மஹானாமஹேவா பொதுநலவாய நாடுகளின் செயலகத்தினால் அழைக்கப்பட்டுள்ளார்.

நேற்று முதல் எதிர்வரும் 2 ஆம் திகதி வரையில் லண்டனில் பொதுநலவாய நாடுகளின் செயற்குழு கூட்டம் நடைபெறவுள்ளது.

இலங்கையில் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை நடத்த வேண்டாம் என்ற கோரிக்கை வலுத்துள்ள நிலையில் இலங்கையின் உண்மைத் தன்மையை அறிந்து கொள்வதற்காக அவர் அங்கு அழைக்கப்பட்டுள்ளதாக செயற்குழுவின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவருடன் பேச்சுவார்த்தை நடத்துவதன் ஊடாக இலங்கையின் மனித உரிமை நிலவரங்கள், நீதித்துறை மற்றும் ஊடகத்துறைக்கான சுதந்திரம் குறித்த தகவல்களை பெற்றுக் கொள்ள கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# கடற்படை தளபதி சீனாவுக்கு விஜயம்

இலங்கைக் கடற்படைத் தளபதி ஜயந்த கொலம்பகே சீனாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

சீனாவுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள அவர் அந்நாட்டின் மத்திய இராணுவ ஆணையகத்தின் உறுப்பினர் பெங்பங்குயிவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது இலங்கையின் பாதுகாப்பு விவகாரங்கள் மற்றும் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் குறித்தும் பேசப்பட்டுள்ளது. அத்துடன் இலங்கையின் பாதுகாப்பு விடயங்களில் சீனா முழுமையாக அக்கறை கொண்டிருப்பதாக சீன தரப்பில் இருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கையின் கடற்படையினருக்கும் இராணுவத்தினருக்கும் பயிற்சிகளை வழங்க சீனா தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்ற்கிடையில் கடந்த காலங்களில் இலங்கையின் பாதுகாப்பு நிலைமைகளுக்கு வழங்கிய ஒத்துழைப்புகளுக்காக சீனாவிற்கு இலங்கை கடற்படை தளபதி நன்றி தெரிவித்துள்ளார். (அ-2)

# கொடுப்பனவை அதிகரிக்குமாறு ஊழியர்கள் கோரிக்கை விடுப்பு

(கரணவாய்)

வடமராட்சிப் பகுதியில் உள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் சிற்றூழியர்கள் தமக்கு போதியளவு சம்பளம் கிடைப்பதில்லை என விசனம் தெரிவிக்கின்றனர்.

இப் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் சிற்றூழியர்கள் தமக்கு நாளொன்றுக்கு 500 ரூபா வீதமே சம்பளம் கிடைப்பதாகவும் அது போதாமையால் தங்களது வாழ்வாதாரத்தை மேலும் கொண்டு செல்ல முடியாதுள்ளதென்றும் தெரிவித்துள்ளனர்.

தற்போது பொருட்களின் விலை ஏற்றத்தின் காரணத்தினால் இக் கொடுப்பனவு மூலம் தமது தேவைகளைப் போதியளவு நிவர்த்தி செய்து கொள்ள முடியவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி உரிய நிர்வாகிகளிடம் முறையிட்ட போதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் எதிர்வரும் மே மாதத்தில் இருந்து தமது கொடுப்பனவை அதிகரித்துத் தரும்படியும் சிற்றூழியர்கள் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர். (அ-3-60)

# போலி விசாவுடன் பிரான்ஸ் பயணிக்க முயன்றவர் கைது

போலி விசாவுடன் பிரான்ஸ் செல்ல முற்பட்ட இலங்கையர் ஒருவர் இந்தியாவின் கோவா- பனாஜயில் உள்ள டபொலிம் விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர் ஸ்பெயின் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட விசா ஒன்றினை விமான நிலைய அதிகாரிகளிடம் காண்பித்துள்ளார்.

அந்த விசா ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரையில் செல்லுபடியாகும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் அவரிடம் மறுவழி பயணச்சீட்டு இல்லாத நிலையில் அவர்மேல் சந்தேகம் கொண்ட அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணைகளில் குறித்த விசா கடந்த 2010 ஆம் ஆண்டு வழங்கப்பட்டமை தெரியவந்துள்ளது.

இந்நிலையில் அவரை இலங்கைக்கு நாடுகடத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக கூறப்படுகிறது. அவர் தற்போது வஸ்கோ பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)




- ✸ 313-ரோமப் பேரரசின் மன்னன் லிசினியஸ் அனைத்து கிழக்கு ரோமப் பேரரசையும் ஒன்றாக்கி தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தான்.
- ✸ 1006-மிகவும் ஒளி கூடிய சுப்பர் நோவா எஸ். என் 1006 லூப்பஸ் என்ற விண்மீன் கூட்டத்தில் அவதானிக்கப்பட்டது.
- ✸ 1483-இந்த நாளில் புளூட்டோ நெப்டியூனின் சுற்று வட்டத்துள் வந்தது. இது அங்கு ஜூலை 23,1503 வரை அங்கு இருந்தது.
- ✸ 1803- ஐக்கிய அமெரிக்கா லூசியானா மாநிலத்தை பிரான்சிடம் இருந்து 15 மில்லியன் அமெரிக்க டொலருக்கு வாங்கியது.
- ✸ 1838-நிக்குராவா மத்திய அமெரிக்கக் கூட்டமைப்பில் இருந்து விடுதலையை அறிவித்தது.
- ✸ 1900-ஹவாய் ஐக்கிய அமெரிக்காவின் ஒரு பகுதியானது.
- ✸ 1945-அடொல்ஃப் ஹிட்லர் தனது மனைவியுடன் தற்கொரல செய்துகொண்டார். சோவியத் படையினர் பொடலினில் ஜேர்மனிய நாடாளுமன்றில் செங்கொடியை ஏற்றினார்.
- ✸ 1975-வியட்நாம் போர் கம்யூனிசப் படைகள் சாய்கோன் நகரைக் கைப்பற்றின. தென்வியட்நாமியப் படைகள் நிபந்தனையின்றி சரணடைந்ததில் வியட்நாம் போர் முடிவுக்கு வந்தது.
- ✸ 1982-திருச்சியில் பாரதிதாசன் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.
- ✸ 1993-ஜெனீவாவில் ஐரோப்பிய அணுக்கருவியல் ஆய்வு அமைப்பில் உலகளாவிய வலையமைப்பு பிறந்தது.
- ✸ 1999-ஆசியான் அமைப்பில் கம்போடியா இணைந்து கொண்டது.
- ✸ 2006-ஆப்கானிஸ்தானில் தலிபான்களால் கடத்தப்பட்ட சூரிய நாராயணா என்ற இந்தியப் பொறியியலாளர் கழுத்து வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.


**பிறப்புகள்**

- ✸ 1777-கார்ல்ஃ, ப்ரெடெரிக் காஸ், கணிதவியலாளர் (இ.1855)
- ✸ 1870-தாதாசாஹெப் பால்கே, இந்திய திரைப்படத்துறையின் முன்னோடி (இ.1944)
- ✸ 1959-சிரீபன் கார்ப்பர், கனடாவின் 22 ஆவது பிரதமர்
- ✸ 1961-ஐசேயா தாமஸ், முன்னாள் அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

**இறப்புகள்**

- ✸ 1945-அடொல்ஃப் ஹிட்லர், ஜேர்மனியை ஆண்ட ஆஸ்திரிய சர்வாதிகாரி (பி.1889)
- ✸ 1961- லோங் அடிகள், யாழ்ப்பாணத்தில் பணி புரிந்த அயர்லாந்து அடிகள் (பி.1896)

**கார்ல் ஃப்ரெடெரிக் காஸ்**



கார்ல் ஃப்ரெடெரிக் காஸ் கணித உலகத்தில் எல்லாக் காலத்தின் கணிதவியலாளர்களுக்கும் மேல் படியில் வைக்கப்படும் சிறந்த கணித வல்லுநர்.

இவர் கணிதம், இயற்பியல், வானியல், புவிப்பரப்பு ஆகிய நான்கு துறைகளிலும் கணிசமான பங்கை வகித்தார்.

1777ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் திகதி இவர் பிறந்தார். மூன்று வயதிலேயே தன் தந்தை கூலியாட்களுக்கு சம்பளம்தரும் போது அவரது கணிப்பில் தவறு ஒன்றைக் கண்டு பிடித்தவர். ஏழாவது வயதில் ஒரு நாள் வகுப்பில் நுழைந்ததும் எல்லா மாணவர்களையும் அமைதியாக இருக்கச் செய்வதற்காக ஆசிரியர் கொடுத்திருந்த கணக்கை நொடியில் முடித்து அவரை அசர வைத்த சிறுவன் ஆவார். கெட்டிங் கென் பல்கலைக்கழகத்தில் மூன்றாண்டுகள் படித்தார்.


1801 ஜனவரி முதலாம் ஆம்நாள் பியாஜ்ஜி என்பவர் முதல் குறுங்கோளொன்றைக் கண்டு பிடித்து அதைக் கொஞ்சத் தூரம் மேற்கு வானில் தொலைநோக்கி வழியாகப் பார்த்து மறுபடியும் கீழ் வானில் பார்க்க முயன்ற போது அவர்கள் வானியல் கணிப்புகளின் துல்லியம் போதாமையினால் அதைத் தவற விட்டனர்.

காஸ் இக்கணிப்புக்களைத் துல்லியமாக கணித்து அவர்கள் குறிப்பிட்ட இடத்திலிருந்து 14 சந்திரன் அளவுகள் தள்ளி ஒரு இடத்தைக் குறிப்பிட்டுச் சொல்ல அவ்விடத்தில் அக்குறுங் கோள் (சிரிஸ் என்ற பெயருள்ளது) காணப்பட்டது. 24 வயதே ஆன இளம் விஞ்ஞானி காஸ் இதனால் உலகப் புகழ்பெற்றார். இவர் 1855 ஆம் ஆண்டு பெப்ரவரி 23 ஆம் திகதி உயிர் நீத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் வீழ்வது தவறல்ல; வீழ்ந்தும் எழாதிருப்பதே தவறு

## மீண்டெழுவோம் என்கிறார் சுப. வீரபாண்டியன்



(சென்னை)

**இப்போது நடப்பது ஈழ விடுதலைக்கான மூன்றாவது கட்டப் போராட்டம். இலங்கை அரசிற்கு தண்டனை வாங்கிக் கொடுப்பதும் ஈழத்துக்காக பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்பதுமே இப்போதய போராட்டமாகும். இவ்வாறு பேராசிரியர் சுப .வீரபாண்டியன் தெரிவித்துள்ளார்**

சென்னை தியாகராஜ நகரில் தமிழீழ ஆதரவு மாணவர் அமைப்பு சார்பில் நடைபெற்ற கருத்தரங்கில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூளுரைத்துள்ளார்.

மாணவர்கள் மத்தியில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இலங்கையில் ஈழத்தமிழர்களுக்கான ஈழ விடுதலைக்காக செல்வா தலைமையில் அமைதிவழியில்முதற் கட்ட போறாட்டம் நடைபெற்றது.

அதனையடுத்து தேசியத் தலைவர் பிரபாகரன் தலைமையில் ஆயுத வழிப் போராட்டம் இரண்டாம் கட்டமாக நடைபெற்றது.

எப்படி அமைதி வழிப் போராட்டத்தில் ஒரு பின்னடைவு ஏற்பட்டதோ அதே போல் ஆயுத வழிப் போராட்டத்திலும் ஒரு பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது.

பின்னடைவு ஏற்பட்டதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். அதற்காக நாம் வெட்கப்படக் கூவாது . ஆனால் வீழ்வது தவறல்ல. வீழ்ந்தும் எழாமல் இருப்பதே தவறு. நாம் மீண்டும் எழுவோம் .

இப்போது நடப்பது ஈழ விடுதலைக்கான மூன்றாவது கட்டப் போராட்டம். இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கும் அவரது கூட்டாளிகளுக்கும் தண்டனை வாங்கிக் கொடுப்பதும் ஈழத்திற்காக பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்பதும் மூன்றாவது கட்டப் போராட்டமாகும்.

இந்தச் சிக்கலை உலக நாடுகளுக்குக் கொண்டு சென்று அதன் மூலமாக வெற்றியைப் பெறுபோம் என்று ஆக்ரோஷமாகத் தெரிவித்தார் . (அ-2)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயார்

## ஜனாதிபதி அழைப்பு

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு வார்த்தை நடத்த தயாரென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு காண்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தத்தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் பேச்சுவார்த்தைகளுக்கு முன்னதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பாராளுமன்ற தெரிவுக் குழுவில் பங்கேற்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

அரசியல் தீர்வுத் திட்டம் குறித்த பேச்சு வார்த்தைகள் முடங்கியமைக்கு அரசாங்கமே பொறுப்பு என்ற கூட்டமைப்பின் குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பேச்சு வார்த்தைக்கான கதவுகள் திறந்தே இருப்பதாக குறிப்பிட் டுள்ளார்.

அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பாராளுமன்ற முறைமையின் ஊடாக தீர்வுகாண வேண்டும் என கோருவதாகவும் இது தொடர்பில் கூட்மைப்பு அஞ்ச வேண்டிய அவசியம் இல்லை எனவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டியுள்ளார். (அ-2)

# ஆயுர்வேத பா.சபை பொதுக்கூட்டம்

(மன்னார்)

மன்னார் மாவட்ட ஆயுர்வேத பாதுகாப்புச் சபையின் பதின் மூன்றாவது வருடாந்த பொதுக் கூட்டம் மேமாதம் 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

அந்நிகழ்வின் பிரதமவிருந்தினராக மன்னார் மாவட்ட செயலாளர் ஜே.எ.சரத்ரவீந்திரா கலந்து கொள்ளவுள்ளார். (அ)

# யுத்தம் முடிவடைந்த பின்னரும் இராணுவம் பலமடைந்து வருகிறது

## சுமந்திரன் எம். பி. தெரிவிப்பு

இலங்கையில் பொது நலவாயக் கொள்கை பின்பற்றப்படவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் ஊடகவியலாளர் அமைப்பின் அழைப்பை ஏற்று தாம் லண்டனுக்கு விஜயம் செய்திருந்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் பொது நலவாய நாடுகள் அமைப்பின் கொள் கைகள் பின்பற்றப்படவில்லை என்பதனை தாம் அங்கு வலியுறுத்தியதாகத் தெரிவித்துள்ளார். குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் தொடர்பில் அரசாங்கம் உள்நாட்டு மற்றும் சர்வதேச கோரிக்கைகளை உதாசீனம் செய்து வருகிறது.

வடபகுதிகளில்பாரியளவில்காணிகளை அரசாங்கம் சுவீகரித்து வருவதாகவும் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு மாறாக யுத்த நிறைவினைத் தொடர்ந்து அரசாங்கம் இராணுவ பலத்தை மேலும் வலுப்படுத்திக் கொள்வதில் அதிகம் நாட்டம் காட்டி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கையில் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வை நடத்தக் கூடாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாற்றுக் கொள்கைகளுக்கு கேந்திர நிலையம் மற்றும் க்ளோபல் தமிழ் போரம் அமைப்பு ஆகியன பிரசாரம் செய்ததாகவும் அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. (அ-2)

# இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது உடுவில் சலஞ்சர்ஸ் வி.கழக அணி

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் மேற்கு E.D.S விளையாட்டுக்கழகம் பிரதேச இளைஞர் சம்மேளனத்துடன் இணைந்து நடத்தி வரும் கிரிக்கெட் போட்டிகளின் அரையிறுதி ஆட்டங்கள் அண்மையில் நடைபெற்றன.

முதல் அரையிறுதிப் போட்டியில் உடுவில் சலஞ்சர்ஸ் வி.கழகத்தை எதிர்த்து சுன்னாகம் காந்தி நியூஸ்ரார் வி.க. அணி மோதியது. நாணயற் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாடிய உடுவில் சலங்சர்ஸ் விளையாட்டுக்கழகம் 12 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் உடுவில் சலஞ்சர்ஸ்விளையாட்டுக்கழகம் சார்பிலே தீபன் 9 ஆறுகள் அடங்கலாக 66 ஓட்டங்களையும் புனிதன் ஆட்டமிழக்காது 32 ஓட்டங்களையும் ஜஸ்ரின் ஆட்டமிழக்காது 25 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சுன்னாகம் காந்தி நியூஸ்ரார் சார்பில் கோபி, ஜிந்தா தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர். பதிலுக்கு 145 எனும் வெற்றி இலக்கு நோக்கி துடுப்பாடிய சுன்னாகம் காந்தி நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம் 12 ஓவர்களில் 3 இலக்குகளை இழந்து 110 ஓட்டங்களைப் மட்டுமே பெற்று 35 ஓட்டங்களால் தோல்வியை தழுவி இறுதிப் போட்டிக்கான வாய்ப்பினை இழந்தது.

துடுப்பாட்டத்தில் காந்தி நியூஸ்ரார் வி.க. சார்பிலே டிலான் 29 ஓட்டங்களையும் டேமியஸ் ஆட்டமிழக்காது 38 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் தீபன் 2 இலக்குகளையும் சிந்து ஒரு இலக்கையும் கைப்பற்றினர். போட்டியின் ஆட்ட நாயகனாக உடுவில் சலஞ்சர்ஸ் வி.க.வீரன் தீபன் தெரிவானார். இவ் வெற்றிமூலம் புதுவருடத்தினத்தன்று நடைபெறவுள்ள இறுதிப்போட்டிக்கு உடுவில் சலஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் முதலாவது அணியாக தகுதி பெற்றது. (அ-3-23)

# ஆவணங்கள் கண்டெடுப்பு

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வாகன வருமான உத்தரவுப்பத்திரம், காப்புறுதி வாகன இல-பிஏஏ-3260) ஆவணங்கள் என்பன கண்டெடுக்கப்பட்டு போதனா வைத்தியசாலை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

கொடிகாமம் மந்துவில் வடக்கைச் சேர்ந்த செல்வி ஜே.காயத்திரி என்பவரது மேற்குறித்த ஆவணங்களே கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.எனவே, உரியவர் தகுந்த ஆதாரத்துடன் காரியாலயத்திற்கு வருகைதந்துஅவற்றைப்பெற்றுக்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2)

# ஊர்வலம் இல்லாத மேதின விழாக்கள்

ஊர்வலம்இல்லாதபிரதானமூன்று மேதின விழாக்களை கொழும்பு, குருணாகல், பதுளை ஆகிய இடங்களில் நடத்த ஐ.தே.க தயாராகியுள்ளதாக ஐ.தே.க. பொதுச் செயலர்திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க. பிரதான அலுவலகமான ஸ்ரீகொத்தாவில் மேதினத்தன்று காலை 9 மணிக்கு தொழிற்சங்கங்களின் கூட்டு மேதின விழா நடைபெறும்.


எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமை வகிப்பார். எதிர்க்கட்சியின் ஒருங்கிணைந்த மேதின விழாவும் ஐ.தே.க வின் தேசிய மே தின விழாவும் குருநாகலையில் மேதினத்தன்று மாலை 3 மணிக்கு ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறும்.


பதுளையில் தோட்டத் தொழிலாளர் இளைஞர் முன்னணியின் ஏற்பாட்டில் மற்றுமொரு மேதின விழா அன்றைய தினம் மாலை 3 மணிக்கு நடைபெறும் (அ-2)



பயிலுநர் தேசிய கருத்தரங்கு சேவாலங்கா நிறுவனத்தின் யாழ். மாவட்ட பணிமனையான பலாலி வீதி, கோண்டாவிலில் அமைந்துள்ள சேவா இல்லத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட சுற்றுச் சூழல் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த உரையாற்றுவதையும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்- உ. சாளீன், என் குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





முஸ்லிம் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த மீளக்குடியமரவுள்ள முஸ்லிம் மக்கள் தமது விபரங்கள் அடங்கிய விண்ணப்பப்படிவங்களைக் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் ஒஸ்மானியக் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வைத்து அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் இணைந்து துவிச்சக்கரவண்டியை வழங்கி வைப்பதையும் கலந்து கொண்ட மக்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# ஊழியர் சேமலாப நிதியம் ஒரே வங்கிக் கணக்கின் கீழ்

## *தொழில் உறவுகள் அமைச்சு நடவடிக்கை*

(கொழும்பு)

**ஊழியர் சேமலாப நிதியத்தை (ஈ.பி.எப்) ஒரே வங்கிக் கணக்கின் கீழ் கொண்டுவரவும் தொழில் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் வழக்குகள் தொடர்பிலான தகவல்களை கணனி மயப்படுத்தவும் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.**

தொழிலாளர்களினதும் ஊழியர்களினதும் சேமலாப நிதியத்தில் அங்கத்துவம் பெற்றவர்களினதும் நலன் கருதி இந்த நடவடிக்கையை தனது அமைச்சு மேற்கொண்டுள்ளதாக தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

கொழும்பு மகாவலி கேந்திரத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தொழிலாளர் நலன் கருதி தமது அமைச்சு முன்னெடுத்து வரும் வேலைத்திட்டங்கள் தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கமளித்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

கணனிமயப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இவ்வாண்டு இறுதிக்குள் அவற்றை முழுமைப்படுத்த திட்டமிட்டுள்ளதாக அவர்மேலும் தெரிவித்தார்.

பல்வேறு நிறுவனங்களில் தொழில் புரிந்த ஒருவருக்கு இதுவரை காலமும் அந்தந்த நிறுவனங்களினால் வெவ்வேறு வங்கிக் கணக்குகளில் ஊழியர் சேமலாப நிதியம் வைப்பிலிடப்பட்டு வருவதனால் தனது ஈ.பி.எப் தொகை தொடர்பில் தகவல் பெறும் நபர் பெரும் சிரமத்திற்கு முகம்கொடுக்கும் நிலைமை ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் கணனிமயப்படுத்தப்பட்டு வருவதன்மூலம் நபர் ஒருவர் எத்தனை நிறுவனங்களில் தொழில் புரிந்தாலும் அவருக்கான ஊழியர் சேமலாப நிதியத்தை ஒரே வங்கிக் கணக்கில் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய தனது பதிவு இலக்கத்தை வைத்து ஊழியர் சேமலாப நிதியத்தின் மிகுதித் தொகையை இலகுவாகப் பெற்றுக் கொள்ள ஊழியருக்கு முடியும்.

இந்த புதிய நடைமுறைக்குள் உள்வாங்குவதற்கான விண்ணப்பங்களை சம்பந்தப்பட்டவர்கள் ஊடாக விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, தொழில் பிரச்சினைகள் தொடர்பில் தொழில் திணைக்களத்தினால் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் தொடர்பான தகவல்களையும் கணனிமயப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும் வழக்கின் தன்மை, நீதிமன்றம், வழக்கு நடைபெறும் திகதி போன்ற தகவல் களை இணையத் தளத்தின்மூலம் இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்றார். இவ்வாண்டு இறுதிக்குள் இந்த நடவடிக்கை முழுமை பெறவுள்ளது என்றும் அமைச்சர் காமினி லொக்குகே மேலும் தெரிவித்தார். (அ-2)

## அரிச்சந்திரமயான காண்டம்

(தும்பளை)

தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவிலில் யாழ் மாவட்ட முன்னணிக் கலைஞர்கள் கலாபூஷணம் எம்.தைரியநாதன், இசை நாடக பூபதி இரத்தினகுமார், முன்னணிக் கலைஞர் தை யஸ்ரீன், நகைச்சுவை மன்னன் சரவண முத்து ஆகியோர் பங்கு பெறும் சம்பூரண அரிச சந்திர மயான காண்டம் என்னும் இசை நாடகம் நாளை மறுதினம் வியாழக்கிழமை இரவு 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (அ-3-19)

## மணவாளக்கோல விழா

கற்கோவளம் வீரபத்திரர் ஆலய மணவாளக்கோல விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு 108 சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகிவிசேட பூஜைகள்நடைபெறவுள்ளன.

தொடர்ந்து பிற்பகல் ஒரு மணியளவில் சுவாமி வெளி வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறவுள்ளது. (அ-3-19)

# மேதினக் கொண்டாட்டம் ஜனாதிபதி தலைமையில்

## 5 ஆயிரம் பொலிஸார் கடமையில்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஏற்பாடு செய்துள்ள மேதின பிரதான கூட்டம் இம்முறை கொழும்பு பொறளை கெம்பல் பார்க் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெறவுள்ள இந்தமேதினக் கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கின்ற சகல அரசியல் கட்சிகளும் கலந்து கொள்ளவுள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஏற்பாடு செய்துள்ள மேதின ஊர்வலம் மற்றும் பிரதான கூட்டம் தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் விசேட செய்தியாளர் மாநாடு கொழும்பிலுள்ள மகாவலி கேந்திரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளும் தொழிலாளர் வர்க்கத்தினரும் இந்த மேதினக் கொண்டாட்டத்திலும் ஊர்வலத்திலும் கலந்துகொள்ளவுள்ளனர்.


மேதினத்தன்று பாதுகாப்பு கடமையில் ஈடுபடுவதற்கென மேலதிகமாக 5 ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜீ.எம். எச். புத்திக்க சிறிவர்த்தன தெரிவித்தார்.

கட்சிகளின் கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்களுக்கு பொலிஸார் முழுமையான பாதுகாப்பினை வழங்கும் அதேசமயம் இதன் ஏற்பாட்டாளர்கள் தமது கட்சிக்காரர்களை அமைதியான முறையில் வழி நடத்தி தமக்கு பூரண ஒத்துழைப்பினை வழங்க முன்வரவேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார்.

கொழும்பில் மே தினத்திற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் சூடுபிடித்துள்ளன. வெளியிடங்களிலிருந்து பொலிஸ் நிலையம் மற்றும் பொலிஸ் போக்குவரத்து பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் கடமைக்காக வரவழைக்கப்பட்டுள்ளனர். மேதின ஊர்வலங்களில் கலந்து கொள்வதற்காக வெளியிடங்களில் இருந்து அநேகமானோர் கொழும்பு வர இருப்பதால் வாகன நெரிசலைத் தவிர்க்கும் வகையில் விசேட வீதிப்போக்குவரத்துக்களும் தரிப்பிட வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் கூறினார். (அ-2)

# மரண அறிவித்தல்

## Dr.யோகீஸ்வரி சிவபாதம் (பவளம்)



(குகன் வைத்தியசாலை, மல்லாகம், கொல்லன்கலட்டி, மலப்பை– சுன்னாகம்)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட Dr.யோகீஸ்வரி சிவபாதம் (பவளம்) அவர்கள் 24.04.2013 புதன் கிழமை அன்று காலமானார்.

அன்னார் Lion Dr.ஆறுமுகம் சிவபாதம் அவர்களின் அன்பு மனைவியும், மல்லாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் செல்வநாயகியின் அன்பு மகளும், ஆறுமுகம் மங்கையற்கரசியின் அன்பு மருமகளும் ஆவார். அன்னார் Dr.சுகந்தினி (சிங்கப்பூர்), மயூரன் (லண்டன்), சியாமளா (கொழும்பு), யசோதினி (ஜனசக்தி இன்சுரன்ஸ்-கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் யதுகுலன் (பொறியியலாளர் - சிங்கப்பூர்), பகீரதி (லண்டன்), பகீரதன் (ஆசிரியர், இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு -04), பத்மநேசன் (விரிவுரையாளர், திறந்த பல்கலைக்கழகம், கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்றவர்களான வாகீஸ்வரி (மலேசியா), உமாமகேசன் (சொக்கர்), அம்பிகைபாகன்(சந்திரன்), பஞ்சாட்சரம் (அப்புச்சி) மற்றும் ஜெகதீஸ்வரி (பேபி), தனநாயகம் (அப்பு) (பசன்பார்க், சுன்னாகம்), ஜெயலட்சுமி (ஜெயம்), (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுந்தரலிங்கம் (கனடா), தெய்வநாயகி (பாப்பா), தம்பாப்பிள்ளை (நபீபியா), செல்வலட்சுமி (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், மக்கள் வங்கி) மற்றும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், இராசதுரை, சின்னத்தங்கம் ஆகியோரின் மைத்துனியும், ஆதித்யன், அனந்திதா, பரணீதன், பிரவீணா, ஆராதனா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30.04.2013) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக மல்லாகம் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பங்களா லேன், மல்லாகம்.
0212240779, 00447734945426 (லண்டன்-மகன்)

தகவல்:
குடும்பத்தினர்

(சி-3135)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நேட்டோ விமானம் வீழ்ந்ததில் 4 இராணுவத்தினர் மரணம்

ஆப்கானிஸ்தான் பகுதியில் தலிபான் போராளிக் குழுக்களைக் குறிவைக்கச் சென்ற நேட்டோ படையின் விமானம் வீழ்ந்து நொறுங்கியதில் 4 நேட்டோ படை வீரர்கள் பலியாகியுள்ளனர்.

நேட்டோ படைகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ள இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, நேற்று முன்தினம் சனிக்கிழமை தெற்கு ஆப்கானிஸ்தான் பகுதியில் பறந்து சென்ற நேட்டோ விமானம் கீழே விழுந்து நொறுங்கியுள்ளது. இதன் காரணமாக விமானத்தில் பயணித்த 4 வீரர்கள் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளனர். பலியானவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்த வீரர்கள் என்ற தகவல் ஏதும் வெளியிடப்படவில்லை.

குறித்த சம்பவம் நடந்த இடத்தில் எதிரிகள் நடமாட்டம் இருக்கவில்லை எனவும் தற்செயலாக நடந்த விபத்து எனவும் முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆப்கானிஸ்தானில் தலிபான்களை அடக்க நேட்டோப் படை போராடி வருகிறது. நேட்டோ படையின் அனைத்து நாடுகளையும் சேர்ந்த சுமார் ஒரு இலட்சம் வீரர்கள் இங்கு தலிபான்களை ஒழிக்கும் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நடவடிக்கையின் போது தலிபான்கள் ஊருக்கு ஒதுக்குப்புறமாக உள்ள மலைக்குகைகளில் பதுங்கியிருப்பதால், விமானம் மூலம் மட்டுமே அந்த இடங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. இதன் போது தேடுதல் வேட்டையில் ஈடுபடும் விமானங்களில் சிலவற்றை தலிபான்கள் பீரங்கி மூலம் சுட்டு வீழ்த்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

# ஆயுததாரிகள் தாக்கு; 5 இராணுவத்தினர் பலி!

(பக்தாத்)

ஈராக் நாட்டில் முஸ்லிம்களின் ஆதிக்கம் நிறைந்த பகுதியான அன்பர் மாகாணத்தில் கடந்த சனிக்கிழமை ஊடுருவிய ஆயுததாரிகள் மேற் கொண்ட அதிரடித்தாக்குதலில் 5 இராணுவ வீரர்கள் பலியாகியுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமையன்று ஹவிஜா நகரில் உள்ள சுனி பிரிவினர் முகாமின் மீது ஈராக் படைகள் கோரத்தாக்குதலை நிகழ்த்தின. இந்தத் தாக்குதலில் 170 பொதுமக்கள் பலியாகினர்.

இதற்குப் பதிலடி தரும் விதமாக சுனி ஆயுதக்குழுக்கள் மேற்கு மற்றும் வடக்கு ஈராக் பகுதிகளில் உள்ள இராணுவ வீரர்களைக் குறிவைத்து தாக்கி வருகின்றனர்.

இந்நிலையிலே சனிக்கிழமையன்று அன்பர் மாகாணத்தில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவ வீரர்கள் மீது ஆயுததாரிகள் அதிரடியாகத் தாக்குதல் நடத்தினர். இதன்போது 5 இராணுவ வீரர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதலையடுத்து பல பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு அமுல் படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

## சரப்ஜித்சிங் உயிர்பிழைக்கும் வாய்ப்புக்கள் குறைவு

(லாகூர்)

லாகூர் சிறையில் தாக்கப்பட்ட இந்தியர் சரப்ஜித்சிங் ஜின்னா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சுமார் 48 மணி நேரத்திற்கு மேல் கடந்த நிலையில் அவரது உடல் நிலையில் எத்தகைய முன்னேற்றமும் ஏற்படவில்லை.

கோமா நிலையில் இருந்து அவர் இன்னும் மீளவில்லை. தலையில் ஏற்பட்ட பலத்த காயத்தினால் மூளை மற்றும் நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டுள்ளதால் அவருக்கு அவசர சத்திரசிகிச்சை செய்ய வேண்டியுள்ளது.

ஆனால், கோமா நிலையில் இருக்கும் அவருக்கு தற்போது சத்திரசிகிச்சை செய்தால் உயிருக்கு ஆபத்தாக முடியலாம் என அவருக்கு சிகிச்சை அளிக்கும் வைத்தியர்கள் குழு யோசித்து வருகிறது.

கிளாஸ்கோ கோமா ஸ்கேல்லின் படி (கோமா நிலை அளவீடு) சரப்ஜித்சிங் தற்போது 5 ஆம் நிலையில் உள்ளார்.

அவரது உடல் நிலையை பரிசோதித்த வைத்தியர்கள் அஞ்சும் ஹபீப் வோரா, ஜாபர் சவுத்ரி, நயீம் கசூரி ஆகியோர் தற்போதைய நிலையில் அவருக்கு சத்திரசிகிச்சை செய்ய முடியாது என்று தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் சத்திரசிகிச்சை செய்யாமல் அவர் உயிர் பிழைப்பது கடினம் என்பதால் அவர் உயிர் பிழைக்கும் வாய்ப்புகள் குறைவாகவே உள்ளதாக மருத்துவர்கள் கருதுகின்றனர். (அ-2)

# பாகிஸ்தானில் தொடரும் குண்டுவெடிப்பு சம்பவங்கள்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பாராளுமன்றத்துக்கு எதிர்வரும் மே மாதம் 11 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறுகிறது.

பாகிஸ்தானில் ஜனநாயக ஆட்சியை அகற்றிவிட்டு இஸ்லாமிய சட்டங்களுக்கு உட்பட்ட ஆட்சியை ஏற்படுத்த வேண்டும் என்று போராடி வரும் தலிபான்கள் இந்தத் தேர்தலுக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

அரசியல் கட்சிகளின் அலுவலகங்கள் அருகிலும் தேர்தல் பிரசார கூட்டம் நடைபெறும் இடங்களிலும் அவர்கள் வெடி குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் வடமேற்கு பாகிஸ்தான் கோஹட் நகரில் உள்ள சையத் நூர் அக்பம் என்ற வேட்பாளரின் தேர்தல் அலுவலகத்தின் மீது நேற்று முன்தினம் நடத்தப்பட்ட வெடிகுண்டுத் தாக்குதலில் 6 பேர் பலியாகினர். 10 பேர் படுகாயமடைந்தனர்.

பெஷாவர் நகரின் ஒதுக்குப்புறமான பகுதியில் நசீர் கான் அப்ரிதி என்ற வேட்பாளரின் தேர்தல் அலுவலகத்தின் மீது நடந்த வெடிகுண்டு தாக்குதலில் 3 பேர் பலியாகினர். 12 பேர் படுகாயமடைந்தனர்.

சுவாபி நகரில் அவாமி தேசிய கட்சி சார்பில் நடைபெற்ற பேரணியின் மீது நடத்தப்பட்ட வெடிகுண்டுத் தாக்குதலில் 2 பேர் பலியாகினர். 5 பேர் படுகாயமடைந்தனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற தாக்குதல்களில் மட்டும் 11 பேர் பலியாகினர். 27 பேர் படுகாயமடைந்தனர் என கணக்கிடப்பட்டுள்ளது. (அ-2)

# முபாரக்கை விடுவிக்க நீதிமன்றம் மறுப்பு



(கெய்ரோ)

எகிப்து முன்னாள் ஜனாதிபதி முபாரக்கை விடுவிக்க நீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது.

அவர் மீதான ஊழல் வழக்குகள் தொடர்பான மறுவிசாரணை கெய்ரோ குற்றவியல் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

சுமார் 2 ஆண்டு காலமாக சிறையில் தண்டனை அனுபவித்து வரும் முபாரக்கிற்கு பலமுறை உடல் நலக் குறைவு ஏற்பட்டது. இதன் அடிப்படையில் தன்னை விடுவிக்க வேண்டும் என்று அவர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்தார்.

குறித்த மனு நேற்று முன்தினம் தள்ளுபடி செய்யப்பட்டது. விசாரணை முடிவடையும் வரை இன்னும் 15 நாட்களுக்கு முபாரக் சிறையில்தான் இருக்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார். (அ-2)



லாகூர் சிறையில் சரப்ஜித்சிங் தாக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து பீகார் மாநிலம் பாட்னாவில் பாரதீய ஜனதாவினர் பாகிஸ்தான் நாட்டு ஜனாதிபதி அசாத் சாலி சர்தாரியின் படத்தை எரித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதைப் படத்தில் காணலாம்.

## அமைதியை ஏற்படுத்த இந்தியாவுடன் இணைவோம்

எல்லையில் அமைதியை நிலைநாட்டவும் வேறுபாடுகளைக் களையவும் இந்தியாவுடன் இணைந்து செயற்படத் தயாராக உள்ளதாக சீனா அறிவித்துள்ளது.

காஷ்மீரின் லடாக் பகுதியில் சீன உடுருவல் பிரச்சினையை பெரிதுபடுத்த வேண்டாம். அதை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க திட்டமுள்ளது என இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் கூறியிருந்தார்.

இந்நிலையில் சீன வெளியுறவுத்துறை அமைச்சகம் நேற்று முன்தினம் விடுத்துள்ள அறிக்கையில்,

பிரதமர் மன்மோகன்சிங் விடுத்துள்ள அறிக்கையை கவனத்தில் கொண்டுள்ளோம். இந்தியா-சீனா உறவு ஆரோக்கியமாக வளரவும் இருநாடுகளும் ஒத்துழைப்புடன் செயற்படும் முயற்சியாக எல்லையில் அமைதியை கடைப்பிடிக்கவும் வேறுபாடுகளை களையவும் இந்தியாவுடன் இணைந்து செயற்பட சீனா தயாராக இருக்கிறது என்றார். (அ-2)

# சாதனை படைக்க முயன்றவரின் உயிர் அந்தரத்தில் பிரிந்தது

கின்னஸ் சாதனை படைத்த ஒருவர் மலையிலிருந்து இன்னொரு மலைக்கு கம்பியில் தொங்கியபடி செல்லும் சாகச நிகழ்ச்சியில் ஈடுபட்டபோது திடீரென மரணமடைந்தார்.

இதைப்பார்த்து செய்வதறியாது நின்ற பார்வையாளர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

மேற்கு வங்க மாநிலம் சிலிகுரி மிலான் பாலியைச் சேர்ந்தவர் சைலேந்திரநாத் (வயது 45). பொலிஸ் சாரதியாகப் பணி புரியும் இவர் சாகசம் செய்வதில் வல்லவர்.

டார்ஜிலிங்கில் புகையிரதத்தை தனிநபராக தலை முடியால் இழுத்து உலக சாதனை புத்தகமான கின்னஸில் இடம் பிடித்தவர். தன் சாகச பயணத்தின் அடுத்த கட்டமாக டார்ஜிலிங் மாவட்டத்தில் டீஸ்ரா ஆற்றில் இரு மலைகளை கம்பி மூலம் தலைமுடியில் தொங்கியபடி கடக்கும் சாகச பயணத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் ஈடுபட்டார்.

ஒரு மலையில் இருந்து மற்றொரு மலைக்கு கம்பியில் தொங்கியபடி அவர் சென்று கொண்டிருந்தபோது திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டு வலியால் துடித்தார். அவர் சாகசம் செய்வதாக நினைத்த பார்வையாளர்கள் கைதட்டி பாராட்டினர்.

ஆனால், அந்தரத்திலேயே அவர் உயிர் பிரிந்தது. பின்னர் தான் அங்கிருந்தவர்களுக்கு உண்மை தெரிந்தது. மீட்புக் குழுவினர் வந்து அவரை மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

அவரை பரிசோதித்த மருத்துவர்கள் மாரடைப்பால் அவர் இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

இச்சம்பவம் சிலிகுரி மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (அ-2)

# மெக்சிக்கோ சிறையில் கலவரம் வெடித்தது

## 11 பேர் பலியாகினர்

(மெக்சிக்கோ)

மெக்சிக்கோ நாட்டின் சான் லூயி போடோசி மாநிலத்தில் உள்ள லா பிலா சிறைச்சாலையில் கைதிகளின் இரு பிரிவினரிடையே ஏற்பட்ட பயங்கர மோதலில் 11 பேர் பலியாகியுள்ளதுடன் 12 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

வீட்டு உபயோகத்திற்காக செய்யப்பட கத்திகளாலும் ஆயுதங்களாலுமே ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டனர் என அரசாங்கத் தரப்பில் கூறப்படுகின்றது.

இந்நிலையில் பொலிஸார் தற்போது நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சிறைச்சாலைகளில் அளவுக்கு அதிகமான கைதிகள் இருப்பதால் போதை மருந்துக் கும்பல்களிடம் இதுபோன்ற சண்டை சச்சரவுகள் அடிக்கடி எழுகின்றன என்றும் சில சிறைச்சாலைகள் இத்தகைய கைதிகள் கும்பல்களாலேயே நிர்வகிக்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற குறித்த மோதலிலேயே 11 பேர் கொல்லப்பட்டதுடன் 12 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். (அ-5)

## விபத்தில் உயிர் தப்பினார் ஜப்பான் பிரதமர் ஷின்ஷோ

கார் விபத்தில் ஜப்பான் பிரதமர் அபே அதிர்ஷ்டவசமாக காயம் ஏதுமின்றி உயிர் தப்பியுள்ளார்.

ஜப்பான் பிரதமர் ஷின்ஷோ அபே நேற்று முன்தினம் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக காரில் புறப்பட்டுச் சென்றார்.

அவருடன் 5 கார்களும் பின் தொடர்ந்து சென்றன. இந்நிலையில் டோல்கேட் அருகே செல்லும் போது பொலிஸ் கார் திடீரென நிறுத்தப்பட்டுள்ளதால் பின்னால் வந்த பிரதமர் கார் சடுதியாக பிரேக் அடித்ததில் அது பின்புறமாக திரும்பி நின்றது.

இதில் காயங்கள் எதுவுமின்றி பிரதமர் உயிர் தப்பியுள்ளார். காரின் முகப்பில் சேதம் ஏற்பட்டது.

பின்னால் வந்த மற்றைய காரில் நிருபர்களும் இருந்ததாக பொலிஸ் வட்டார செய்தித் தொடர்பாளர் தகவல் தெரிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசாரி விடை கொடுத்தாலும்
பூசாரி விடை கொடுக்க மாட்டான்.
-தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இந்திய வீட்டுத் திட்டம் கிடைத்தவன் படும்பாடு பாராயோ பரம்பொருளே!

படித்தவன் கருத்தெல்லாம் சபையேறுமோ! பணம் படைத்தவன் கருத்தானால் சபை மீறுமோ! என்பது கவியரசு கண்ணதாசனின் பாடல் வரிகள்.

இந்தப் பாடல் வரிகளை ஆழமாகச் சிந்தித்தால், பொருளாதார பலத்தின் தாற்பரியம் தெரியவரும்.

பணபலம் இல்லாதவன் எத்துணை துன்பங்களை அனுபவிக்கின்றான் என்பதும், பண பலத்தின் முன் அறிவியல் கருத்துக்கள்கூட தோற்றுவிடுகின்றன என்ற உண்மைகளும் உணர்த்தப்படுகின்றன.

இந்த நிலைமை ஈழத்தமிழர்களுக்கு மிகவும் பொருத்துடையது.

வன்னி யுத்தமும் அதற்கு முந்திய இடப்பெயர்வுகளும் சேர்ந்து தமிழ் மக்களின் பொருளாதாரப் பலத்தை நிர்மூலமாக்கிவிட குடியிருந்த வீடு முதல் சோறு சமைத்த பாத்திரம் வரை எதுவும் இல்லை என்ற வெறுவிலித்தனத்தை எங்களிடம் ஏற்படுத்தி விட்டன.

இதன் காரணமாக மற்றவர்களிடம் கையேந்தும் பரிதாப நிலை தோன்றியது. யுத்தத்தால் வீடிழந்தவர்களில் ஒரு பகுதியினருக்கு இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் வீடு கட்டிக் கொடுப்பதற்கான பதிவுகளும் படமெடுப்புக்களும் நடந்தேறுகின்றன.

இதில் இந்திய வீட்டுத் திட்டம் கிடைக்க வேண்டுமாயின் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாக நின்று புகைப்படம் எடுப்பது முதல், வீட்டுத் திட்டத்தை வழங்குவதற்காக அதிகாரிகள் வருகின்றபோது வீட்டு அங்கத்தவர்கள் அனைவரும் உரிய இடத்தில் இருக்க வேண்டும் என்ற கட்டுப்பாடுகள் விடுக்கப்படுகின்றன.

வீட்டுத் திட்டத்தைப் பார்வையிட அதிகாரிகள் எப்போது வருவார்கள்? எந்த நாளில் எந்த நேரத்தில் வருவார்கள் என்ற முன்னறிவித்தல்கள் எதுவும் கிடையாது.

இதன் காரணமாக குடும்பத் தலைவர்கள் தொழில் முயற்சிகளுக்கு செல்ல முடியாமல் - நாளாந்த கூலி வேலைகளுக்குப் போகமுடியாமல் ஜீவனோபாயத்திற்கான வரும்படியையும் இழந்து போகின்றனர்.

இந்திய வீட்டுத் திட்டத்தைப் பெறுவதற்காக சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள், அதற்கான அலைச்சல்கள் என்ற துன்பத்துக்கு அப்பால், அந்த ஏழை மக்களை படுத்தும்பாடு கண்டு கலங்காமல் இருக்க முடியாது - முடியவில்லை.

ஏன்தான் இப்படிச் செய்கிறார்கள்? ஒரு குடும்பத் தலைவன் வேலைக்குச் செல்லாது இருந்தால் அதுவும் நாளாந்தம் கிடைக்கின்ற கூலியைக் கொண்டு சீவனோபாயம் நடத்தும் குடும்பத் தலைவன் வேலைக்குச் செல்லாமல் இருந்தால் அந்த வீடு பட்டினியால் வாடும் என்ற உண்மையைக்கூட, புரிந்து கொள்ள முடியாத நிலையிலேயே நிலைமையுள்ளது.

ஆக, இந்திய வீட்டுத் திட்டம் கிடைத்தது கெடுகாலத்திக்கென்று நினைக்கும் அளவில் நிலைமையை உருவாக்கிவிட்டால், பின்னர் வீட்டுத் திட்டத்தால் எந்தப் பயனும் இருக்காது.

ஆகையால் பொறுப்பான அதிகாரிகள் ஏழை மக்களை வெருட்டாமல், அவர்களை பயமுறுத்தாமல், பட்டினி போடாமல் அவர்கள் வீடு கட்டி நிம்மதியாக வாழ வழிசெய்ய வேண்டும் என்பது இறைவன் பெயரால் விடுக்கப்படும் கோரிக்கை.

# முன்னறிவிப்புக்கள் இன்றி குடிநீர் தடை

## மக்கள்விசனம்

யாழ்.நகர்ப்பகுதியிலுள்ள சில இடங்களில் முன்னறிவிப்பின்றி குடிநீர் விநியோகம் தடை செய்யப்படுவதனால் பொதுமக்கள் பெரும் சிரமப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. குறிப்பாக ஆஸ்பத்திரி வீதி மற்றும் ஸ்ரான்லி வீதிகளில் இவ்வாறு முன்னறிவித்தலின்றி குடிநீர்த் தடையினால் குடும்பங்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் ஆகியன பெரிதும் சிரமப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

குடிநீர் விநியோகம் மிகக்குறுகிய நேரப் பகுதிக்குள் இடம்பெறுகின்ற போதிலும் பெரும்பாலும் காலை நேரத்தில் இடம்பெறும் குடி நீர்த்தடையினால் பாடசாலை செல்லும் மாணவர்கள் மற்றும் அலுவலகங்களுக்குவேலைக்கு செல்வோர் என அனைவரும் பாதிப்படைகின்றனர்.

இவ்வாறு குடி நீர்த்தடை ஏற்படுவதற்கு பல காரணங்கள் இருக்கலாம். எனினும் கூடியவரையில் முன்னறி விப்போடு குடி நீர்த்தடையை அமுல் படுத்துவதால் பொது மக்கள் தேவையற்ற சிரமத்தினை தவிர்த்துக் கொள்ள முடியும்.

இதேவேளை, குடிநீர் விநியோகத்தினை சீராக்கி தருமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-4)

# அரசியல் சக்தியைவிடவும் எரிசக்திக்கு அதிகளவு பலம்

## ஆட்சி கவிழக் கூடும் என்கிறார் சம்பிக்க

நாட்டில் எரிசக்தி தொடர்பில் உரிய கொள்கைகள் பின்பற்றப்படாவிட்டால் அரசாங்கம் கவிழக் கூடுமென முன்னாள் மின்வலு எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித் துள்ளார்.

கொழும்பு தேசிய நூலகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரை யாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

அரசியல் சக்தியை விடவும், எரிசக்திக்கு அதிகளவு பலம் காணப்படுகின்றது.

எந்தவொரு நாடும் எரிசக்தி மூலமே இலாபமடைகின்றது. இவ்வாறு இலாபம் ஈட்டப்படாவிட்டால் அரசாங்கங்கள் கவிழக் கூடும். சுரங்கக்கரி காரணமாகவே இங்கிலாந்து ஸ்திரமான நிலையை அடைந்தது.

பலநாடுகளில் போர் மூழ்வதற்கும் எரிசக்தி வளப் பிரச்சினை ஏதுவாக அமைந்துள்ளது.

கோஷங்களை எழுப்புவதன் மூலம் பிரச்சினைக்கு தீர்வுகாணமுடியாது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## தொழிலாளர் தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொழிலாளர் ஒத்துழைப்புக் குழுவினரால் மேதினம் நாளை புதன்கிழமை மாலை 4 மணிக்கு D.M.S.தனியார் கல்வி நிறுவனத்தில் (வேம்படி மகளிர் கல்லூரிக்கு அண்மையில்) சொ.சிவபாலன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் போது தொழிலாளர் அமைப்புக்களைச் சார்ந்தோர் உரையாற்றவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# டெங்கு ஒழிப்பிற்கு ஒதுக்கப்பட்ட 300 மில்லியன் ரூபா எங்கே?

## சுகாதார தொழிற்சங்கங்கள் கேள்வி

கடந்த வருடம் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி முழுவதும் குறித்த தேவைக்காக உரிய வகையில் பயன்படுத்தப்படவில்லை என குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டுள்ளது.

அரசினால் கடந்த வருடம் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக 300 மில்லியன் ரூபா நிதி பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. எனினும் கடந்த ஆண்டு டெங்கு ஒழிப்பிற்காக 27 மில்லியன் ரூபா மட்டுமே செலவிடப்பட்டுள் ளதாக தெரியவந்துள்ளது.

இந்நிலையில் கடந்த வருடம் 44 ஆயிரம் பேர் டெங்கு நோய்த் தாக்கத்திற்கு உட்பட்டி ருந்த அதேவேளை 225 பேர் டெங்கு நோய்க்கு பலியாகினர்.

இவ்வாறு அதிகளவான டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்தமைக்கு டெங்கு ஒழிப்பிற் காக ஒதுக்கப்பட்ட நிதியை உரிய வகையில் பயன்படுத்தாமையே காரணம் என சுகாதார தொழிற்சங்கள் தெரிவித்துள்ளன.

இந்த வருடத்தின் இது வரையான காலப் பகுதிக்குள் 10 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 15 பேர் டெங்கு காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளனர்.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகள் எவரும் இது வரை குறித்த வேலைத்திட்டம் தொடர்பான அறிக்கைகள் எதனையும் அரசிடம் முன்வைக்கவில்லை எனத் தெரிய வந்துள்ளது. (அ-2)

# இறக்குமதியாகும் பாஸ்மதி அரிசி தரம் குறைந்ததாகும்

## *விவசாய அமைச்சர் தெரிவிப்பு*

இலங்கைக்கு இறக்குமதியாகும் பாஸ்மதி அரிசி தரமானதாக இல்லையென்பது பாஸ்மதி அரிசி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளில் இரு ந்து தெரிய வந்துள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

சில அரிசி மாதிரிகளில் பாஸ்மதி அரிசி சொற்பளவிலேயே உள்ளது. பாஸ்மதி அரி சிக்கு இடையில் பாஸ்மதி அரிசி போன்று காட்சி தரும் நீளமான மெல்லிய தன்மை கொண்ட வேறு வகை அரிசியும் அடங்கி யுள்ளமையும் ஆராய்ச்சிகளில் இருந்து தெரியவந்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

எமது அரிசியில் நாம் தன்னிறைவைப் பெற்ற போதும் உயரிய அரிசி உல்லாசக் கைத்தொழிலுக்காக வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகிறது.

உலகில் பிரசித்தி பெற்ற விலை கூடிய பாஸ்மதி அரிசி இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் உற்பத்தியாகிறது.

பாஸ்மதி அரிசி விசேட கால நிலைக்கு மத்தியில் உற்பத்தி செய்யப்பட வேண்டும். பகல் காலத்தில் உஷ்ணமும் இரவு நேரத்தில் குளிர்கால நிலையும் இதற்கு அவசியமாகும். பாஸ்மதி நல்ல மணம் கொண்ட அரிசியாகும். சமைத்த பின் அரிசியின் நீளம் அதிகரிக்கி றது.

பாஸ்மதி என்று கூறி வேறு அரிசியை இறக்குமதி செய்வது விவசாயிகளுக்குச் செய்யும் அநீதியாகும். விவசாயிக்கு மட்டுமின்றி பாவனையாளர்களுக்கும் செய்யும் அநீதியுமாகும்.

இந்த அரிசியின் இறக்குமதி தொடர்பாக கண்டறிவதற்கு அதிகாரிகள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

எவருக்கும் அநீதி நேராத வண்ணம் இது தொடர்பாக ஆராய்ச்சி செய்வதற்கு விவசாய அமைச்சு சுங்கப் பகுதியுடன் சேர்ந்து திட்டம் ஒன்றை அமுலாக்கும் என்றார். (அ-2)

## மகா கும்பாபிஷேகம்

மீசாலை கிழக்கு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மஹாகும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 7 மணி தொடக்கம் உள்ள சுப வேளையில் நடைபெறவுள்ளது.

இதன் முன் நிகழ்வாக இன்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு பக்தி பூர்வமாக நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேக தினத்தன்று அருளாசியுரை கலாபூஷணம் சிவஸ்ரீ சி. சிதம்பர நாதக் குருக்கள் மற்றும் அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபை தலைவர் சிவஸ்ரீ க. கிருபானந்த குருக்களும் ஆற்றவுள்ளனர். (அ-29)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## உலகை மாற்றும் ஒற்றைச் சொல்



✦நீங்கள் எல்லையில்லாத வலிமை பெற்றவர்கள். உங்களின் உண்மை இயல்போடு ஒப்பிடும்போது காலமும் இடமும்கூட ஒரு பொருட்டல்ல.

✦ இல்லை என்று ஒருபோதும் சொல்லாதீர்கள். என்னால் இயலாது என்று எதையும் மறுக்காதீர்கள். எதையும் உங்களால் சாதிக்கமுடியும்.

✦பலவீனத்திற்கு பரிகாரம் வலிமையைக் குறித்துச் சிந்திப்பதே.

✦உபநிடதங்களில் இருந்து கிளம்பி அறியாமைக்குவியல் மீது குண்டைப்போல வெடிக்கும் சொல் அஞ்சாமை என்பதுதான். இந்த ஒற்றைச் சொல்லில்தான் வேதத்தின் சாரம் அடங்கியிருக்கிறது. இந்தச் சொல்தான் உலகையே மாற்றியமைக்கும்

✦ கடுமையாக உழைக்க முன்வந்தால் குறிக்கோளை எளிதில் அடையலாம்.

✦மனதில் வலிமை இருந்தால் மகிழ்ச்சியும் வளமும் நிறைந்த நிரந்தரமான வாழ்வு கிடைக்கும். பலவீனம் இருந்தால் இடையறாத துன்பமும் சித்திரவதையுமாக வாழ்வு அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்ச்சைக்குரிய ஆட்டமிழப்பால்

# ரசிகர்கள் கொந்தளிப்பு! கோலி கொதிப்பு!!




மூன்றாவது நடுவரை அணுகி கோலி பெற்றுக்கொண்ட ரன் அவுட்டினால் மும்பை ரசிகர்கள் அதிருப்தியடைந்ததுடன் கோலிக்கு எதிர்ப்பும் தெரிவித்தனர்.

மும்பையில் நடைபெற்ற மும்பை இந்தியன்ஸுக்கு எதிரான ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் 58 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் தோல்வி கண்டது. மும்பை துடுப்பாட்ட வீரர் அம்பட்டி ராயுடு, கோலியால் ரன் அவுட் செய்யப்பட்டார்.

அப்போது பந்துவீசிய வினய் குமாரும், அம்பட்டி ராயுடுவும் நேருக்கு நேர் மோதிக் கொண்டனர். இதனால் நிலைகுலைந்த ராயுடு ரன் அவுட் ஆனார்.

இந்நிலையில் 3ஆவது நடுவரை அணுகியே கோலி இந்த ரன் அவுட்டை பெற்றார். இதனால் அதிருப்தியடைந்த மும்பை ரசிகர்கள் கோலிக்கு எதிர்ப்புத் தெரிவித்து குரல் எழுப்பியதோடு, அவர் ஏமாற்றிவிட்டதாகவும் கூறினர். போட்டி முடிந்த பின்பு நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்ச்சியின்போதும் மும்பை ரசிகர்கள், கோலிக்கு எதிர்ப்புத் தெரிவித்து குரல் எழுப்பி கொந்தளித்தனர்.

இதனால் கோபமடைந்த கோலி கருத்துவெளியிடுகையில், கடந்த காலங்களில் சில வீரர்கள் இதுபோன்ற பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

ஐபிஎல் போட்டியின்போது ரசிகர்கள் ஏன் இந்தளவுக்கு கிளர்ச்சியடைகிறார்கள் என்று தெரியவில்லை. தங்களால் கிண்டல் செய்யப்படும் வீரர்கள் தங்கள் நாட்டுக்காகவும் (இந்தியா) விளையாடுகிறார்கள் என்பதை ரசிகர்கள் மறந்துவிட்டனர். ரசிகர்களின் இதுபோன்ற செயல்கள் வீரர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தும். நாஞ் மீண்டும் இந்தியாவுக்காக விளையாடும்போது அவர்கள் என்னை உற்சாகப்படுத்தப் போகிறார்கள். ஆனால் அது சரியானதாக இருக்காது.

வீரர்கள் எப்படி அங்கீகரிக்கப்படுகிறார்கள் என்பதை பெங்களூருக்கு வந்து பாருங்கள். அங்கு யார் வென்றாலும், தோற்றாலும் எல்லா அணிகளின் தலைவர்களும், இந்திய வீரர்களும் ரசிகர்களால் உற்சாகப்படுத்தப்படுகிறார்கள்.

நல்ல கிரிக்கெட் போட்டியை ரசிகர்கள் அங்கீகரிக்க வேண்டும். இங்கு மட்டும் ரசிகர்கள் ஏன் இவ்வளவு ஆக்ரோஷமாக இருக்கிறார்கள், ஏனைய அணிகளை ஏன் வெறுக்கிறார்கள் என்று தெரியவில்லை என்றார்.

பெங்களூர் மைதானத்தில் ஒவ்வொரு அணி தலைவர் இந்திய வீரர்களை ரசிகர்கள் உற்சாக மூட்டுவார்கள். ஆனால் இங்கு அப்படி அல்ல. ஐ.பி.எல். போட்டியோடு உலகம் முடிந்து விடவில்லை. நான் இந்திய அணிக்காகவும் விளையாடுவேன் என்பதை ரசிகர்கள் மறந்துவிட்டார்கள்.

மும்பை அணி எங்களை எல்லா வழியிலும் அவுட் செய்துவிட்டது. முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் 4 பேரும் (கெய்ல், டில்சான், கோலி, டிவில்லியர்ஸ்) ஒவ்வொரு ஆட்டத்திலும் அதிரடியாக விளையாட முடியாது. இனிவரும் ஆட்டத்தில் சிறப்பாக ஆடுவோம்.

இவ்வாறு காட்டமாகக் கூறினார் பெங்களூர் அணித் தலைவர் விராட் கோலி.

## சூதாட்டம்; 4 பேர் கைது!

ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி தொடர்பாக சூதாட்டத்தில் ஈடுபட்டதாக 4 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

சூதாட்டத்தில் ஈடுபட்ட அந்த நபர்களிடமிருந்து, ரூபா 1.03 லட்சம் பணம், ஒரு தொலைக்காட்சி மற்றும் 7 கைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

## இன்றைய ஆட்டம்

CHENNAI SUPER KINGS Vs PUNE WARRIORS INDIA

பி.ப 8 மணி

## 2014 ஆம் ஆண்டு உ.உ.போட்டிக்காக புதுப்பொலிவுடன் மரக்கானா அரங்கு



பிரேசில் நாட்டின் ரியோ டி ஜெனிரோ நகரில் உள்ள புகழ்பெற்ற மரக்கானா விளையாட்டரங்கம், கடந்த மூன்று ஆண்டுகளாக மூடப்பட்டிருந்தது. பராமரிப்பு வேலைகள், புனரமைப்பு பணிகள் முடிந்து 2014 ஆம் ஆண்டின் உலகக் கிண்ண உதைப்பந்தாட்டப்போட்டிக்காக இந்த அரங்கு மீண்டும் புதுப்பொலிவுடன் திறக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட காலகட்டத்தை விட நான்கு மாதங்கள் அதிகம் எடுத்துக்கொண்ட இந்தக் கட்டட வேலைகள், காலதாமதம், நிதி மற்றும் எதிர்காலத்தில் தனியார் மயமாக்குவது போன்ற பல பிரச்சினைகளுக்கு மத்தியில் திறக்கப்பட்டுள்ளது. சில பணிகள் இன்னும் முழுமையடையாத நிலையில், இருக்கைகள் பொருத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. விளையாட்டு மைதானத்தை ஒட்டியுள்ள நடைபாதை போடப்பட்டுக் கொண்டிருக்கின்றது. மொத்தம் 80,000 இருக்கைகள் கொண்ட இந்த மைதானத்தில், மூன்றில் இரு பகுதி இருக்கைகள் தற்போது பொருத்தப்பட்டுள்ளன.

## காலதாமதத்தால் டோனிக்கு அபராதம்!

ஐ.பி.எல். போட்டியில சென்னை சுப்பர் கிங்ஸ் - கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி மோதிய ஆட்டத்தில் ஆட்டத்தை முடிப்பதற்கு அதிக நேரம் எடுத்தார் என்ற குற்றச்சாட்டில் டோனிக்கு அபராதம்விதிக்கப்பட்டது.

20 ஓவர்கள் பந்து வீசி முடிப்பதற்காக அனுமதிக்கப்பட்ட நேரத்தில் சுப்பர் கிங்ஸ் அணி, 18 ஓவர்கள் மட்டுமே வீசியிருந்தது. இதற்காக டோனிக்கு அபராதம் விதிக்கப்பட்டதாக ஐ.பி.எல். அமைப்பு தனது அறிக்கையில் கூறியுள்ளது.

## டில்லிக்கு மாற்றம்

சென்னையில் நடைபெறவிருந்த ஐபிஎல் போட்டியின் இரு பிளே ஆஃப் சுற்று ஆட்டங்கள் டில்லிக்கு மாற்றப்பட்டுள்ளன.

தமிழகத்தில் இலங்கை வீரர்களை விளையாட அனுமதிக்கமாட்டோம் என்ற முடிவில் தமிழக அரசு உறுதியாக இருப்பதால், இப்போது பிளே ஆஃப் ஆட்டங்களை டில்லிக்கு மாற்றியுள்ளது ஐபிஎல் நிர்வாகம். சென்னையில் நடைபெறவிருந்த அதே திகதிகளில் (மே 21, 22) இந்த இரு ஆட்டங்களும் டில்லியில் நடைபெறுகின்றன.

இது தொடர்பாக ஐபிஎல் தலைவர் ராஜீவ் சுக்லா கூறுகையில், பிசிசிஐ தலைவர் சீனிவாசனுடன் கலந்தாலோசித்த பின்பே இந்த முடிவு எடுக்கப்பட்டது" என்றார்.

## சிலையில் தவறு

சாதனை வீரர் சச்சின் டெண்டுல்கரின் மெழுகு சிலை சமீபத்தில் அவுஸ்திரேலியாவின் சிட்னி மைதான நிர்வாகம் சார்பில் திறக்கப்பட்டது. இந்த சிலையில் கடந்த ஆண்டு இலங்கையில் நடைபெற்ற 20/20 உலக கிண்ண தொடர் ஜேசியுடன் சச்சின் காணப்பட்டார்.

2006ஆம் ஆண்டு தென்னாபிரிக்க போட்டியோடு சச்சின் 20/20 போட்டிகளில் இருந்து விலகிய நிலையில் உலகக் கிண்ண20/20ஜேசியுடன் சச்சின் சிலை எப்படி இருக்க முடியும் என்று சர்ச்சை கிளம்பியது.

இதுகுறித்து சச்சின் சிலை வைக்கப்பட்டுள்ள அருங்காட்சியக செய்தித் தொடர்பாளர் கூறுகையில், "கடந்த 20/20 உலக கிண்ணத் தொடரில் சச்சின் பங்கேற்கவே இல்லை என்பதுதான் உண்மை. சிலையில் தவறான ஜேசி அணிந்திருப்பது படைப்பில் ஏற்பட்ட தவறு.


இதற்காக வருந்துகிறோம். இதற்குப் பதிலாக 2011 உலக கிண்ணத் தொடரில் சச்சின் வீளையாடிய ஜேசி போன்று மாற்ற முயற்சித்து வருகிறோம்" என்று தெரிவித்துள்ளார்.

## நடால் சம்பியன்

பார்சிலோனா பகிரங்க டெனிஸ் தொடரின் சம்பியன் பட்டத்தை ஸ்பெய்னின் ரபெயல் நடால் வெற்றிகொண்டுள் ளார். கடந்த ஒன்பது ஆண்டுகளில் எட்டாவது முறையாக இந்த பட்டத்தை நடால் வெற்றிகொண்டுள்ளார். சக நாட்டு வீரரான நிக்கோலஸ் அல்மாக்ரோவை இரண்டுக்கு பூச்சியம் என்ற நேர் செட் கணக்கில் நடால் வெற்றிகொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்பையிடம் பணிந்தது பஞ்சாப்




கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணிக்கு எதிரான பரபரப்பான போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி 4 ஓட்டங்களால் வெற்றி பெற்றுக் கொண்டது.

6-வது ஐ.பி.எல்.தொடரின் 41-வது லீக் போட்டி மகராஷ்டிர மாநிலம் மும்பையில் நேற்று இரவு 8 மணியளவில் நடைபெற்றது.

இதில் உள்ளூர் அணியான மும்பை அணி, பஞ்சாப் அணியைச் சந்தித்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பை அணி முதலில் துடுப்பாட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவ்வணி, ரோகித் சர்மாவின் அபார அரைச் சதத்தின் உதவியுடன் 20 ஓவர்களின் நிறைவில் 3 விக்கெட்டுக்களை மாத்திரமே இழந்து 174 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பில் ரோகித் சர்மா 39 பந்துகளில் 79 ஓட்டங்களையும், ஆரம்பத் துடுப்பாட்ட வீரா டுவைன் ஸ்மித் 33 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பஞ்சாப் அணி சார்பில் பிரவீண்குமா ர், கோனி, சாவ்லா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

175 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண் டு துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணி 20 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களை யும் இழந்து 170 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக டேவிட் மில்லர் 34 பந்துகளில் 56 ஓ ட்டங்களையும், அணித்தலைவர் டேவிட் ஹசி 34 ஓட்டங்களை யு ம் எடுத்தனர்.

பந்துவீச்சில் மும்பை இந்தியன்ஸ் சார்பில் ஹர்பஜன் சிங் 3 விக்கெட்டுக்களையும், ஒஜா, குல்கர்னி, ஜோன்சன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக மும்பை இந்தியன்ஸ் அணியின் ரோகித் சர்மா தெரிவானார்.

# பெங்களூரை வீழ்த்தியது ராஜஸ்தான் றோயல்ஸ்

பெங்களூருவுக்கு எதிரான போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

6-வது ஐ.பி.எல்.தொடரின் 40-வது போட்டி ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் நேற்றுப் பிற்பகல் 4 மணியவில் நடைபெற்றது.

இதில் உள்ளூர் அணியான ராஜஸ்தான் றோயல்ஸ் அணி, பெங்களூரு றோயல் சலஞ்சர்ஸ் அணியைச் சந்தித்தது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜஸ்தான் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பாடக் களமிறங்கிய பெங்களூரு அணிக்கு கிறிஸ் ஹெய்ல் - அபினவ் முகுந்த ஜோடி அதிரடி ஆரம்பத்தைக் கொடுத்தது.

எனினும் இந்த அதிரடி ஆரம்பம் அணி 44 ஓட்டங்களை எடுத்திருந்த போது முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

இதில் கிறிஸ் ஹெய்ல் 16 பந்துகளில் 34 ஓட்டங்களை எடுத்திருந்தபோது வோட்சனின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

இதைத் தொடர்ந்து வந்த வீரர்களும் ஓரளவு ஓட்டங்களை எடுக்க அவ்வணி 20 ஓவர்களின் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 171 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பில் விராட் ஹோலி 32, ஹென்றிக்கஸ் 22, வினய் குமார் ஆட்டமிழக்காமல் 22 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் ராஜஸ்தான் அணி சார்பில் வோட்சன் 4 ஓவர்களில் 22 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

172 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ராஜஸ்தான் அணிக்கு ராவிட் - ரகானே ஜோடி ஆரம்பத்தை வழங்கியது.

ஆட்டத்தின் முதல் பந்தில் ராவிட் கொடுத்த பிடியை ஹோலி தவறவிட்டார். கடந்த சில ஆட்டங்களில் ஏமாற்றிய ரகானே இந்த ஆட்டத்திலும் 2 ஓட்டங்களை மட்டுமே எடுத்தார்.

2-வது விக்கெட்டுக்காக களத்தில் நின்ற ராவிட்டுடன் விக்கெட் காப்பாளர் சாம்சன் ஜோடி சேர்ந்தார்.

இந்த ஜோடி அணி 48 ஓட்டங்களை எடுத்திருந்த போது பிரிந்தது. இதில் ராவிட் 22 ஓட்டங்களை எடுத்தார்.

3-வது விக்கெட்டுக்காக சாம்சனுடன் வோட்சன் இணைந்தார். இருவரும் றோயல் சலஞ்சர்ஸ் பந்துவீச்சை விளாசித் தள்ளினார்கள். 14.2 ஓவர்களில் அணி 116 ஓட்டங்களை எடுத்திருந்த போது இந்த ஜோடி பிரிந்தது.

சாம்சன் 63 ஓ ட்டங்களை எடுத்திருந்த நிலையில் ராம்போலின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த ஹொட்ஜ், வோட்சனுடன் இணைந்து சிறப்பாக ஆடினார். எனினும் வோட்சன் அணி 18.3 ஓவர்களில் 162 ஓட்டங்களை எடுத்திருந்தபோது 41 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அதன் பின் ஆட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

9 பந்துகளில் 10 ஓட்டங்கள் தேவைப்பட்டன. 19 ஓவ்ரின் 4-வது பந்தில் ஹொட்ஜ் 2 ஓட்டங்கள் எடுத்தார், அடுத்த பந்தில் ஒரு ஓட்டம் எடுத்தார். 6 பந்தில் பின்னி ஒரு ஓட்டம் எடுக்க கடைசி ஓவரில் 6 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

வினய்குமார் அந்த ஓவரை வீசினார். முதல் பந்தில் பின்னி ஒரு ஓட்டம் எடுக்க 2-வது பந்தில் ஹொட்ஜ் கிளின் போல்டானார். இதனால் 4 பந்துகளில் 5 ஓட்டங்கள் தேவைப்பட்டன. 3 பந்தை எதிர்கொண்ட ஷா ஒரு ஓட்டத்தை எடுத்து இன்னொரு ஓட்டம் எடுக்க முயன்றபோது ரன் அவுட்டானார். 4 பந்தில் போல்க்னர் ஒரு ஓட்டம் எடுக்க இரண்டு பந்துகளில் 3 ஓட்டங்கள் தேவைப்பட்டன. 5-வது பந்தை எதிர்கொண்ட பின்னி அருமையாக பவுண்டரி அடித்தார்.

இதனால் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

9 ஆட்டங்களில் விளையாடியுள்ள ராஜஸ்தான் அணி 6-ல் வெற்றியையும், 3-ல் தோல்விகளையும் சந்தித்துள்ளது.

போட்டியின் நாயகனாக ராஜஸ்தான் அணியின் சாம்சன் தெரிவானார்.

## அகில இலங்கை ஆசிரியர்களுக்கான விளையாட்டுப் போட்டி

(பண்டாரவளை)

அகில இலங்கை ஆசிரியர்களுக்கான 2012ம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டிகள் பண்டாரவளை பொது விளையாட்டு மைதானத்தில் நேற்றும் நேற்று முன்தினமும் நடைபெற்றது. இதில் ஒன்பது மாகாணங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இப் போட்டியில் வடமாகாண ஆசிரியர்கள் 18 தங்கம் ,13 வெள்ளி, 10 வெண்கலப் பதக்கங்களையும் வென்றுள்ளனர்.

426 புள்ளிகளுடன் ஊவா மாகாணம் முதலாம் இடத்தினையும், 303 புள்ளிகளுடன் மத்திய மாகாணம் 2-ம் இடத்தினையும், 147 புள்ளிகளுடன வட மாகாணம் மூன்றாம் இடத்தினையும் பெற்றது.

## பதிவினை மேற்கொள்க

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பகுதியில் உயர் பாதுகாப்பு வலயத்திற்கு உட்பட்ட காணிகளின் உரிமையாளர்கள் தமது காணியின் உறுதிப் பிரதியை மல்லாகத்தில் அமைந்துள்ள வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தலைமையகத்தில் இன்று காலை 9.30 மணிக்கு பதிவினை மேற்கொள் ளுமாறு வலி வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.சுகிர்தன் தெரிவித்துள்ளார்.(செ-6)

## ஈழத்திற்கான அடுத்த...

ஏந்தி மே 12ஆம் திகதி அன்று காலை புறப்படுகின்றனர்.

இது தொடர்பாக தமிழீழ விடுதலைக்கான மாணவர் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

நீலகிரியில்புறப்பட்டு கோவை, திருப்பூர், ஈரோடு,சேலம், நாமக்கல், திருச்சி வழியாக தஞ்சைக்கும், கன்னியாகுமரியில் தொடங்கி நெல்லை, தூத்துக்குடி, ராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை வழியாக தஞ்சைக்கும், விருதுநகரில் தொடங்கி தேனி, மதுரை, திண்டுக்கல், கரூர், திருச்சி வழியாக தஞ்சைக்கும், சென்னையில் தொடங்கி திருவள்ளூர், காஞ்சி, விழுப்புரம், புதுச்சேரி, கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர் வழியாக தஞ்சைக்கும், தர்மபுரியில் தொடங்கி கிருஷ்ணகிரி, வேலூர், திருவண்ணாமலை, பெரம்பலூர், அரியலூர் வழியாக தஞ்சைக்குமாக 5 குழுக்கள் பயணிக்கின்றன.

மாணவர்களின் இந்த சுடர் பயணம் தஞ்சாவூரில் மே 17 ஆம் திகதி அன்று தஞ்சை முள்ளிவாய்க்கால் முற்றத்தில் சங்கமிக்கிறது. அவர்களுக்கு தமிழகம் முழுவதும் உள்ள உணர்வாளர்கள், பொதுமக்கள், வணிகர்கள் உள்ளிட்ட தமிழர் ஆதரவு அமைப்புக்கள் அனைவரும் திரளான வரவேற்பு வழங்கிட இருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சென்னை கருத்தரங்கம்**

இதனிடையே தமிழீழ ஆதரவு மாணவர் அமைப்பு சார்பில் கருத்தரங்கம் சென்னையில் நடைபெற்றது. இதில் பேசிய பேராசிரியர் சுப.வீரபாண்டியன், இலங்கையில் ஈழத்தமிழர்களுக்காக செல்வா தலைமையில் அமைதி வழியில் நடந்தது முதல் கட்ட போராட்டம்.

அடுத்து பிரபாகரன் தலைமையில் ஆயுத வழி போராட்டம் நடைபெற்றது. எப்படி அமைதி வழி போராட்டத்தில் ஒரு பின்னடைவு ஏற்பட்டதோ? அதே மாதிரி ஆயுதவழி போராட்டத்திலும் ஒரு பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது.

பின்னடைவு ஏற்பட்டதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். அதற்காக நாம் வெட்கப் படக்கூடாது.வீழ்வது தவறல்ல வீழ்ந்தே கிடப்பது தான் தவறு. நாம் மீண்டும் எழுவோம். இப்போது நடப்பது 3-வது கட்ட போராட்டம்.

இலங்கை ஜனாதிபதிக்கும் அவரது கூட்டாளிகளுக்கும் தண்டனை வாங்கி கொடுப்பதும் ஈழத்திற்காக பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்பதும் மூன்றாவது கட்டப் போராட்டம். இந்த சிக்கலை உலக நாடுகளுக்கு கொண்டு சென்று அதன் மூலமாக வெற்றியைப் பெறுவோம் என்றார். (செ-1)

# மரண அறிவித்தல்

## பாலகிருஷ்ணன் புனிதம்மா



வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும், ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும், நாவற்குழி புதிய குடியேற்றத் திட்டத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பாலகிருஷ்ணன் புனிதம்மா 29.04.2013 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் சிற்ப ஆசாரியார் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தர்மலிங்கம்-அன்னம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லையா-அன்னபூரணம் அவர்களின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அருளானந்தம் மற்றும் துரைராஜா, கேதீஸ்வரன், வடிவேல் ஆகியோரின் அன்புச் சகோதரியும், வரதராசா, காலஞ்சென்ற கமலாம்பாள், நாகரத்தினம், ரெங்கநாதன் ஆகியோரின் மைத்துனியும், தணிகாசலம்(நந்தன்), காலஞ்சென்ற சிவானந்தம், மீனலோசனி, ஜானகி, கமலநாதன், ஜமுனா, உஷா, வத்சலா ஆகியோரின் அன்புத் தாயாரும், சக்திவேல், ராஜ்குமார், தயாநிதி, பரமேஸ்வரன், தங்கராசா, நொயில்பெரேரா ஆகியோரின் அன்பு மாமியும், விஜித்திரன், விஜித்திரா, கார்த்திகா, சுகன்யா, கிருஷ்ணப்பிரியா, பிரதீபா, யசிந்தன், சக்தி, சயந்தன், சிந்துஜன் , பதுசன் பாலகணன், பாலகீதனன், ஷாமினி, பவன், பவானி ஆகியோரின் பேர்த்தியும், அருணன், ஆருஷ், விஸ்மயா, ஹரணி, சாயிகிரீஷ் ஆகியோரின் பூட்டியுமாவார்.

*01.05.2013* அன்று அன்னாரின் இல்லத்தில் நண்பகல் 11 மணியளவில் ஈமக்கிரியைகள் இடம்பெற்று பூதவுடல் கைதடி இந்து மயானத்திற்கு நல்லடக்கத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**புதிய குடியேற்றத் திட்டம்,**
**ஜயனார் வீதி, நாவற்குழி, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(2496)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வுகள் பொங்கிய...

சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் தமது காணிகளை விடுவிக்கக் கோரி இந்தக் கண்டன பேராட்டத்தில் பங்கு கொண்டிருந்ததோடு அரசாங்கத்திற்கு எதிராகவும் இராணுவத்திற்கு எதிராகவும் சுலோகங்களைத் தாங்கியவாறு பொங்கி எழுந்திருந்தனர்.

வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்கு ஆகிய பகுதிகளில் உள்ள தமிழர்களுக்குச் சொந்தமான சுமார் 6 ஆயிரத்து 381 ஏக்கர் பூர்வீக காணிகளை இராணுவ தேவைக்காக சுவீகரிப்பதற்கான அறிவித்தல்கள் ஒட்டப்பட்டதை எதிர்த்து நேற்று இந்த கண்டன போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வலி வடக்கு பிரதேச சபை, வலி வடக்கு மீள்குடியேற்றக்குழு என்பவற்றின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இந்த கண்டன ஆர்ப்பாட்ட போராட்டத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது பூரண ஆதரவை வழங்கியிருந்ததோடு அக் கட்சியின் பொதுச் செயலாளர் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் உள்ளிட்டவர்களும், அக் கட்சியின் பிரதேச சபை, நகரசபை தவிசாளர்கள், உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இது தவிர தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் பொதுமக்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த கண்டனப் போராட்டம் காலை 7 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை மிகவும் அமைதியான முறையில் இடம்பெற்றதோடு முட்களிற்குள்ளும், கற்களுக்குள்ளும் அமர்ந்தபடி எதிர்ப்பு சுலோகங்களைத் தாங்கியவாறு மக்கள்பிரதிநிதிகளும், மக்களும் அமைந்திருந்தனர். இதன்பின்பு ஒலி பொருக்கியூடாக மக்கள் பிரதிநிதிகள் கோஷங்களை தெரிவித்தனர்.

இதன்போது ஆர்ப்பரித்த பொது மக்களும் உரத்த குரலில் இராணுவமே வெளியேறு, எமது நிலம் எமக்கு வேண்டும், எமது கடல் எமக்கு வேண்டும். அப்பு ஆச்சி ஆண்ட பூமியை இராணுவம் ஆள்வதா போன்ற கோஷங்களை மக்கள் பிரதிநிதிகளுடன் இணைந்து எழுப்பியிருந்தனர்.

இதனையடுத்து பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனின் வழிநடத்தலின் கீழ் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வீதியை முற்றுகையிட்டதோடு உயர் பாதுகாப்பு வலயத்தை நோக்கி பேரணியாக செல்ல முற்பட்டனர்.

இதனையடுத்து பொலிஸார் பேராட்டக்காரர்களை அடக்கு முற்பட்டபோதும் அது சாத்திப்படவில்லை. இதனையடுத்து கலகம் அடக்கும் பொலிஸார் பெருமளவில் கொண்டு வந்து குவிக்கப்பட்டனர்.

உயர்பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் மக்கள் நுழைந்தால் தாக்குவதற்கு தயாராக அவர்கள் நிறுத்தப்பட்டிருந்தனர்.

இதன்போது பொலிஸாருக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் பொது மக்களுக்கும் வாய்த்தாக்கம் ஏற்பட்ட தோடு பொலிஸார் விநயமாக கேட்டுக் கொண்டதற்கு இணங்க போராட்டக்காரர்கள் பிரதேச செயலகம் முன்பாக திரும்பிவந்தனர். (செ-6)

# ரணிலுடனான சந்...

பிரஜைகள் குழுவைச் சேர்ந்தவர்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மன்னாருக்கு விஜயம் செய்த எதிர்க் கட்சிதலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து அவரிடம் மன்னார் மாவட்ட மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து முறையிட்டிருந்தார்கள்.

பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டின் பேரில் மன்னாரில் காணாமல் போனவர்களின் உறவினர்களும் தமது குறைகளை அங்கு முன்வைத்திருக்கிறார்கள்.

அது குறித்து பிரஜைகள் குழுவின் தலைவரான் அருட்தந்தை ஈ.செபமாலை அவர்களிடம் கேட்டபோது தாம் காணிகள் பிரச்சினைகள் தொடர்பில் எதிர்க் கட்சிதலைவரிடம் முறையிட்டதாகவும் காணாமல் போனவர்களின் குடும்பத்தினர் மன்னாரில் காணாமல் போன 472 பேரின் பட்டியலை அவரிடம் கொடுத்து அவைகுறித்து நாடாளுமன்றத்தில் பேசுமாறு எதிர்க்கட்சி தலைவரைக் கோரியதாகவும் கூறினார்.

ஆனால் எதிர்க்கட்சித் தலைவரோ அவை குறித்து எந்தவிதமான பதில் கருத்தும் கூறவில்லை என்றும் மாகாண சபைத் தேர்தல் போன்ற விடயங்கள் குறித்தே பேசியதாகவும் அவர் கூறினார்.

இதனால் தமது மாவட்ட மக்களுக்கு அவருடனான சந்திப்பினால் எந்த விதமான பலனும் கிடையாது என்றே தான் நம்பு வதாகவும் அவர் கூறினார். (செ-11)

# 'கைது செய்...

காணி சுவீகரிப்பிற்கு எதிராக நேற்று திங்கட்கிழமை தெல்லிப்பழை பிரதேச செயலகம் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போதே பொலிஸார் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

நேற்றுக்காலை 7 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை தெல்லிப்பழை பிரதேச செயலகம் முன்பாகபல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்று கூடியதுங்கள்எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது நாடாளுமன்ற உறுப்பினர்கள், மக்கள் திரண்டு வீதிக்குறுக்காக வந்து காங்கேசன்துறைவீதியூடாக உயர்பாதுகாப்பு வலயத்தை நோக்கிநடந்து சென்றனர்.

அங்குவந்தபொலிஸார் இவ்வாறு சட்ட விரோதமாக நடந்து சென்றால் கைது செய்வோம் என்று எச்சரிக்கை விடுத்தனர்.

இதற்குப் பதில் அளித்த சுரேஸ் எம்.பி. 'எம்மை கைது செய்ய முடியுமானால் கைது செய்யுங்கள்' என்று பதிலளித்தார்.

தொடர்ந்து வீதியில் மக்கள் ஒன்று கூடி அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தை முன்னெடுத்தனர்... (செ-6)


30.04.2013 அன்று

இரணைப்பாலை புனித பற்றிமா அன்னை ஆலய திருவிழாவும் விளையாட்டும் கலை நிகழ்வும்



காலம் 13.5.2013 : நேரம் 06.45 மணி திருநாள் திருப்பலி அன்று எமது அன்னையின் திருவிழாவை சிறப்பிக்கும் முகமாக S அன்ரனிஸ் விளையாட்டு கழகத்தால் நடத்தப்படும் மாபெரும் துவிச்சக்கர வண்டி ஓட்டம், கலை நிகழ்வுகளும் நடைபெறும்.

நிகழ்ச்சிகள்

1. துவிச்சக்கர வண்டி ஓட்டம் ஆண்கள் 60 Km நேரம் திருப்பலி முடிய.
2. துவிச்சக்கர வண்டி ஓட்டம் ஆண்கள் 18 வயதுக்குட்பட்டது நேரம் மாலை 3 மணி
3. மரதன் ஓட்டம் ஆண்கள் 10 Km நேரம் திருப்பலி முடிய.
4. மாலை 7 மணிக்கு இரட்ணம் இசைக்குழுவின் இன்னிசை கானம் இடம் பெறும்.

அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தொடர்புகளுக்கு :
தலைவர்-0773454583
செயலாளர்-0776320302
பொருளாளர்-0779688422

(சி-3134)



கண்ணீர் அஞ்சலி

வேலுப்பிள்ளை செல்வராசா



எமது நிறுவனத்தில் கட[...] யாற்றும் செல்வராசா செல்[...] குமாரின் அன்புத் தந்தை வேலுப்பிள்ளை செல்வரா[...] அவர்களின் மறைவின[...] துயருற்றிருக்கும் அன்னாரி[...] குடும்பத்தினருக்கு ஆழ்ந்[...] அனுதாபங்களைத் தெரிவி[...] பதுடன் அன்னாரின் ஆத்[...] சாந்தியடைய இறைவனை[...] பிரார்த்திக்கின்றோம்.

வலம்புரிக் குடும்ப[...]



O/L மட்டும் போதும்
கையில் 1 இலட்சம்

21 வயதிற்கு உட்பட்டவர்களிற்கு வெளிநாட்டி[...]
படித்துக் கொண்டே 1 இலட்சம் சம்பாதிக்கலா[...]
விண்ணப்ப முடிவு திகதி: 02.05.2013
ஆலோசனைக்கு Laptop (மடிக்கணனி)
இலவசம்.(நிபந்தனைகளுடன் )

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்[...]
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090
(சி-3144)



ALLIANCE FRANÇAISE DE JAFFN[...]

பிரெஞ்! French! பிரெஞ்! French!

பிரான்ஸ், கனடா முதலிய நாடுகளுக்கு செல்வோர், மாணவர்கள் மற்[...] மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் படிக்கலாம். Paris இல் உள்ள எ[...] தலைமை நிறுவனத்திலும் France இன் வேறு எந்த இடத்திலும் தொடர்[...] French படிப்பதற்கும் Embassy விடயங்களுக்கும் எமது நிறுவனத்தி[...] Certificate உதவுகின்றது. ஏனெனில் உலகில் பிரெஞ் கற்பிப்பத[...] France அரசாங்கம் அங்கிகரிக்கும் ஒரே நிறுவனம் "Alliance Francai[...] மட்டுமே.

இது ஓர் அரிய சந்தர்ப்பம்-உடன் பதிவு செய்யுங்கள்.

புதிய வகுப்புக்கான அனுமதிகள் 04.05.2013 வரை நீடிக்கப்பட்டுள்ளது

61, Kachchery-Nallur Road, Jaffna. T.P. 021 222 8093 (248[...]



Study - Visit - Wor[...] Visa

Canada, Japan, UK &
Schengen Countries

# Payed Work Placements
# Japan full time Salary 3Laks +
** Conditions Apply

Doha - Job Vacancie[...]

| | | | |
|---|---|---|---|
| # Helpers | 20 Nos | # Carpenter | 20 Nos |
| # Welders | 20 Nos | # Drivers | 20 Nos |
| # Plumbers | 20 Nos | # Masons | 20 Nos |

iCS Study Overseas
தொடர்புகளுக்கு
77, Clock Tower Road, Jaffna
021 7306000 , 077 3013060
www.icslanka.com



முக்கிய அறிவித்தல்

V.S.P நல்லெண்ணெய்

அன்பான V.S.P நல்லெண்ணெய் விற்பனையாளர்களுக்கும், பாவனையாளர்களுக்கும் தெரியப்படுத்துவது என்னவெனில், V.S.P என்று போலியான லேபில்களை பயன்படுத்தி நல்லெண்ணையாக வெளிவருகின்றன. எனவே நீங்கள் எமது தயாரிப்பான V.S.Pஐ இலகுவாக இனம்கண்டுகொள்ள பரிமளா ஸ்ரோர்ஸ், 26 A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன், உரிமையாளர் பொ. பாஸ்கரன் என்பவரின் பெயரும் அச்சிடப்பட்டுள்ளது.

ஆதலால் அன்பான விற்பனையாளர்களும், பாவனையாளர்களும் இதனை நன்கு கவனித்து கொள்வனவு செய்து கொள்ளவும் என்பதனை அன்புடன் அறியத்தருகின்றோம்.

பரிமளா ஸ்ரோர்ஸ்
26A, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்:பொ.பாஸ்கரன்
0212229165,
0212224135.

(சி-3136)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது